கலியுகத்தில்

# பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின்
# சிவ, சிவசக்தி, சக்தி
# அவதாரங்கள்





சாயி சரவணமுத்துவின் விளக்கப்படி

தொகுத்து எழுதியவர்

ஆசிரியர்

**திரு. சு. சிவதாஸ், Dip-in-Eng., Eng. Spl. Trd.**

(யா/கனகரத்தினம் ம. ம. வி.)


**1989**



பதிப்புரிமையாளரும் வெளியீட்டாளரும்:

சு. சிவதாஸ்,
260, ஏ. வி. றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 10-00

# அகவுரை

பல வருடங்களாக கடவுளின் அருளைப் பெற்றுவிட வேண்டும் என்று பெரிய அவா ஒன்று இருந்து வந்தது. உலக வாழ்க்கையில் உள்ள துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர இறையருள் இன்றியமையாதது என விசாரம்மூலம் அறிந்துகொண்டேன். சரியாக ஒருவருடம் இருக்கும். அப்போது சாயி சரவணமுத்து என்றும் பகவான் என்றும் அழைக்கப்படும் சாயி அடியார் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. சந்தித்து ஒரு மாதமளவில் நான் பல வருடங்களாக முயன்றுவந்த வேலை இடமாற்றம் கைகூடியது. சாயி சரவணமுத்து என்னைத் துரத்திப் பிடித்து வேலைமாற்ற விண்ணப்பத்தை எழுதுவித்துக் கொழும்புக்கு ஒரு அறிமுகக் கடிதத்தோடு அனுப்பி வைத்தார். "எல்லாம் சரி வரும், போய்விட்டு வந்து சொல்லும்" என்று உறுதிகூறி கொழும்புக்கு அனுப்பிவைத்தார். இசுறுபாயாவில் சாயியின் திருவிளையாடல் நடந்தது. உடனே அதிகாரி ஓடர் போட்டுவிட்டான். யா/கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்துக்கு மாற்றலாகி வந்தேன். இது எனது பழைய, கல்வி பயின்ற பாடசாலை. இது இவ்வாறு நிற்க, நான் தொடர்ந்தும் சாயி சரவணமுத்துவின் தெய்வீக முன்னிலையை விரும்பி, உபதேசங்களை விரும்பி தொடர்பு வைக்கலானேன். அவர் எனக்கு அளித்த அத்வைத மார்க்கத்தை அறிவளவில் புரிந்துகொண்டேன். அவருடைய விளக்கங்களையும் அவர் பகவான் சாயியைப்பற்றித் தந்த விளக்கங்களையும் மக்கள் பலரும் அறியவேண்டும் என்பதற்காக, சாயியின் திருவுள்ளம் எண்ணியதாற்போலும் இந்த நூல் இவ்வாறு வெளியாகின்றது. இதில் எத்தனையோ சொற்பிழை, பொருட்பிழை இருக்கலாம். அவற்றை எல்லாம் மன்னித்து பொருட்பிழை காணும்போது எமக்கு அறியத்தரும்படி வாசகர்களைப் பணிவுடன் கோருகின்றேன்.

முதலாம் அத்தியாயத்தில் சிவசக்தி அவதாரம்பற்றி முழுக்க முழுக்க சாயி சரவணமுத்து பலநாட்களாக எனக்கு விளங்க வைத்ததைத் திரட்டி எழுதியுள்ளேன். இரண்டாம் அத்தியாயத்தில் யோகானந்தா பரமகம்சா என்ற யோகி அற்புதங்களுக்கு கொடுக்கும் விஞ்ஞான விளக்கங்களை அவருடைய புத்தகம் ஒன்றில் சாயி சரவணமுத்துவின் உதவியுடன் அறிந்து பாபாவின் அற்புதங்கள் அந்தவகையில் நிகழலாம் என்று முடிவுகொண்டு சாயி சரவணமுத்துவின் தூண்டுதலால் சுருக்கமாக எழுதியுள்ளேன்.

மூன்றுவது அத்தியாயத்தில், சாயி சரவணமுத்து தமது ஞான அனுபவத்திலும் சாஸ்திர ஞானத்திலும் எழுதி அளித்த 108 பொன் மொழிகளை, பொதுமக்கள் விளங்கும் முகமாக சிறிதளவில் விளக்கி எழுதியுள்ளேன். நான்காம் அத்தியாயம் சாயி சரவணமுத்துவின் வரலாற்றுச் சுருக்கம். ஐந்தாம் அத்தியாயம் சாயி சரவணமுத்துவின் பாடல்கள் சில. இவை முன்பு அச்சேற்றப்பட்ட நூல்களில் இருந்து எடுக்கப்பட்டவை. ஆறுவது பகவான் தமது திருக்கரத்தால் எழுதிய கடிதம் ஒன்றின் தமிழாக்கம். ஏழாவது பகவான் சாயியின் அஷ்டோத்தர சதநாமாவளியின் தழுவலான போற்றித் திருவகவல். இது 'சாயி கீதத்தில்' இருந்து எடுக்கப்பட்டது. எட்டாவது பாபா தமது கைப்பட ஆங்கிலத்தில் எழுதிய இன்னுமோர் கடிதத்தின் தமிழாக்கம். ஒன்பதாவது பாபாவின் 43ஆவது ஜயந்தி உரையின் தமிழாக்கம். பத்தாவது பகவான் சாயி பாபாவின் மேலும் இரண்டு பேருரைகளின் தமிழாக்கம்.

எமக்கு முக்கியமானது என சாயி சரவணமுத்துவால் கருதப் பட்ட பாபாவின் கடிதங்களும் உரைகளுமே தமிழாக்கம் செய்யப்பட் டுள்ளன. கடைசி அத்தியாயமாக, சாயி சரவணமுத்து மக்களுக்கு விடுக்கும் ஆங்கிலத்தில் எழுதிய விண்ணப்பம் ஒன்றின் தமிழாக்கமும் அடியேனது பாபா பற்றிய சிறிய கட்டுரையும்.

சாயியை எம்மால் விளங்கிக்கொள்ள முடியாது. எனினும், 43ஆவது ஜயந்தி உரையில், நேரடி ஞானுனுபவத்தாலும், சாஸ்திரப் படிப்பாலும் நாம் தம்மை இனங்கண்டுகொள்ளலாம் என்று கூறு கிறார். சாயி சரவணமுத்து பாபாவின் அருள்பெற்று அவரை விளங் கிக்கொண்டவண்ணமாகவே சிவசக்தி அவதாரம்பற்றிய முதற் கட் டுரை அமைந்துள்ளது.

இந்த நூல், இனிது நிறைவெய்த சாயி அருள் எல்லாக் கட்டங் களிலும் நிரம்ப இருந்துள்ளது. இந்த நூலில் சொற்குற்றம் இருந் தால் அதனைப் பொருட்படுத்தாது, பொருட்குற்றம் இருந்தால் எனக்கு அறியத்தருமாறு பணிவுடன் கோரி விடைபெறுகின்றேன்.

— சு. சிவதாஸ்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிவசக்தி அவதார விளக்கம் (சாயி சரவணமுத்து அருளியபடி) ... | 1—3 |
| 2. | பாபாவின் அற்புத விளக்கம் ... ... | 4 5 |
| 3. | சாயி சரவணமுத்துவின் 108 முத்துகள் ... | 6—23 |
| 4. | சாயி சரவணமுத்துவின் அற்புதம் கலந்த வரலாறு | 24—27 |
| 5. | சாயி சரவணமுத்து பாடியருளிய பாடல்களில் சில | 28—40 |
| 6. | பாபாவின் கடிதம் ... ... | —41 |
| 7. | பகவான் ஸ்ரீ சத்ய சாயி போற்றித் திருவகவல் ... | 42—46 |
| 8. | பாபாவின் மற்றொரு கடிதம் ... ... | —47 |
| 9. | பாபாவின் 43ஆவது ஜயந்தி உரை ... | 48—54 |
| 10. | பாபாவின் மேலும் இரு உரைகள் ... ... | 55—68 |
| 11. | சாயி சரவணமுத்துவின் விண்ணப்பமும் நூலாசிரியரின் கட்டுரையும் ... | 69—75 |



பிரேம சாயி கர்நாடக மாநிலத்தில்
மாண்ட்யா என்னும் கிராமத்தில் அவதரிப்பார்.

# 1. சாயி சரவணமுத்து அருளியபடி சிவசக்தி அவதார விளக்கம்

இன்றுவரை உலகிலே எத்தனையோ அவதார புருடர்கள் பிறந்து, சாதித்து மறைந்திருக்கிறார்கள். திரேதா யுகத்திலே ராமரும் துவபரா யுகத்திலே கிருஷ்ணரும், கலி யுகத்திலே புத்தர், யேசு, முகமது, சைதன்யர், ராமகிருஷ்ண பரம ஹம்சர் மற்றும் பல பல அவதாரர்களும் தோன்றி இருக்கின்றனர். இப்போதும் உயிருடன், சாயி பாபா, குரு மகராஜி, இன்னும் சிலரும் அவதார புருடர் என்ற நாமத்திலே வாழ்ந்து வருகிறார்கள்.

பரப்பிரமத்தின் பொறிகள் என்று சொல்லப்படும் வகையில் உலகிலே ஜீவகோடிகள் பிறவிகள் எடுத்து வளர்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஜீவன் ஒருவன் நல்வினை தீவினை என்ற இரண்டையும் ஒப்ப நோக்கும் பக்குவத்தில் பரம்பொருளால் ஆளப்பட்டு ஜீவன் முக்தனாக வளர்ச்சி அடைந்து வாழ்ந்து தொடரும் முயற்சியினால் பரமுக்தன் நிலையை அடைந்து உடல்நீக்கத்தின்போது காரண சரீரத்தோடு இருந்து தொடர்ந்தும் பரப்பிரம்ம நிலையை மனனம் செய்துகொண்டு இருக்கின்றபோது, உலகை ஈடேற்றவேண்டும் என்ற நல்ல விருப்பம் காரணமாக மீண்டும் உலகில் பிறப்பெடுக்கின்றான். அந்த நிலையில் அவனை அவதார புருடர் என்கின்றோம். அவதார புருடனுக்கு அவித்யாசக்தி எள்ளளவேனும் இராது, முழுமையும் வித்யா சக்தியோடே தோன்றுகின்றான். தோன்றித் தான் காரண சரீரத்தில் விரும்பிய தர்ம சிந்தனையை உலகில் நிலைநிறுத்திவிட்டு மறுபடியும் உடலை நீக்கி காரண சரீரத்தோடு பரப்பிரம்ப மனனம் செய்கின்றான். பரமுக்த நிலையில் காரண சரீரத்தோடு இருக்கும் ஒருவன் முத்தொழிலையும்விட மற்று எந்தக் காரியங்களையும் செய்யக்கூடிய ஆத்மீக வல்லமை உள்ளவன் இத்தகைய அவதார புருடர்கள் ஒரு சில குறிப்பிட்ட காரியங்களை நிறைவேற்ற வராமல் நீண்டகால திட்டத்தில் மக்களுக்கு ஆத்மீக அறிவை வித்திட்டு அதன்மூலம் மிகப் பரந்த அளவில் ஆத்மீகத் திருப்பம் செய்ய வருவார்களாயின் அவர்களை 'மகா அவதாரம்' என்று சொல்லுகின்றோம்.

ஆனால், எமது சத்திய சாயி நாதன் அவதாரம் முன்னே சொல்லப்பட்ட இலக்கணங்களுக்கு அமைவது அன்று. பரபபிரம்ம ஒளியானது பிரபஞ்சமாகப் பர்ணமித்துவிட்டு முதன் முதலில் தனது அதிர்

வினல் தோற்றுவித்த மனித வடிவங்கொண்ட கடவுள் சிவனுகும். சிவமானவர் மாறுதலடையும் பிரகிருதியின் நின்றும் உண்டாகிய ஊன் உடலம் தாங்கியவர் அல்ல. ஒளி உடலம் தாங்கியவர். அவரே உலகை இயக்கலானுர். சிவனிடமிருந்து சத்தி தோன்றி தொடர்ந்து ஊனுடலம் தாங்கிய ஜீவர்கள் தோன்றினர். இவ்வாறு சிவன் தோன்றியதற்குக் காலம் நேரம் குறிப்பிடமுடியாது. அதாவது ஆதியிலேயே அவர் தோன்றி படைத்தல் காத்தல் அழித்தலாகிய முத்தொழிலையும் செய்யலானுர். அவர் இமயமலை உச்சியாகிய கைலைமலைக் குகை ஒன்றில் சிவலிங்க உருக்கொண்டு வீற்றிருக்கிறுர். அவரே எல்லா இடமாகவும் எல்லா உயிர்களாகவும் விளங்குகின்றுர். அவருடைய விரிவே உலகமும் உயிர்களுமாகும். இதனையே மணிவாசகரும் போற்றி எல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம், போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள், போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள் என்று பாடுகிறுர். அந்த சிவனுர் முன்பு ஒருமுறை பரத்துவாச மகரிஷிக்கு கொடுத்த வாக்குறுதிக்கு இணங்க சிரடி சாயி பாபா என்ற பெயரில் அவதரித்து, மீண்டும் இப்போது புட்ட பர்த்தியில் சத்ய சாயி பாபா என்னும் பெயருடன் அவதரித்திருக்கிறுர். மீண்டும் பிரேம சாயி பாபா என்ற பெயரில் கர்நாடக மாநிலத்தில் அவதரிப்பார். சிரடியில் சிவன்மட்டும் அவதரித்தது. பர்த்தியில் சிவனும் சத்தியும் சேர்ந்து அவதரித்துள்ளது. இனி வரும் அவதாரத்தில் சத்தி மட்டும் அவதரிக்கும். இந்த சாயி வரலாற்றை பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா அவர்கள் தமக்கு 37ஆவது வயதல் பிரகடனம் செய்தார். பல பல அவதாரங்கள் மத்தியிலும், இப்போது சாயி அவதார தனித்துவம் புலனுகின்றதல்லவா ?

சிவனுடைய அவதாரம் என்று சொல்லுகின்றபோது சிவனுடைய ஒரு கூறுதான் உடம்பு எடுத்துள்ளது என்பது கருத்து. சிவன் முழுமையாக உடலில் இறங்கியிருக்க முடியாது. ஏனென்ருல், இதனை எழுதும் நானும் வாசிக்கும் நீங்களும் சிவத்தினுடைய கூறுகள். வித்தியாசம் என்னவெனில் சாயி நாதனது உடம்பில் அவித்யா சக்தி சிறிதளவேனும் சேர்ந்தில்லை. எமது உடல்களிலோ வித்யா சக்தியும் அவித்தியா சக்தியும் கலந்து இருக்கிறது. நானும் சிவன்தான் நீயும் சிவன்தான், சாயியும் சிவன்தான். எமக்கிடையே உள்ள வேறுபாடு மேலே கூறப்பட்ட அளவே. அவித்யா சக்தி அற்ற அவர் எல்லா இடமும் இருப்பார் எல்லா ஞானமும் உடையார். எல்லா வல்லமையும் உள்ளார்.

அவர் கூறுகின்றுர், தான் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டவே பரிசுப் பொருட்களை இயல்பாகவே படைப்பதாக, அதன் மூலமாக மக்கள்

மத்தியிலே நிரந்தர ஆனந்தத்தைப் படைப்பதாக. ஆனால் காத்தலை யோ, அழித்தலையோ எல்லாம் வல்ல பரம்பொருளே செய்ய வல்லார் என்று கூறுகிறார். [எடுக்கப்பட்ட நூலும் பக்கமும் : Sai Baba The Holy Man and the Psychiatrist by Samule H. Sandweiss பக். 89] இந்த 43 ஆவது ஜயந்தி உரையில் உள்ள கூற்று மெய்யாகவே உரைக் கப்பட்டது என்று உறுதிசெய்யப்பட்டால், அறிஞர் சிலர் கூறுவது போன்று உடம்போடுகூடிய அவதார புருடர்களும் முழுமையான முத் தொழிலை ஆற்றும் அதிகாரம் அற்றவர்கள் என்று பொருள்பட இட முண்டு. சத்ய சாயி எப்பொழுதும் சிவத்தோடு நேரடித் தொடர்பு டன் இருப்பதால் சிவத்திடம் உத்தரவு பெற்று சிவத்தின் கருணையினால் எத்தொழிலையும் செய்யமுடியும் என்று கொள்ளலாம். கடலின் சுவை யை அறிய கடல்நீர் முழுவதையும் பருகவேண்டும் என்பதல்ல. ஒரு வாய் நீர் போதும். அதுபோன்று சிவத்தை அறிய சாயியை நுகர்ந் தால் போதும். சாயி என்றாலும் சிவன் என்றாலும் ஒன்று என்பதன் விளக்கம் இதுதான், அவித்தியா சக்தி (மாயை) கலந்து எம்மைக் கொண்டு சிவத்தை அறியமுடியாது. ஆனால் ஒரு ஜீவன் அவித்யா சக்தியைப் போக்கிவிட்டான் என்றால் அவன் முழுமையும் வித்யா சக்தி மயமாதலால் அவனும் சாயியின் அந்தஸ்தைப் பெறுகிறான். இதனைத் தான் சத்ய சாயி, ''நீயும் என்னைப்போல் வரலாம்'' என்றும் '''ராமர், கிருஷ்ணர், சாயி பாபா ஆகியோர் மட்டும் கடவுள் அல்லர். நீயும் கடவுளே'' என்றும் இன்னும் பலவிதமாகவும் பல இடங்களிலும் கூறு கின்றார்.

---

# 2. பாபாவின் அற்புத விளக்கம்

மனிதனது உடல் ஒரு சடப்பொருள். விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்ட 108 வரையிலான மூலகங்களில் குறிப்பிட்ட சில இணைந்து சேர்வைகளை உண்டுபண்ணி அதன் மூலமாக அமைந்த உடலில் மனம் என்ற ஒன்று நம்மை இயக்குவதாகத் தோன்றுகின்றது. மனம்கூட உடல்போன்ற சேர்வைகளால் ஆனது என்ற அபிப்பிராயத்தை விஞ்ஞானிகள பரிசோதனைமூலம் தெளிவுபடுத்தியுள்ளார்கள். மனத்தையும் இயக்கும் ஆத்மா சடப்பொருளல்ல. அது சக்திப்பொருள். உடம்பில் இருபத்தேழாயிரம் கலங்கள் உண்டு. ஒவ்வொரு கலமும் மூலக்கூறுகளால் ஆனது. மூலக்கூறுகள் அணுக்களால் ஆனவை. அணுக்கள் சுற்றிவரும் இலத்திரன்களைக் கொண்டவை. இலத்திரன்கள் லெவ்ரோன்களைக் கொண்டவை. ஒவ்வொரு லெவ்ரோனும் எத்தனையோ அலகு சக்தித் திரட்டாகும். சுருங்கச் சொன்னால் ஞானி ஒருவன் தனது நினைப்புச் சக்தியால் உடல்ஆன சடப்பொருளை சக்தியாக்கி விடும் வல்லமை உள்ளான். பொதுவாக யோகிகள், ஞானிகளது உடம்பு சக்திமயமானதே. இதன் காரணமாகத்தான் மற்றவர்களுடைய சடப்பொருள் உடம்பில் உள்ள நோய்களைத் தமது உடம்பில் பார்வைமூலம் உறிஞ்சி எடுக்கிறார்கள். யோகிகள். ஞானிகள், ஏன் சாயி சரவணமுத்து போன்றவர்களுக்கே உடம்பு இத்தன்மையதென்றால், ஒரு சிவசக்தி அவதார புருடனின் உடம்பு எத்தகைய சத்தி வடிவமாகும். இதனால்தான் கூடுவிட்டுப்பாயும் வல்லபமும் பாபாவுக்கு எளிதாகின்றது. அணுத்தன்மையாகி விரும்பிய இடத்தில் விரும்பிய நேரத்தில் பிரசன்னமாகக்கூடிய வல்லபம் அவருக்கு உண்டு விரும்பிய பக்தன் வீட்டில் விரும்பிய விபூதியை குங்குமத்தை அமிர்தத்தை மற்றும் ஏனைய பொருட்களை தோற்றுவிக்க அவர் அணுவாகிச் சென்று வெளியில் இருந்து தேவையான சக்தியை ஒடுக்கி அணுக்களாக்கி சேர்வையாக்கி அமைத்துவிடுகிறார் கணப்பொழுதில். தமது மனத்திலே இலத்திரன்களையும் புரோத்தன்களையும் இணைத்து செறிவுசெய்ய, கையசப்பின்போது வெளியில் உள்ள இலத்திரன்கள் புரோத்தன்கள் சேர்ந்து அணுவாகி பின் சேர்வையாகி சடப்பொருளின் வடிவத்தைப் பெற்று விடுகின்றன. பாபாவை கமராவால் படம்பிடித்துக் கழுவியபோது இந்த நூலின் முகப்பு அட்டையின் உட்பகுதியில் அமைந்த படம் கழுவப்பட்டு வந்ததென்றால் அது எப்படி? கமராவில் இருக்கும் மின்குமிழ் பற்றுகின்ற அந்தக் கணப்பொழுதில் சாயி தனது பிறையையும், நாகத்தையும், கங்கையையும் நெற்றிக் கண்ணையும் உருத்திராக்கத்தையும்

விபூதிக் குறியையும், நீலகண்டத்தையும் சக்தியின் நின்றும் சடமாக்கி அணிந்து தோன்றியிருக்கிறார். கூட நின்றவர்களும் புரியமுடியாதபடி கணப்பொழுதில் நடந்துவிட்டது. தண்ணீரை பெற்றோலாக்கினார் அது எப்படி ? நீரில் உள்ள மூலக்கூறுகளை பெற்றோலுக்குரிய மூலக்கூறுகளாக மாற்றத் தேவையான அணுக்களை வெளியில் உள்ள சக்தியினின்றும் ஒடுக்கி எடுத்திருப்பார். அவருக்கு சக்தியை சடமாக்குவதும் சடத்தை சக்தியாக்குவதும் மிக எளிதான காரியம்.

"எத்தனை ஆயிரம்பேர் எத்தனை ஆண்டுகாலம், எத்தனை தவ ஒழுக்கத்தாலும் என்னுடைய மகிமையைப் புரிந்துகொள்ள மாட்டீர் கள்" என்ற கருத்தில் பகவான் பாபா அவர்கள் கூறியது எனக்கு நினைவுக்கு வருகிறது. நான் மேலே தந்த விளக்கம், யோகானந்தா பரமகம்சா என்ற யோகி அற்புதங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதற்குக் கொடுத்த விஞ்ஞான விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்து எழுதப்பட்டவை.

எமது அத்வைத விளக்கம் விஞ்ஞானத்தோடு எதுவித வேறுபாடு மின்றி உடன்பாடாய் போய்க்கொண்டு இருக்கிறது. பரப்பிரம்மம் என்று சுட்டப்படும் ஒரு ஒளி சக்தி ஓங்கார ஓசையுடன் அதிர்ந்து கொண்டு இருக்கிறது. அதிர்வு வீதம் வேறுபடப்பட வேறு வேறு சடப் பொருள் உருவாகிறது. பரப்பிரம்ப ஒளி விரும்பினால் எல்லா உலகை யும் உயிர்களையும் மறுபடியும் ஒளிச் சக்தியாக மாற்றிவிடலாம். இது உலக முடிவாகிவிடும். முடிவுள்ள பொருளுக்கு தொடக்கமும் இருக் கும். தொடக்கமோ முடிவோ உள்ளது மெய்ப்பொருளாகாது. ஆத லால் பரந்த பரப்பிரம்மத்தை ஒடுங்கிய உடம்போடு கூடிய நாம் அறிந்துகொள்ள முடியாது. சாயி பாபா அவதாரம் ஒரு பரப்பிரம்ம அவதாரம். அதனை நாம் இன்னதுதான் இவ்வளவுதான் என்று வரை யறைசெய்ய முடியாது.

# 3. சாயி சரவணமுத்துவின் 108 முத்துகள்

1. ஈசனை அடைய விரும்பும் அடியார்கள் முதலில் தங்கள் இருதயத்தை பரிசுத்தம் செய்யும் முயற்சியில் பரிபூரணமாயும் இடைவிடாமலும் ஈடுபடவேண்டும். கண்ணாடி போன்ற பரிசுத்தமானதும் துல்லியமானதுமான பொருள்களிலன்றிச் சூரியன் தனது விம்பத்தைத் தோற்றுவிக்காதல்லவா? ஆண்டவன் அருளை நாடுவதென்பதும் இப்படித்தான் ஆண்டவனைத் தேடல், அடைதல் என்பதெல்லாம் ஆண்டவன் அருள் தனது இருதயத்தில் பிரதிபலிக்கும்படி அவ்வளவு துல்லியமாக இருதயத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் என்பதே. தவம், விரதம், பஜனை முதலிய முயற்சிகளும் இதைக்குறித்தே செய்யப்படுவனவாகும். இருதயத்தில் உள்ள அழுக்குகளும் வாசனைகளும் (வாசனை—முன்னைய கரும சிந்தனை) அகற்றப்பட்டால் ஈசன் அருள் இயல்பாகவே அதில் பிரதிபலிக்கின்றது. நீ என்னிடத்தில் பிரகாசிக்க வேண்டும் அல்லது என்னை உன்திருவடிகளில் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நாம் ஆண்டவனைக் குறித்துப் பிரார்த்திப்பதன் பொருள் அவர் எழுந்தருளுவதற்குத் தகுதியானபடி இருதயமான ஆசனத்தைத் தயாரிக்கவேண்டும் என்பதே. இந்த அடிப்படை உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் ஆயிரம்கோடி காலம் அருந்தவம் பண்ணினாலும் கோரிய பலன் சித்திப்பதருமை. இப்போது ஒரு கேள்வி: ஏன் நமக்கு இருதய சுத்தி ஏற்படுவதில்லை? இதற்கு விடையாக பகவான் சாயியின் கூற்று ஒன்றைக் கவனிப்போம். ''பத்தில் ஏழு பங்கும் ஆத்ம விசாரமே'' அதாவது ஆன்மீக உயர்ச்சியில் சிறிய பங்காகிய பத்தில் மூன்றுதான், ஜெபம், தியானம், பஜனை போன்ற தயார்நிலைச் சாதனங்கள். பெரும் பங்கு தன்னை விசாரித்து அறிந்து தான் பரமாத்மாவின் பிரதிவிம்பமே என அறிந்து அத்துவித நிலைப்பாட்டில் நிலைத்தலேயாகும் என்பது விசாரம்மூலமே இதயசுத்தி பூரணமாக ஏற்படுவது என்பது முடிபாகிறது.

2. உங்கள் காரியம் அனைத்தையும் ஈசனிடமே ஒப்படைத்து விடுங்கள். ஏனென்றால் பிராரப்தவினையின் (அதாவது முன்னைய பிறப்புக்களில் அனுபவித்து முடிக்கப்படாத வினையின்) வயப்பட்ட உங்களுக்கு உங்கள் விருப்பம்போல் உங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் சக்தியும் சுதந்திரமும் இல்லை. வினையின் அளவுக்கேற்ப ஆண்டவனால் அருளப்படும் சுகதுக்கங்களையே அனுபவிக்கக் கடமைப்பட்டவர்

கள். 'வகுத்தான் வகுத்தபடிக்கே அனுபவம்' என்ற உண்மையைத் தெரிந்தபின் நம் செயலைப்பற்றிய சர்த்ருத்வபாவம் (கர்த்தா என்ற முனைப்பு) நமக்கேன்? அதனால் துன்பமேயொழிய இன்பமேது? ஆதலால் உடலையே (உடல் பொருள் ஆவி) ஈசனிடத்தில் ஒப்புக்கொடுத்து விட்டு எந்த நிகழ்ச்சிக்கும் ஈசனையே பொறுப்பாக்கி நிம்மதியாயிருக்கப் பழகுவதே கர்மபந்தங்கள் அனைத்தையும் ஒரேயடியாகத்தொலைத்து விடுவதற்கான சரியான வழியாகும். தானும் தனது ஸ்தூல, சூக்கும, காரண சரீரங்களும் பரம்பொருளாகிய பரப்பிரம்ம ஒளியின் ஒருபகுதி (ஒரு கூறு) என்று அறிந்து வாழ்தலே ஈசனிடத்து ஒப்புக்கொடுத்தல் என்பத சாதகர்கள் விசாரம் (விசாரணை)மூலம் உணர்தல் வேண்டும்.

3. செயல்களில் பற்றுதல் வேண்டாம். அந்தப் பற்றுதலே மேலும் பிறவிகள் எடுக்கக் காரணமாய் (விதைகளாய்) இருப்பதால் எந்தக் காரியத்தையும் தனக்கென்றோ, பிறர்க்கென்றோ செய்யாமல் பொதுவாகவும் உதாசீன பாவத்துடனும் (கர்மம் செய்யும் நினைப்பே இல்லாமல்) செய்யப் பழகிவரல் வேண்டும். இதுவே நிஷ்காமகர்ம யோகம் என்று கூறப்படுகின்றது. அதாவது கர்மத்திலோ அல்லது அதன் பலனிலோ பற்றைவையாது, தான் பரப்பிரம்மம் என்ற சிந்தனையில் உணர்ந்து இயங்கி தான் தானாகும் வழியாகும்.

4. உங்கள் அரியகாலத்தில் ஒரு விநாடியும் வீணாக்காமல் பிறவிப் பயனடைய முயற்சியுங்கள். ஏனென்றால், மனிதப்பிறவி ஒருமுறை பெற்ற ஆத்மா, அடுத்த பிறவியில் மனிதப்பிறவி எடுக்கும் என்று கூறமுடியாது. நமது வாசனைக்கேற்ப கீழ்ப்பிறவிகள் எடுத்து திரும்ப முன்னேறி மனிதப்பிறவி எடுக்கவேண்டி வரும். மனிதப்பிறவியின் ஒவ்வொரு விநாடியும் விலையற்றதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.

5. ஒவ்வொருவரும் தன்னை அறிவதே கடவுளை அறிவதாகும். ஏனென்றால், ஒவ்வொருவரதும் ஸ்தூல, சூக்கும, காரண சரீரங்களுக்கு நடுநாயகமாக விளங்கும் ஆத்மா பரம்பொருளாகிய பரப்பிரம்ம ஒளியேயாகும். ஒரு சூரியனே பல குடங்களிலும் உள்ள நீரில் பல சூரியர்களாக பிரதிபலிப்பதுபோன்று ஒரு பரப்பிரம்மமே பல உடல்களிலும் பலவாகப் பிரதிபலிக்கின்றது. உடல்களும் பரப்பிரம்மத்தின் சக்தியாகிய பிரகிருதியாகும். பிரகிருதி என்பது பஞ்சபூதக் கலப்பினை. பிரகிருதி மாற்றம் அடையும். பிரகிருதி ஒடுங்குமானால் ஒளி சக்தியாக ஒடுங்கி பரப்பிரம்ப ஒளியில் அடங்கிவிடும்.

ஒவ்வொருவரும் தன்னை அரிய மனதை ஈசனுக்கு பலியாக்க வேண்டும் என்பதன் கருத்து பிரகிருதியின் கூறாகிய மனதை நம்பாமல், நிலையான ஆத்மாவில் எண்ணத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதாகும்.

6. தம்மனத்தைப் பரிபூரணமாக ஆண்டவன் பக்கம் திருப்பிவிடும் புண்ணியவான்களைப் போன்ற அதிஷ்டசாலிகள் வேறில்லை. ஏனென்றால், ஆத்மீக நிலைப்பாடு உடையவர்கள் ஒரு கற்பகவிருட்சம் போன்றவர்கள். அவர்களுடைய பேரின்பத்தினுள் சிற்றின்பமும் அடங்கியே இருக்கிறது.

7. தத்துவ விசாரணையை நூல்களில் ஆராய்வதைப் பார்க்கிலும் ஆத்மீக ஞானம் பெற்றவர்களிடம் சென்று பணிவோடு கேட்டு ஆராய்தல் சிறந்தது. ஈற்றில் உங்கள் உள்ளத்தில் விசாரிப்பதே உண்மையான விசாரமாகும். இது சாதனையின் பத்தில் ஏழுபங்கு இடம் பெறவேண்டும்.

8. உபாசனு மூர்த்திகளாலும், ஜபம், தியானம், யோகம், பஜனை முதலிய சாதனங்களாலும், கூடியபகுதி ஆத்ம விசாரத்தாலும் ஆத்ம சாட்சாத்காரம் அடையலாம். அதாவது பரப்பிரம்மநிலையை அடையலாம். அதாவது தான் தானுக மாறலாம்.

9. எல்லா உயிர்களிலும் சமபுத்தியும் சுகதுக்கங்களில் விருப்பு வெறுப்பின்மையும் பக்குவப்பட்ட மனத்திற்கு அடையாளங்கள். மகான்கள் ஜீவராசிகளோடு அன்பாக இருப்பதை நாம் அவதானிக்கிறோம் அல்லவா? அதுதான் உயிர்களில் சமபுத்தி என்பது

10. உடல் ஒரு புனித சேஷ்திரம். அதில் உள்ள ஆத்மா சேஷ்திரச்ஞன். சேஷ்திரச்ஞனை அறிந்தவனே உண்மையில் கடவுளை அறிந்தவனும் மெய்ஞ்ஞானியுமாவான். அதாவது ஆத்மாதான் பரமாத்மா (பரப்பிரம்மம்), ஆத்மாவை அறிந்தவன் பரப்பிரம்மமாகிவிடுகிறான்.

11. யார் எல்லா ஜீவராசிகளிலும் அன்பு செலுத்துகிறார்களோ, அவர்களிடமே ஆண்டவன் அன்பு செலுத்துகிறார். அதாவது, தனது வீட்டிலாவது வளரும் நாயிலாவது, பூனையிலாவது, பசுவிலாவது, கோழியிலாவது வரும் வருத்ததுன்பங்களை தனக்கு வந்ததாகக் கருதி துன்பத்தை நீக்க முயல்கிற இயல்பே ஜீவராசிகளில் அன்பு என்று சொல்லப்படுகிறது. அத்தகையோரிடம் ஆண்டவன் அன்பு செலுத்துகிறன்.

12. உலகில் ஒருவன் தனக்குக் கீழ்ப்பட்டவர்களின் குற்றங்களைத் தயவோடு மன்னித்தால் அவர் குற்றங்களை ஆண்டவன் தயவோடு மன்னிப்பாரென்பது சத்தியமாகையால் பிறர் குற்றங்களைப் பொருட்படுத்தாதே.

13. நீ எதை மறந்தாலும் ஆண்டவனை மறவாதே. ஆண்டவனை மறப்பதென்பது தன்னையே மறப்பதாகும். இதைத்தான் ஞானிகள் தற்கொலை என்று உரைப்பார்கள்.

14. உனது காரியங்கள் உன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் இருப்பதாக நீ உணர்ந்தால், அந்தக்காரியங்கள் மற்றவர்களுக்கும் உகந்தது என்று நம்பிக்கொள்.

15. பிறர் குற்றங்களை நாடுவதிலும் தன்குற்றம் தெரிந்து நீக்க முயற்சிப்பதே விவேகமாம்.

16. கவலை உள்ளவனும் கஷ்டப்பட்டவனுமே கடவுளை எளிதில் அடைகின்றான். இதனால்தான் குந்திதேவி கிருஷ்ண பரமாத்மாவிடம் தனக்கு கஷ்டங்களைத்தா என்று கேட்டுப் பிரார்த்தித்தாள்.

17. உலகப் பொருள்கள்மேல் சிதறிக்கிடக்கும் மனதை ஒரு முகப்படுத்தி ஆண்டவன்பால் திருப்பினால் ஆண்டவனை அடைதல் எளிதாகும்.

18. எவனுடைய இருதயம் கடவுளை நாடித் தீவிரப்படுகின்றதோ அவனுடைய உள்ளத்திலுள்ள குற்றங்களும் தீவிரமாய்த் தொலைகின்றன.

19. நீ ஒருவனுக்குச் செய்யும் உதவி ஆண்டவனுக்குச் செய்ததேயாம். எல்லா உயிர்களும் ஆண்டவன் சொரூபமேயல்லவா. அதாவது ஆண்டவனின் வேறு வேறு வேடங்களே.

20. நீ கடவுளிடம் செலுத்தும் அன்பின் அளவிற்கே கடவுள் அருளும் உனக்குக் கிடைக்கின்றது.

21. நீ மற்றவர்களுக்கு உபதேசிப்பதைவிட உன்னுடைய குறைகளை நீக்கிக்கொள்ளுவதில் அடிக்கடி உனக்கு நீ உபதேசித்துக்கொள்வதே உத்தமம்.

22. நீ உன் மனதிற்குச் செய்யும் ஒரு சிறு உபதேசத்தால் நீ அடையும் பிரத்தியட்ச பலனை நீ வெளியாருக்குச் செய்யும் கோடிக் கணக்கான உபதேசங்களாலும் அடையமுடியாது.

23. எல்லோருடைய சேஷமத்தையும் (நலனையும்) விரும்பு. மற்றவர் சேமமே உனது சேஷமத்திற்கு ஆதாரம்.

24. நிராசையே (ஆசையின்மை) நிறைவான ஆசையாகும். அநித்தியப் பொருளாகிய சிருஷ்டிப் பொருள்களைக் கோருவதிலும் நித்தியப் பொருளாகிய சிருஷ்டி கர்த்தாவைக் கோருதல் மேலான தல்லவா? இதனைத்தான் பகவான் சாயி கூறுகிறார், "ஏன் பொன்னாபரணங்களை நாடுகின்றாய், பொன்னை நாடு" என்று, பொன் இருந்தால் விரும்பிய ஆபரணங்களை விரும்பிய விதத்தில் விரும்பிய நேரங்களில் செய்துகொள்ளலாம்.

25. காண்பனவெல்லாம் கற்பனைகளே, அதாவது நிலைபேறில்லாத காட்சிகள். அவற்றை அவற்றிற்கு ஆதாரமாயுள்ள பொருளில் மாற்றப் பழகுவதே நல்லது. அதாவது நாம் காண்பன ஆதேயம். இதற்கு பரப்பிரம்மம் ஆதாரம், ஆதேயத்தைக் காணும்போது ஆதாரத்தை நினைக்கவேண்டும் என்பது கருத்து.

26. அற்புதங்களில் ஆசைவையாதே. அது பந்தத்திற்கே இடமாகும். நீ பரதந்திரனுதலால் உன்னாலாவது ஒன்றுமில்லை. மாயா விசிட்ட ஈஸ்வரனுக்கே அற்புதங்களை இயற்றுதல் சாத்தியம்.

27. அஞ்ஞானி வேதாந்தம் பேசுவது நகைப்புக்கு இடமாகும். அவன் தன் வார்த்தைகளால் பிறரை ஏமாற்றுவதைவிட தன்னையே அதிகமாக ஏமாற்றிக்கொள்கிறான். அரைகுறையாக வேதாந்தம் (ஒன்றே பொருள் என்ற ஏகான்மவாதம்) பயின்ற அரசனொருவன் எல்லாம் பரப்பிரம்மமே என்று கூறி தனது பட்டத்து ராணியைத் துரத்திவிட்டுப் பணிப்பெண் ஒருத்தியைத் தனது மனைவியாகக்கொண்டான். அதுபோலாகிவிடும் அஞ்ஞானியின் வரட்டு வேதாந்தம்.

28. எப்பொழுதும் பிறருடைய வழியைப் பரீட்சிக்க முயல்வது சன்மார்க்கமல்ல. வழி பலவாக இருந்தாலும் முடிவு ஒன்றே. ஆதலால் அவரவர்க்குப் பிடித்த வழியில் அவரவர் செல்வதால் தவறு ஒன்றும் இல்லை என்ற உண்மையை உணர்வாயாக.

29. உன் வழியில் உறுதியாக நட. திடமாக நம்பு. பிறர் அதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்பாதே.

30. உனது குருவைப் பரிபூரணமாக நம்பு. அவர் காட்டிய வழியில் அற்ப சந்தேகமும் வேண்டாம். அந்தச் சந்தேகமே உன்னை நல்வழியில் நின்றும் திருப்பிவிடும் மாயை என்று தெரிந்துகொள்.

31. மகான்களிடத்தில் உனக்குத் தோன்றும் குற்றங்களைப் பொருட்படுத்தாதே. அவர்களிடம் உள்ள குணங்களை மட்டும் கிரகித்துக்கொள். சிப்பியின் குற்றத்தைக் கவனித்தால் முத்துக் கிடைக்காதல்லவா?

32. வேறு எந்தப் பிறவியாலும் தாண்டமுடியாத பிறவிக்கடலை மனிதப்பிறப்பு ஒன்றால்தான் தாண்டமுடியும். ஆதலால் உனக்குக் கிடைத்த இந்த மானிடத்தின் அருமையை உணர்ந்து பாவக் கடலைக் கடக்கும் தெப்பமாக அதை உபயோகித்துப் பிறவிப்பிணியை ஒழிப்பாயாக.

33. சாதனப் பயிற்சிக் காலங்களில் தோன்றும் மயக்கங்களைக் கண்டு அஞ்சாதே, சோர்வுற்று பயிற்சியைக் கைவிட்டுவிடாதே, மகான்களைக் கண்டு பேசி உற்சாகம் அடைந்துகொள். பின்னர் கிடைக்கும் உயர்ந்த அனுபவத்தின் பிரகாசத்தால் இந்த மயக்கங்கள் என்னும் இருள் தலைகாட்டாது மறைந்தொழியும்.

34. எல்லா ஜீவராசிகளிலும் ஜீவசொரூபமாக விளங்குபவர் எல்லாம் வல்ல இறைவனே. நீ அந்தப் பரம்பொருளைத் தவிர்த்து வேறாக இல்லாமையால் சர்வஜீவராசிகளின் சுகதுக்கங்களையும் உனதாகவே பாவனைசெய். இதனால் சமரச பாவமும் துக்க நிவர்த்தியும் உண்டாகும்.

35. உன்னைச் சகல ஜீவர்களிடத்திலும் சகல ஜீவர்களை உன்னிடத்திலும் பார்க்கப் பழகு. இதுவே அகண்ட ஞானத்திற்கு வழியாகும்.

36. ஆண் பெண் பேதத்தைப் போக்கு. சரீர அமைப்பினால்தான் இந்தப் பேதம் தோன்றுகிறது. அந்த இரு சரீரங்களிலும் உள்ள ஆத்மாவை மட்டும் நோக்கினால் பேதத்திற்கு இடமில்லை. இதற்கு ஆரம்பத்தில் எல்லாப் பெண்களையும் தாயாகவும் ஈஸ்வரியாகவும் பாவனைசெய்தும் வரலாம்.

37. பிறவிப்பிணியை உடனே ஒழிக்கவல்லது ஆத்ம சாட்சாத்காரம். இதற்கு நேர் சாதனம் விசார மூலம் பெறப்படும் ஞானம். கர்மம், பத்தி, யோகம் முதலியவை ஞானத்தைப் பெற்றுத்தரும் சாதனமாகக் கொள்ளப்படும்.

38. குருவின்றி ஞானம் கிடையாது. ஆண்டவனையும் குருவாகக்கொள்ளலாம். அவதார புருடர்களையும் குருவாகக் கொள்ளலாம்.

மகா அவதாரரான சாயி, ஒருவனுக்கு கடவுளாகவும் குருவாகவும் அமைவதைக் காணலாம். எவராய் இருந்தாலும் குருவைத் தெய்வமாகப் பாவித்து பத்தி சிரத்தையுடன் வந்தனை வழிபாடுகள் செய். வழிபாட்டிலும் பன்மடங்கு மேலானது அவர் கூறும் உபதேசங்களைப் பின்பற்றுதலாகும். இந்த நிலையில் அவருடைய அனுக்கிரகத்திற்கு பாத்திரனாவாய், அதிதீவிர பத்தனுக்குக் குருவைவிட மாதா, பிதா, தெய்வங்கள் இல்லை. தனது உயிராகவே அவன் அவரைப் பாவிக்கிறான். தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அவரிடம் சமர்ப்பணம் செய்துவிடுகிறான். இத்தகைய பக்குவம்பெற்றவனுக்கு ஞானத்தைப்பற்றியோ மோட்சத்தைப்பற்றியோ கவலை இல்லை. அவனைப் பற்றிய கவலைகளெல்லாம் குருவே மேற்கொள்கிறார்.

39. ஈசனும் குருவும் ஒன்றே. இருவர் இடத்திலும் உடல் நினைப்போ உடல் குற்றங்களோ கிடையா. தன்னை அனுபவபூர்வமாக உணர்ந்த தத்துவஞானி பாமரனைப்போல் உடலோடு விளங்கினாலும் உண்மையில் அவன் அறிவால் விளங்குகின்றான். அப்படிப் பட்டவனை ஆயிரம்பேர் குருவாக வழிபட்டாலும் அவனுக்கு குருசிஷ்ய பாவம் இராது.

40. எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் எனது என்கின்ற பற்றை மட்டும் நீக்கிவிட்டால் அந்தக் கர்மத்தால் எவ்வித பந்தமும் உன்னைத் தொடராது. இத்தகைய மனநிலையுடையார் கர்மங்கள் செய்தும் செய்யாதவரே ஆவர்.

41. பல பொருள்கள் அல்லது இலட்சியங்களைப்பற்றி பலயீனப் பட்டிருக்கும் மனதை அவற்றின் நின்றும் திருப்பி ஒருமுகப்படுத்திச் சற்குரு அனுக்கிரகித்த ஒரே இலட்சியத்தில் செலுத்தினால் அதுவே உத்தமமான தியானமாகும். இதன் முதிர்ச்சியே சமாதி எனப்படுகிறது.

42. எதை அடைந்தால் எல்லாவற்றையும் அடைந்ததாகுமோ அப்படிப்பட்ட பிரமசொரூபத்தை அனுபவபூர்வமாக அடைந்த புண்ணிய புருடருக்குப் பின்னர் இவ்வுலகிலோ எவ்வுலகிலோ அடையத் தகுந்த பொருள் வேறில்லை. அவனே நிரம்பிய திருப்தியுடையவன். அவனுக்கு அதற்குமேல் எத்தகைய விருப்பமும் ஏற்படுவதில்லை.

43. ஜீவர்களில் பலகோடிக்கொருவரே முடிவான உண்மை ஞானத்தை அடைகின்றனர். ஏனெனில் பலகோடி பிறவிகளில்

விடாது முறைமையுடன் செய்துவந்த தவவொழுக்கப் பக்குவத்தால் தான் முடிவான பிறவியில் பூரணஞானத்தை அடையமுடியும்.

44. நல்லவன் ஒருவனுக்கு அவனது மனமே நல்லவழி காட்டும் குருவாகவும் தீயவனுக்கு அவனது மனமே தீயவழியில் தள்ளும் மாயை யாகவும் அமைகிறது. ஆகையால் மனதை எப்பொழுதும் சத்துவ குணத்தில் இருந்து நழுவாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

45. ஒரு ஞானி தனது சுபானுபவ மெய்ஞ்ஞான பிரகாசத்தால் கோடிக்கணக்கான ஜீவர்களை இருளினின்றும் விடுவிக்கின்றான். அவ னது முயற்சியும் திட்டமும் இன்றியே அவனது முன்னிலையில் இருக்கும் பாக்கியத்தாலும் அல்லது அருட்பார்வையினாலும் ஜீவர்கள் விடுவிக்கப் படுகிறார்கள்.

46. புத்தக ஞானம், அனுபவ ஞானம் என்ற இரண்டில், புத்தக ஞானிகளின் அலங்கார வார்த்தைகளைக் கோடி கோடியாகக் கேட்பதி லும் அனுபவ ஞானிகளிடம் இருந்து ஒரு வார்த்தை கேட்டாலும் அதுவே உனது பிறவிப்பிணியை ஒழித்தற்குப் போதுமான மருந்தாகும்.

47. கடவுளின் உருவ வழிபாட்டில் இருந்துதான் அருவ வழி பாடு பிறக்கிறது. எந்தவழிபாட்டிலும் தவறு எதுவும் இல்லை. இஸ் லாமியர்கள் கூடுதலாக அருவவழிபாட்டில் ஈடுபடுகிறார்கள்.

48. அகந்தையே சகல பந்தங்களுக்கும் மூலம். மாற்றம் அடை யும் உலகை மாறாததாகக் காட்டுவதும் துக்கநிலையைச் சுகநிலையாக நம்பச்செய்வதும் இந்த அகந்தையின் (தனித்துவ முனைப்பு) வேலையே, மாயாசொரூபம் அகந்தையே. ஆகவே எமது எல்லாத் துன்பங்களுக் கும் மூலமான இந்த அகந்தையின் (தனித்துவ முனைப்பு, வியாபகம் அற்ற தன்மை, சுருங்கிய அணுத்தன்மை) வடிவத்தையும் இருப்பை யும் தெரிந்து அதை ஆத்மவிசார ஞானத்தால் இல்லாது செய்துவிட் டால் இன்றே இப்பொழுதே மனிதன் அழியாநிலை அடைகின்றான். இதற்குக் குரு அனுக்கிரகம் தேவை.

49. உடம்பையே நம்புவது (தேகாத்மபுத்தி) அஞ்ஞானம் எனப் படுகிறது. இந்தத் தவறான நம்பிக்கை அற்றாலன்றி ஞானம் சித்திப்ப தில்லை. இதற்கு வேதசாஸ்திரங்களில் எண்ணிறந்த வழிகள் சொல்லப் பட்டிருந்தாலும் இதயபூர்வமாகச் செய்யப்படும் ஆத்மவிசாரமே (நான் யார்? உலகம் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கே போகிறேன் போன்ற பல கேள்விகளுக்கு விடைகாண்பது) நேரான சுலபமான

வழியாகும். இதனையொட்டியே எமது சிவசாமியும் பத்தில் ஏழுபங்கு ஆத்மவிசாரம் என்றார். நாம் காணக்கூடிய அனுபவ ஞானத்தை அளிக்க வல்லது இவ்வாத்மவிசாரமேயாம்.

50. பொருளால் (பணத்தால்) அருளை அடையமுடியாது. பணத்தால் ஞானத்தையும் மோட்சத்தையும் விலைக்கு வாங்கிவிடுவோமென நம்புவது வீணே. ஆனால் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட தர்மகாரியங்கள் வீணல்ல. அவை மனதில் உள்ள அழுக்கை (சுருங்கிய தனித்துவத்தை) அகற்றி ஞானத்திற்கும் மோட்சத்திற்கும் ஒருவனை அதிகாரியாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

51. மனமற்றநிலையே மோட்சமென்று சாஸ்திரங்கள் (சமய நூல்கள்) கூறுகின்றன. இந்த மனத்தின் நீக்கம் இரண்டுவகைப்படும், ஒன்று மனோலயம் (இது தற்காலிகமானது). மற்றொன்று மனோநாசம் (இது நிரந்தரமானது). தியானம் முதலியவற்றால் ஆரம்பத்தில் அடிக்கடி மனோலயம் (மனவொடுக்கம்) ஏற்படும். அப்படி லயப்பட்டிருந்த வரையில் சாதகனுக்கு பரிபூரண சித்தோபசாந்தி ஏற்படுவதால் சிலர் அந்த நிலையை மனமற்ற மோட்சநிலை என்று நம்பி ஏமாறுகிறார்கள். லயித்த மனது மீண்டும் எழும், அப்படி எழுந்தால் அது சாதகனை மீண்டும் பிரபஞ்ச வாசனையில் தள்ளும். அதனால் மனோநாசமே சரியான வழியாகும். இந்த மன அழிவு எண்ணங்களின் மூலத்தை விசாரிப்பதாலும் எழும் ஒவ்வொரு எண்ணத்தையும் மூலத்திலேயே அழிவு செய்வதாலும்தான் ஏற்படுகிறது, தான் பரப்பிரம்மம் என்ற விளக்கத்தில் மனம் அழியும். இதற்குத்தான் ஆத்மவிசாரம் என்று பெயர்.

52. சமாதி ஆனந்தமே இணையற்றது. மற்றைய ஆனந்தங்களை அனுபவிப்பதற்கு மனம்வேண்டும்; மனதால் அனுபவிக்கப்படும் ஆனந்தம் நித்தியமாய் இருக்கமுடியாது. சமாதியானந்தமோ மனம் நசிந்த இடத்தில் விளங்கக்கூடியதாகையால் அது இயற்கையானது. நித்தியமானது. அதாவது ஆத்மாவின் சொந்த இயல்பாகும்.

53. சிலர் ஹடயோகத்தின்மூலம் சித்திபெற முயல்கிறார்கள். சிலர் பெற்றும் இருக்கிறார்கள். இந்தச் சித்தின் பயனெல்லாம் உலக பந்தமேயன்றி வேறில்லை. பிறவிப்பெருங் கடலில் நின்றும் விடுதலை பெறவேண்டும். ஒரு விவேகி இத்தகைய தவறுள்ள வழிகளில் புத்தியைச் சிறிதும் செலுத்தக்கூடாது. சித்துவழி பொதுவாக 'நான் உடம்பு' என்ற நினைப்பை பலப்படுத்துவதாகவே முடிவதால் புத்திமான்கள் அதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

54. ஞானம் இல்லாமல் அஞ்ஞானம் இல்லை. ஞானம் எல்லோருக்கும் இயற்கையாகவே கடவுளால் அருளப்பட்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு ஜீவனும் தன்னை ஆத்மா என்று உணருகின்றபோது ஞானம் இயல்பாகவே வெளிநிற்கும். அறிவானது காரியமான உலகை நாடுகிறபோது அஞ்ஞானம் என்றும் காரணமான பிரமத்தை நாடுகிறபோது மெய்ஞ்ஞானமென்றும் கூறப்படுவதால் ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள ஞானத்தில் உள்ள குற்றத்தை நீக்க முயற்சிப்பதே மெய்ஞ்ஞானத்தை அடைய முயற்சிப்பதாகும்.

55. வாய்பேசாது மௌனமாய் இருப்பது உண்மையான மௌனம் அல்ல. மனம் அடங்கி ஆத்ம நினைப்பில் இருப்பதே உண்மையான மௌனம்.

56. பிராணயாமம் மனம் அடங்க உதவுகிறது. இதனை குரு ஒருவரின் மூலமாகவே பயிலவேண்டும். பத்தி, விசுவாசம் முதலியவற்றால் ஏற்படும் மனவடக்கம் குரு இல்லாமலே கைகூடும். இது ஆபத்து அற்றது.

57. பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம் எனப்படும் மூன்று வினைகளில், ஞானி ஒருவன் சஞ்சிதம், ஆகாமியம் இரண்டையும் வெற்றிபெறலாம். பிராரப்தவினையை (முற்பிறப்பில் அனுபவித்து முடிக்கப்படாத), ஞானியும்கூட சரீரம் உள்ளவரைக்கும் வெல்வது கடினம். எனினும் ஒரு ஜீவன் முத்தனை பிராரப்தம் கைப்பற்ற முடியாது. ஏனென்றால் குருவருள் மும்மலங்களையும் வலிகெடுத்துவிடுகிறது.

58. மனதை அடக்கவேண்டும் என்ற அவாவாலும் வைராக்கியத்தாலும் முரட்டு வழிகளைக் கைக்கொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால் மீண்டும் மீண்டும் மனமும் அதிவேகத்துடன் தலைகாட்டிக் கொண்டே இருக்கும். அமைதியான வழியில் தினமும் மனதிலுள்ள இராசத, தமோ குணங்களைப் போக்கவேண்டும். இராசத, தமோகுண நீக்கமே மன நீக்கம் எனப்படும்.

59. சாஸ்திரங்களின் கூற்றுப்படி, சாதனையின் முதிர்ச்சியால் ஒருவனுக்கு நிர்விகல்பசமாதி (ஒன்றேயான முத்திநிலைச்சமாதி) கைகூடுவதற்குச் சிலதினங்களுக்குமுன் மனமானது கட்டுக்கடங்காத காளை போல் பேயாட்டமாடி சாதகனுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்து திடீரென முழுதும் ஒடுங்கிவிடும். இந்நிலை சுமார் ஏழு தினங்கள்வரை இருக்கும். காயசுத்தி இருந்தால் மேலும் சிலநாட்கள் கூடுதலாக இந்நிலை இருக்கும். இந்தநிலையில் தக்க பாதுகாப்பு இல்லாவிட்டால் மகா சமாதி அடைந்துவிட்டதாக நினைத்து பாமரர்கள் அவ்வுடலைச் சமாதி செய்ய நேரிடும்.

60. அவதார புருடனுக்கும் பரம ஞானிக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. அதர்மங்களை அழித்து குறிப்பிட்ட சில தர்ம மார்க்கங்களை சுருதி, யுக்தி அனுபவத்திற்கு ஏற்றபடி நிலைநாட்டி உலகினரைப் பரந்த அளவில் ஆத்மீக வழிக்குத் திருப்பிவிடுவதோடு அவதார புருடன் வேலை முடிந்துவிடுகிறது. இது ஞானத்திற்கு அத்திபாரம் இடுவதாகும். ஆனால் பரமஞானியோ சுருதி, யுக்தி அனுபவங்களுக்கு எட்டாதபடி அதீத நிலையடைந்து சாட்சாத் பரம்பொருளாகவே விளங்கி தன்னை அடைந்தோரையும் அந்தநிலையில் சேர்த்து அவர்களது பிறவிப் பிணியை அப்பொழுதே தொலைத்துவிடுகிறான்.

61. காமியத் தவத்தால் அட்டமாசித்திகளைப் பெறலாம். அதோடு திருப்தி அடைந்துவிடாமல், காமிய தவத்தால் (பற்றோடு கூடிய ஆத்மீக ஒழுக்கம்) கிடைத்த மன ஒருமைப்பாட்டைக் கொண்டு நிஷ்காமிய தவத்தைத் தொடங்கினால் பேரின்பம் பெறலாம். அழியாத ஜீவன் முத்தி பதமும் பெறலாம்.

62. சச்சிதானந்த வடிவமே ஆத்மா. அதாவது உனது ஆத்மா சத்தானது சித்தானது ஆனந்தமானது. இதனை பெயரும் வடிவமும் கொண்ட (நாமரூபமயமான) உலகப் பொருளிலிருந்து அடையமுடியாது- இத்த நாமரூப பிரபஞ்சங்களைத் தாண்டினால்தான் ஆத்மாவை அறியவும் அடையவும் முடியும்.

63. மனதைஅடக்க பிராணாயாமம் முதலிய சாதனைகளிலும்பார்க்க ஆத்மவிசாரமே நேர்ச்சாதனம். இதனால் உடனே பலன் கிடைக்கிறது. இச்சாதனம் எளிதாகவும் இயல்பாகவும் தோன்றும்.

64. ஊனக் கண்களை மூடிக்கிடப்பது சமாதி ஆகாது. சமாதி எனின் அகக்கண் (நெற்றிக் கண், ஞானக் கண்) விழிப்படையவேண்டும். அகக்கண்ணில் தோன்றும் ஒளியைக் காணவேண்டும். உள்ளும் புறம்பும் பரப்பிரம்மம் உண்டு.

65. சமாதியினின்றும் தெளிந்து மேல்நிலைக்கு வரும்போது ஏக திருஷ்டியுடையவனாக (ஒரு பார்வையுடையவனாக) தானென்னும் ஒரே நிலையை மட்டும் உள்ளவனாகின்றான். இதற்குமேல் தான் நிர்விகல்ப்பத்தை அடையமுடியும். இதைப் பெற்றவனே அழிவற்ற நித்திய ஆத்மாவாகவும் துரியாதீதமான பரிபூரண பிரம்மசாட்சாத்காரமுடையவனாகவும் விளங்குவான்.

66. ஒருவனுக்கு அறியாமை என்னும் ஜீவத்துவம் அற்றவுடனேயே அவன் ஜீவன் முத்தனாகிவிடுகிறான். ஆனால் அவனது உடல் அற்றுப்போய்விடுவதில்லை. பிராரப்த வினைப்போகம் தீருமட்டும் உடல் இருந்தே தீரும். அப்படிப்பட்ட உடலோடுகூடிய முக்திநிலைக்கே ஜீவன்முக்தி என்று பெயர். வினைமுடிந்து உடல் விழுந்தபிறகு அதே முத்திநிலைக்கே விதேகமுத்தி (தேகமற்ற) என்று பெயர். ஜீவன் முக்தி, விதேகமுக்தி நிலைகளுக்குள்ளே பேதம் இவ்வளவே.

67. கடவுளை நம்பு. அவரே அகில உலகையும் படைத்துக் காப்பவர். உனது உடல் பாரத்தையும் குடும்பப் பாரத்தையும் அவரிடமே முழுமையாக ஒப்படைத்துவிட்டாயேயானால் பிறகு எவ்வித துன்பமும் உன்னைத் தொடராது.

68. வீட்டில் இருந்தாலும் காட்டில் இருந்தாலும் குடும்பகாரனாய் இருந்தாலும் நான், எனது என்ற இரண்டையும் நீக்கும் அளவும் பற்று அறுவது இல்லை.

69. நான், எனது என்னும் அகங்கார மமகாரங்களே சம்சார மாயை. அவை மனத்தில் உள்ளன. மனத்தினின்றும் அவற்றைத் துறப்பதே துறவின் உண்மையாகும்.

70. நான் சந்நியாசி என்னும் பாவனையுடைய ஓர் சந்நியாசியைப் பார்க்கிலும் நான் சம்சாரியென்னும் பாவனை இல்லாத (அ-து, சம்சாரப் பற்றுக்குறைந்த) ஓர் சம்சாரி கோடிபங்கு உயர்ந்தவனாவான்.

71. இந்திரியங்களின் வழி (பொறிகளால் ஏற்படும் புலன்வழி) செல்லாதே. அவைகளே உன்னை சன்மார்க்கத்திற்குச் செல்லவொட்டாமல் தடுக்கும் பகைவர்கள். எப்போதும் அவைகளை உன்வசத்தில் அடக்கி வைத்திரு.

72. தேகம் நீ என்ற நினைப்பிருந்தால் ஆத்மா தோன்றாது, ஆத்மா நீ என்ற நினைப்பிருந்தால் தேகம் தோன்றாது. தேகம் நீ என்ற புத்தி நீங்கினால் உன் சுயரூபமான ஆத்மஜோதி பிரகாசிக்கும்.

73. அதிக வார்த்தை, அதிக உணவு, அதிக உழைப்பு — இவை நித்திரைக்குக் காரணம். களைப்பாலும் நித்திரையாலும் தவவொழுக்கங்களுக்குத் தடைவராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

74. அதிகமான சாஸ்திரப் படிப்பாலும் ஞானம் வந்துவிடாது. அதிகப் படிப்பால் அதிக வாசனைகள்தான் வரும். வித்யா கர்வமும் உண்டாகும். இவற்றை நீக்குவது எளிதல்ல. குருமொழி ஒன்றே ஞானமடைவதற்குப் போதுமானது.

75. குருவைப்பற்றிப் பரிபூரணமாக நம்பு. வெளித்தோற்றத்தில் அவரிடம் காணப்படும் குறைபாடுகளைக் கண்டு அவரிடம் சந்தேகம்கொள்ளாதே. அவர் எவ்வளவு ஆசார ஒழுக்கம் அற்றவராகக் காணப்பட்டாலும் அவரிடம் நீ வைக்கும் பரிபூரண விசுவாசமே உன்னை நிட்சயமாய்க் கதி சேர்ப்பது என்பதில் ஐயமில்லை.

76. உடலுக்கு உள்ளே அல்லது வெளியே காணப்படும் பொருள்கள் யாவும் பிரபஞ்சமே. இதற்கு ஆதாரமாய் இருக்கும் ஆண்டவனைக் காணுதலே ஞானதிருஷ்டியாகும்.

77. மனதில் எண்ணங்கள் தோன்றிக்கொண்டு இருக்கும்வரையில் சாதனையைக் கைவிடக்கூடாது. பிரயத்தனம் இல்லாமலே மனவொடுக்கம் ஏற்பட்டால் அதற்குமேல் எந்தச் சாதனைகளும் தேவையில்லை.

78. சுகமோ துக்கமோ, லாபமோ நட்டமோ, நன்மையோ தீமையோ எல்லாம் கடவுள் செயலென்று தீர்மானித்து மனதை ஈடாட்டம் இல்லாத அமைதிப் பொருளாக வைத்திருக்கப் பழகு.

79. சரியையோ, கிரியையோ, யோகமோ, ஞானமோ எல்லாம் இறைவனை அடைய வழிவகுப்பன. பாதையில் ஒன்றும் இல்லை. மனப் பரிசுத்தமே முக்கியம். மனக்குற்றம் தீராதவகையில் எந்த உயர்ந்த சாதனங்களாலும் ஆத்மதரிசனம் பெறமுடியாது.

80. எல்லா ஜீவர்களிலும் ஈசனையே பார். தேகஅமைப்பு வேறுபாட்டைப் பொருட்படுத்தாதே. எறும்புமுதல் யானை ஈருன எல்லா ஜீவர்களின் சரீரங்களிலும் ஈசனே உயிர்வடிவாய் இருப்பதால் சம நோக்குடன் உயிர்களிடத்தில் அன்பாயிரு. மேலும் உள்ளபடி கூறுவ தாயின நீயே எல்லா உயிர்களிலும் இருக்கிறாய். அவர்கள் நிறைவே உன் நிறைவு.

81. அவரவர் குற்றத்திற்கு ஏற்ற பலனை அவரவரே அடைய வேண்டி இருப்பதால் பிறர் குற்றங்களைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம். அவைகளைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு கடவுளைச் சார்ந்ததாகும்.

82. ஆசையற்ற இடமே அருள் பிரகாசிக்கும் இடமாகையால் மனத்தில் உள்ள எல்லா இச்சைகளையும் ஒவ்வொன்ருகப் பரிசீலனை செய்து விலக்கிவிடு. வருவது வந்தேதீரும். நாம் விருப்பு அல்லது வெறுப்புக்கொள்வதால் யாதொரு பலனும் இல்லை.

83. சலனமே (மன ஈடாட்டம்) பந்தம், நிர்ச்சலனமே முத்தி.

84. மனம் போன போக்கெல்லாம் போகாதிருக்கப் பழகுதலே உயர்ந்த சாதனமாகும்.

85. நாவின் சுவைக்கு அடிமைப்படாதே. ஆண்டவன் கட்டளைப்படி கிடைத்ததைக்கொண்டு பசியைப் போக்கு. குளிர் வெப்பம் இவற்றையும் பொறுத்துக்கொள்.

86. 'நான் இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன்' என்ற எண்ணமில்லாமல் செய்யுங்காரியங்கள் தீயனவாய் இருந்தாலும் அவற்ருல் ஞானிக்கு ஒரு பாவமும் இல்லை. ஆனல் மற்றவர்கள், தானே செயலுக்குக் கர்த்தா என்ற நினைப்போடு செய்யும் காரியம் புண்ணியமானதாய் இருந்தாலும் அதனல் பந்தமுண்டு.

87. அடக்கமே உயர்வுக்கு வழி. உன்னிடத்தில் உள்ள சக்திகளைப் பிறர் அறியவேண்டுமென விரும்பாதே. அத்தகைய விருப்பமே முடிவில் உன்னை ஒரு பெரிய பற்றுள்ள உலக விடயகாரனுக மாற்றிவிடும்.

88. பிறர் உன்னிடத்தில் காணும் சித்திகளை (எல்லாவிதமான ஆற்றல்களை) ஈசன் செயலென்று உணர். அவரே உன் உடலைக் கருவியாகக்கொண்டு சித்திகளைத் தோற்றுவிக்கிருர். அவற்றை உன்னுடையவைகளாகக் கருதினல் அதனல் உனக்குப் பெரிய துன்பமே உண்டாகும். இங்கு ஓர் உலக உதாரணம். நீ ஒரு B. Sc. பட்டதாரி என்று வைப்போம், ஆயின் நீ கற்ற புத்தகங்களை அமைத்தவர் யார்? உன்னை நோய் பிணி இல்லாமல் இதுவரை காப்பாற்றி வந்தது யார்? உனக்குப் போதித்த ஆசிரியர்கள் யார்? உனக்குப் பரீட்சை மண்டபங்களிலே ஒருவித கஷ்டங்களையும் தராமல் உன்னை உயரவைக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைத் தந்தவர் யார்? ஈற்றில் காலம், இடம் ஆகிய இரண்டும் யார்? எல்லாம் இறைவனே. ஆதலால் உனது சித்தி இறைவனதே. இந்த உண்மைக்குப் புறம்பாக நடப்பவர் பொய்யர் என்பது கருத்து.

89. புகழில் ஆசை வையாதே. புகழைப் போன்ற பகைவன் வேறில்லை. புகழ் இகழ் என்பன 'நீ தேகம்' என்ற நினைப்பில் அடங்கு

வன. 'நீ ஆத்மன்' என்ற நினைப்பிலே (ஒன்றே ஆத்மா) புகழேது? இகழேது? எல்லாம் மாறுதல் அடையும் பிரகிருதியின் (இயற்கையின்) விளையாட்டே.

90. யாருடைய தயவையும் நாடாதே. யாராலும் உனக்கு ஆகவேண்டியது யாதொன்றுமில்லை. ஈஸ்வரனை நம்பிய உனது யோக சேமங்களை (பொருள் முதலிய ஈந்து பிறநன்மைகளையும் செய்தல்) கவனிக்கவேண்டிய பொறுப்பு ஈஸ்வரனையே சார்ந்ததாகும். யாரிடத்திலும் விருப்போ வெறுப்போ கொள்ளவேண்டாம். பிறருடைய நிந்தனைகளையும் பாராட்டுதல்களையும் பொருட்படுத்தவேண்டாம்.

91. தேகமே நான் எனும் புத்தி நீங்கும்வரை நான் ஆத்மா, நான் சிவமே என்ற பாவம் வேண்டும். தேகம் நான் எனும் தேகாத்ம புத்தி நீங்கிவிட்டால் சிவோகம் (நான் சிவமே, ஆத்மாவே) பாவனை தேவையில்லை. அந்த நிலையில் நீ சிவமாகப் பிரகாசிப்பாய். மனோபாவனைக்கு இடம் இல்லாமல் போய்விடும்.

92. அனுபவ ஞானம் கிடைப்பது அருமை. அப்படிக்கிடைத்த ஞானத்தை நழுவாமல் திடப்படுத்திக்கொள்ள வேண்டும். கூடாத கூட்டத்தாலும் பல பிறப்பு பழக்க வாசனைகளாலும் காற்றில் ஏற்றிய தீபம்போல் கிடைத்த ஞானனுபவம் நழுவுவதுண்டு. கடைசிவரையில் எச்சரிக்கையாய் இருப்பதே நல்லது.

93. மத வாதங்களில் தலையிடாதே. எல்லா மதங்களும் ஒரே பிரமத்தை அடைதற்கான பல்வேறு மார்க்கங்கள்தான். எந்த மதத்தைத் தழுவினுலும் முடிவை அடையலாம். வழி வித்தியாசங்களில் சண்டையிட்டுக்கொள்வது அறியாமையாகும். எந்த வழியி ம் உறுதியான பற்றுதல்தான் முக்கியம்.

94. சிலர் நூல்கள் மூலமாக மகாவாக்கிய விசாரணை செய்து தான் பிரம்மம் என்ற நிட்சயத்தோடு திருப்தி அடைந்துவிடுகிறுர்கள். இதனுல் பற்று அறுந்துவிடாது. மருந்தின் பெயரைச் சொல்வதால் வியாதி போய்விடாது. நெருப்பு என்று வாயால் கூறிவிடுவதால் அது சுட்டுவிடாது. இதுவரை உடம்பில் சேர்ந்திருந்த மனம் ஆத்மாவில் இரண்டற ஐக்கியமாகவேண்டும். இதற்கு நெடுங்கால சாதனை வேண்டும்.

95. சிலர் அபரோக்ஷ ஞானம் பெற்ற பின்னரும் ஜபம், தியானம் முதலிய சாதனைகளைச் செய்வதுண்டு. இதற்குக் காரணம் மனதில்

உள்ள வாசனைகள் நீங்கும்பொருட்டும் மன ஒருமைப்பாடு வாய்க்கும் பொருட்டும்தான். இதனுல் அபரோக்ச ஞானத்திற்குப் பலமேயொழிய குறையொன்றுமில்லை.

96. ஞானமார்க்கத்தின் இரு பெரும் பிரிவுகளான வேதாந்த, சித்தாந்தங்களைப்பற்றிச் சந்தேகம் வேண்டாம். பரமாத்ம தரிசனத்தில் நான் என்னும் தனிமுதல் ஒன்றும் கிடையாது. உள்ளது பரமாத்மாவே, அதற்கு வேறுபட்டது ஒன்றுமில்லை என்பது வேதாந்தம். (இது ஆதிசங்கரர் நிலைநிறுத்தியது). எனது என்று எனக்கு ஒரு சுதந்திரமும் கிடையாது. எல்லாம் பரமாத்மாவினுடையதே. அவர் முன்னிலையில் நான் தற்செயலற்ற ஒரு கருவி மாத்திரமே என்பது சித்தாந்தம். (இது மத்துவர் நிலைநிறுத்தியது. தமிழில் மெய்கண்டார் நிலைநிறுத்தியது). நான் இல்லை என்பதுவும் எனது இல்லை என்பதுவும் ஒரு பொருள்தான். இந்த இரண்டில் ஒன்று அகன்றால் மற்றது தானுகவே அகலும். இதில் விவாதத்திற்கு இடமேது? மேலும் ஒரு விளக்கம். பரந்திருக்கும் தன்மையைச் சுருக்கி அணுத்தன்மையாக்கியது ஆணவம் என்பது சித்தாந்தம். ஆணவமாகிய அணுத்தன்மை திருவருளால் நீக்கம் பெற்றவுடன் வியாபகம் (பரந்திருக்கும் தன்மை) கூடுகிறது என்று அது கூறுகிறது. வேதாந்தத்திலும், சுருங்கிய ஜீவத்துவம் நீங்கி ஆத்ம பரத்துவம் பெறவே சிவோகம் பாவனை செய்யப்படுகின்றது. நன்ருக ஆராய்ந்தால், சங்கரரின் அத்வைதமும் இராமானுஜரின் விசிட்டா அத்வைதமும் (சில நிபந்தனைகளோடு கூடிய அத்வைதம்) மத்துவருடைய துவைதமும் (சித்தாந்த முப்பொருள் தத்துவம்) பரம்பொருள் ஒருவரே எங்கும் உள்ளார் என்ற கருத்திலேயே முடிவடைகின்றன.

97. சிலர் முத்தியிலும் பலவகை என்று கூறிக் குழப்பம் அடைகின்றனர். அகங்கார மமகாரங்களே பந்தம் என்று தெரிந்தபின் முதலில் அவ்விரண்டையும் தாண்டிய பிறகன்ருே முத்தியைப்பற்றிச் சிந்திக்கவும் பேசவும் உரிமை ஏற்படும். நான் என்ற தனித்துவ பாவனை அழியும்போதே எல்லா வாதங்களும் (வேதாந்த, சித்தாந்த, மற்றும் எல்லா) அழிந்துவிடுகின்றன.

98. சிலர் சந்நியாசம் பெற்ருல்தான் எவராயினும் ஞானம் பெறக்கூடுமென்று தவருக நினைக்கிருர்கள். ஞானமடைதற்கான நான்கு ஆச்சிரம தர்மங்களில் சந்நியாசமும் ஒன்று. சந்நியாசத்தால் அடையும் ஞானத்தை மற்றைய மூன்று ஆச்சிரமங்களில் இருந்தும் (மாணவ, இல்லற, வானப்பிரஸ்த) அடையலாம். ஞானமடைய வேண்டிய நிபந்தனை அந்தந்த ஆச்சிரம ஒழுக்கங்களினின்றும் பிறழாதிருத்தல்.

99. ஞானியின் வெளிவிடயங்களில் எவ்வித கட்டுப்பாடும் இல்லை. பிராரப்த வினைக்கேற்ப அவ்விவகாரங்கள் நடக்கின்றன. பிராரப்தமோ பலவகைப்பட்டவை, விவகாரங்களும் பலவகைப்பட்டிருக்கலாம். ஆனால் அவ்விவகாரங்களில் ஞானிக்குச் சிந்தனையோ நுகர்வோ இல்லை. இதுதான் ஞானத்திற்கு அடையாளம். ஆதலால் வெளிவிவகாரங்களைக்கொண்டு யாரையும் பரீட்சிக்க முயலவேண்டாம்.

100. ஆத்மாவின் இருப்பிடம் இருதயக்குகை என்று வேதசாஸ்திரங்களும் ஞானிகளும் கூறுகின்றனர். சரியாகக் கூறினால் புத்தியாகிய அந்தக்கரணம் முழுவதும் விருத்தி அடைந்த நிலையே இருதயக் குகை ஆகும். புத்தி உலகவிஷயங்களைப் பற்றாமல் ஆத்மாவைப் பிரதிபலித்து நிற்கின்ற நிலையே விடுதலைபெற்ற ஆனந்தநிலை. இதுதான் ஒருவனுடைய சுபாவநிலை. இயல்பான நிலை.

101. ஒருவன் சமாதியை நோக்கி முன்னேறிக்கொண்டுபோகும் வேளையில், பழைய வாசனைகளால் அவனுக்கு இடையூறு ஏற்படலாம். அவை அவனைப் பாதிக்கச்செய்யும். எனினும் நாளடைவில் அந்த வாசனைகளின் வீரியமும் வேகமும் குறைந்து வருவதால் அவை வறுத்த விதைக்குச் (அதாவது முளைகிழம்பும் உயிர்ப்பற்ற) சமானமாகின்றன.

102. மனம் ஒரே இலட்சியத்தைப் பற்றிக்கொண்டு இருக்கும் நிலையில்தான் யோகப்பியாச சமாதிநிலை சித்திக்கும். மனம் சஞ்சலப்பட்டால் யோகப்பியாச சமாதிநிலை கிட்டாது.

103. மனம், புத்தி போன்ற கருவிகளின் விருத்திகள் (வெளித்தொழிற்பாடுகள்) அடங்கும்போது ஒருவன் தனது சுபாவநிலையிலேயே இருக்கிறான். ஆனந்த அத்துவிதநிலை. விருத்திகள் நிகழும்போது அவன் விருத்திகளுடன் சம்பந்தப்பட்டு விருத்திரூபத்தை அடைகிறான்.

104. சாதனைகள், விசாரம், வைராக்கியம் (துறவு) என்ற உபயங்களால் விருத்திகள் அடங்குகின்றன. சத்துவகுணம் மேலிடும்போது விருத்திகள் உள்முகப்பட்டு ஞானமடையும் முயற்சியிலும் இராசத, தாமதகுணம் மேலிடும்போது உலக பாசங்களில் ஈடுபடும் முற்யசியிலும் இறங்கிவிடுகின்றன. ஆகையால் புத்திமான்கள் வைராக்கியத்தினால் மனம் உலகவிடயங்களில் செல்வதைத் தடுத்து நிரந்தரப் பயிற்சியால் முத்திநிலையடைய முயற்சிக்கவேண்டும். மனதை உறுதிப்படுத்தும் முயற்சியே பயிற்சி (அப்பியாசம்) எனப்படும்.

105. புறவுலகத் தோற்றங்கள் மனதைக் கவர்ந்து மனத்தின் கண் காமம் கோபம் முதலிய குற்றங்களை உண்டுபண்ணுகின்றன. உலக விஷயங்களாலன்றி மனதிற்கு காமக்குரோதாதி தோஷங்கள் கிடையா. விஷயங்களை மனம் கிரகிக்கிறதென்றால் மனம் தான் கிரகிக்கும் விஷயங்களின் பரிணாமத்தை (வளர்ச்சியினை) அடைகின்றது என அர்த்தம்.

106. சுத்தமான விருத்தியில் புருஷனுடனும் (ஆத்மாவுடனும்) அசுத்தமான விருத்தியில் விஷயங்களுடனும் மனம் சம்பந்தம் அடைகின்றது. மனதுக்கு புருஷனோடு சம்பந்தமில்லாத காலமே இல்லாமையால் சிலர் மனதையே ஆத்மா என்று பிரமிக்கிறார்கள்.

107. இதுவரை விவேகம் (பகுத்தறிவு) இல்லாமையால் விஷயாதிகள் மனதைப் பற்றிக்கொண்டு இருந்தன. அதனால் மனம் சம்சார (உலகபந்த) மார்க்கத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இப்போது ஆத்மா வேறு, உடலும் அதனோடு ஒட்டிய விஷயாதிகளும் மாறுதல் அடையும் இயற்கையே (பிரகிருதி) என்ற விவேகம் ஏற்பட்டுவிட்டதால் இனி அந்த மனம் கைவல்ய பாவனையை நோக்கிச் (முத்தி வழி) சென்று பேரானந்தம் அடைய முயற்சிக்கும்.

108. மனிதப்பிறவி அதிஉத்தமமானது. தேவபிறவியிலும் மேலானது. ஆனால் ஒரு மனிதன் தனது பிறவி இலட்சியத்தை அறியவும் அடையவும் தவறினால் அவனைப்போன்ற தாழ்ந்த பிறவி வேறொன்றும் இருக்கமுடியாது. உண்ணல், உறங்கல், மைதுனம் என்பவைகளோடு மனிதனின் வேலை முடிந்துவிடவில்லை. இவை எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவானவையே. இந்த உண்ணல் உறங்கல் புணர்தல் போன்ற அனுபவத்திற்கு உயர்ந்த மனிதப்பிறவி வேண்டுமென்கின்ற அவசியமில்லை. அதாவது மனிதன் தெய்வநிலையை அடையக் கடமைப்பட்டவன் என்பது கருத்து.

# 4. சாயி சரவணமுத்துவின் அற்புதம் கலந்த வரலாறு

இப்போது பலராலும் பகவான் என்றும் சாயி சரவணமுத்து என்றும் அழைக்கப்படும் எஸ். வி. சரவணமுத்து முன்பு போட் ராக்ரர் கம்பனி ஒன்றின் வடமாகாண சப்—டீலர் ஆக தொழில் செய்தவர். ஒருமுறை அரசாங்கம் தேசிய மயமாக்கல் சட்டத்தின்கீழ் கம்பனிகளைப் பொறுப்பேற்றபோது, பெருநட்டமடைந்து தொழிலை மூடினார். பகவான் சாயி பாபாவுக்கு கடிதம் எழுதி அனுப்பிவிட்டு பேசாமல் இருந்துவிட்டார். ஒரு மாதத்திற்குப் பின்பு இவருடைய கம்பனி மனேஜர் ஆ. அமிர்தலிங்கம் என்பவர் இவரை அழைத்துக்கொண்டு புட்டபர்த்தி சென்றார். அன்று 17-10-67, காலை நேரம். தரிசனத்துக்காக புட்டபர்த்தியில் பிரசாந்திநிலைய முன்றலில் மக்கள் காத்திருக்கும் வேளை இவர்களும் சென்று சேர்ந்து கொண்டார்கள். தமது அறையில் நின்றும் பகவான் புறப்பட்டு நேரே சரவணமுத்துவிடம் வந்து இரண்டு மூன்று நிமிட பார்வை (நயன திட்சை) செய்தார். சரவணமுத்துவின் இருதயம் மிகவேகமாக அடிக்கத் துவங்கியது. மறுபடியும் பாபா நேரடியாக அறைக்குட் சென்றுவிட்டார். இவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்து இருந்ததுபோல் இருந்ததாம் அந்த நிகழ்ச்சி. அன்று பின்னேரம் பிரசாந்திநிலைய மண்டபத்தில் பஜனைக்காக மக்கள் கூடியபோது சரவணமுத்துவும் ஆண்கள் பக்கத்தில் ஒரு சுவர்க்கரையோரமாக அமர்ந்துகொண்டார். பகவான் அங்கு பஜனை முன்பாக வந்து ஆசனத்து அமர்ந்து பாடிக்கொண்டிருந்தார். ஒருசமயம் பாபா தமது வலக்கரத்தை உயர்த்தி அபயம் கொடுத்தபோது சரவணமுத்துவுக்கு உள்ளங்கையினின்றும் ஞான ஒளிக் காட்சி கிடைத்தது. மறுபடியும் பாபா தமது இடக்கரத்தைத் தூக்கி அபயம் செய்தபோதும் ஞான ஒளிக்காட்சி சரவணமுத்துவுக்குக் கிடைத்தது.

அடுத்த நாள் காலை மக்கள் பகவான் தரிசனத்துக்காகக் கூடி இருக்கும் வேளை (1967ஆம் ஆண்டு ஐப்பசி 18ஆம் திகதி) சரவணமுத்து தமது கையிலே சாயி பாபாவின் சரித்திரப் புத்தகம் ஒன்றைக் கையில் வைத்திருந்தார். அதில் உள்ள சாயி படத்தில் சந்தனப் பொட்டோ குங்குமப் பொட்டோ இடப்படாது இருப்பதைக் கண்டு தமது பேனாவால் பொட்டு வைத்தபோது அந்தச் சாயிப்படம் திடீரென தலைகீழாக மாறியதை அவதானித்த சரவணமுத்து பிரமிப்புடன் தலையை நிமிர்த்தி ஆகாயத்தைப் பார்த்தார். அந்தச்சமயம் ஆகாயத்தினின்றும் பிரமிக்

சுத்தக்க ஒளிவடிவில் சிவபெருமான் இறங்கி வரலானுர். சடாபாரம், பிறை, நெற்றிக்கண், உயிர் நாகம், புலித்தோல் எல்லாம் ஒளிமயமா கவே. முழங்காலுக்குக்கீழே காட்சி மறைக்கப்பட்டபடி. இறங்கிய உருவம் சந்நியாசி உருவுடைய ஊன உடம்புபோல் ஆகி பிரசாந்தி நிலைய வெளிச்சாரில் இருந்தது. பிறகு அந்தச் சந்நியாசி மறைந்து விட்டான். சரவணமுத்தோ அந்தச் சாரில் நின்று பேயர்போலும் பிள்ளைகள் போலும் அழத்தொடங்கினுர். அன்று மாலை, மிகவும் களைப் புற்ற அவர் பாய்விரித்து ஒரு வேப்பமரத்திற்குக்கீழே படுத்திருந்தார். பகவான் தரிசனம் கொடுக்க வந்தபோது, இவரை அழைத்துச் சென்ற அமிர்தலிங்கம் மாஸ்ரர் இவரைப் பார்த்து பகவான் தரிசனம் பார்க்க எழும்பு என்று கூறியபோது "எனக்கு அவரை ஆரென்று தெரியும். அவருக்கும் என்னை ஆரென்று தெரியும். அவர் வேண்டுமென்ருல் கிட்டே வருவார்" என்று சரவணமுத்து பதிலளித்தாராம். சித்தப் பிரமை பிடித்த நிலைபோல் உள்ள நிலையில், சாயியின் அருட்பிரகாரம் ஒருநாளைக்கு முன்னதாகவே விமான ஆசனங்கள் கிடைத்து யாழ்ப் பாணம் வந்து சேர்ந்துகொண்டார். காலம் சென்ற அரியாலை மன நோய் வைத்தியர் டாக்டர் அருளம்பலம் இவருக்கு ஒரு ஊசி மருந்து ஏற்றி அடுத்தநாள் சுகமாக்கி அனுப்பினுராம். அன்றிலிருந்து இன்று வரை இவர் சாயி சேவையை ஆற்றி வருகிருர்.

இவர் தமது குடும்பத்தோடு எதுவித கோபதாபமும் இல்லாமல், குடும்பத்தின் அனுசரணையோடும் ஆதரவோடும் பிறிதான ஒரு இல்லத் திலே தங்கி வருகிருர். குடும்பப் பாரமெல்லாம் சாயி பொறுப்பாகி விட்டது. அவ்வவ்வேளைகளில் தனது குடும்ப நன்மை தீமைகளில் கலந்து வருகிருர். விவேகானந்தன் தனது தாய், சகோதரிகளை இறை வன் பொறுப்பாக்கிவிட்டு ராமகிருஷ்ணரோடு சேர்ந்தவிதமாக இவரும் சாயியோடு சேர்ந்து சாயி சேவை ஆற்றிவருகிருர். குடும்பமோ எவ் வித குறையுமின்றி என்றும் நிறைவாகவே வாழ்ந்து வருகிறது.

சாயி சரவணமுத்து ஒரு ஞானப்போக்கு உடையவர். அத்வைத விளக்கம் இயல்பாகவே உடையவர். எந்தப் புத்தகத்திலோ வேறு ஞானிகள் வாயிலோ கிடைக்க முடியாத அத்வைத விளக்கத்தை இவ ரிடம் கேட்டறியலாம். பிறப்பில் இருந்து மச்சம் மாமிசம் உண்டு வரும் இந்த ஞானி தொடர்ந்தும் அதே உணவையே உண்டுவருகிருர். வாலிபத்தில் இருந்து புகைத்தலைச் செய்துவந்த இவர் தொடர்ந்தும் புகைத்துக்கொண்டே இருக்கிருர். புகைத்தல் மற்றய ஞானியர் வாழ் வில் உள்ளபடி இவரிடமும் உண்டு. விவேகானந்தர் முதலாய பல

ஞானிகள் புகைத்தலைச் செய்துவந்தது நாம் அறிந்ததே. நித்திய பிரமச்சாரியான விவேகானந்தன் தான் மாமிசம் சாப்பிட்ட சம்பவங்களைத் தமது நூலில் கூறுகிறார். யேசுவும் பத்தர்களுக்கு மீன்பொரியல் இட்டு உணவருத்தியதும் நாம் அறிந்ததே. சிவ அவதாரமான சாயியோ மச்சக் குடும்பத்தில் பிறந்தாலும் மச்ச மாமிசத்தையும் மற்றும் பால் முதலியவற்றையும் தவிர்த்துக்கொண்டார். சாயி தவறான ஒன்றையும் செய்யாது. ஏனெனில் அதுவே இந்த உலகு இதுவரை கண்ட அதிஉத்தம தெய்வப்பிறவி. ஆனால் நம்போன்றவர்கள் சாத்வீக உணவை உண்ணவேண்டும் என்று சொல்லப்படும்போது மரக்கறிகளிலும் ராசத தாமத உணவை நீக்கவேண்டும் என்றல்லவா பொருள். அதிக பாலும் மச்ச உணவே. பாலைக் கன்று குடிக்கவொட்டாது தடுத்து நாம் குடிப்பதுவும் உயிர் வதையே. சாயியைப்போல் நாம் வாழமுடியாது. ''நமது வாயினால் நுகரப்படும் இவைமட்டும் உணவாகாது. நமது ஐந்து புலன்களாலும் நுகரப்படுவனவும் உணவே. இவ்வகையான எல்லா உணவுகளிலும் சாத்வீக உணவைத் தெரிந்து உண்ணவேண்டும்'' என்று பகவான் ஆத்மீக சாதகர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

சாயி சரவணமுத்துவின் தெய்வீக வாக்குகள்பற்றி நான் கூறிக்கொள்ள விரும்புவது இது. இருபத்தைந்து அல்லது முப்பது சதவீதம் அவருடைய வாக்குத் தப்பியிருக்கிறது. நீங்கள் ஏன் தவறாக வரும்படியான வாக்குகளை மக்களுக்குக் கொடுக்கின்றீர்கள் என்று நான் கேட்டபொழுது, ''அது அவரவருடைய கர்ம பலன். நான் நானாகவே எதுவும் உரைப்பதில்லை. எனக்குக் கிடைப்பதையே நான் சொல்லுகிறேன். அவரவர் நம்பிக்கையையும் பொறுத்தது'' என்று கூறுவார். நான் அவதானித்த மாத்திரத்தில், இவர் கூறும் புத்திமதிகளையும், வாக்குக் கேட்பவர் பின்பற்றத்தவறுவதால் எல்லாம் தவறாகின்றது என்பதுவும் எனக்குப் படுகின்றது.

எத்தனையோ நோயாளிகள் இவரது ஆத்ம ஆசிர்வாதம்பெற வருகின்றபோது, நோயாளியினுடைய வருத்தம் இவரது உடம்பினால் உறிஞ்சப்பட்டு இவர் துன்புறுவதை நாம் அடிக்கடி காண்கின்றோம். உதாரணமாக, ஒருவர் தலைக்குத்தோடு இவரது அறையுள் நுழைந்தால், இவருக்கு தலைக்குத்து எழும்பிவிடுகிறது. பின்பு விபூதியினால் அல்லது கரத் தொடுகையினால் நோயாளிக்கு வருத்தத்தை இல்லாது செய்துவிடுகின்றார். தினமும் சராசரி ஐந்துக்கு மேற்பட்ட நோயாளிகளும் மனநோயாளிகளும் வந்து குணமடைகின்றார்கள். மனநோயாளிக்கு

ஆசிர்வாதத்தைச் செய்துவிட்டு இவரே ஓரிருநாளைக்கு மனநோயாளி யாய் இருப்பதை நாம் காண்கின்றோம்.

வாய் பேசாத பிள்ளைகளைப் பேசவைத்தது முதலாகச் சகலவித மான நோய்களையும் நீக்கிவிடுகிறார். நோய்களுக்குரிய மருந்துகளை அந்தந்த நேரத்தில் இறைவன் இவருக்குக் கூறிவிடுகிறார். வெளிநாடு களில் உள்ளவர்களோடு ஆத்மரீதியில் தொடர்புகொண்டு இங்குள்ள வர்களுக்குப் பதில் எடுத்துக் கொடுத்திருக்கிறார். வெளிநாடுகளில் உள்ளவர்களது உடலமைப்பு, தலைவாரும் முறை ஆகிய நுணுக்கமான அமைப்புக்களையும் இங்குள்ளவர்களுக்குக் கூறிப் பிரமிக்க வைத்துள் ளார். இவற்றை எல்லாம் அவர் சித்துச் செய்வதுபோல் கருதாது, இங்குள்ள சாயி பக்தர்கள், கடவுள் பக்தர்களுக்கு மன ஆறுதல் அளிக்கவே செய்துவருகிறார்.

இவருக்கு இப்போது வயது 56. இவர் இல. 3 கைலாச பிள்ளை யார் கோயில் வீதியில் உள்ள இல்லத்தில் ஒரு அறையில் தங்கியிருக்கி றார். இவர் பல வருடங்களுக்குமுன் இரு பாடல் புத்தகங்களை எழுதி அச்சிட்டுள்ளார். அவற்றில் மிகப் பிடித்தமான ஒரு சில பாட்டை இந்த நூலின் ஒரு அத்தியாயத்தில் தருகின்றோம்.

---

# 5. சாயி சரவணமுத்து பாடியருளிய பாடல்களில் சில

ஓம் ஸத் சத் ஓம்

1. ஆர் அறிவார் எங்கள் சாயீசன் பெருமையை
ஆர் அறிவார் இந்த அகலமும் நிகளமும்
பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர் அறியாமை விளம்புகின்றேனே

2. குருவை எதிர் கொண்ட போதே
மாற்றான அகந்தையினைத் துடைத்துக் கொள்வோம்
பேற்றாலே குருவந்தான், இவன்பா ஞானப்
பேற்றை யெல்லாம் பெறுவோம் யாம்

3. சாயி எனதகத்தே கால் வைத்த நாள் முதலாய்
எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர்சிறப்பு, நற்கீர்த்தி, கல்வியறிவு
கவிதை சிவஞானம் என்றும் ஒளிசேர்
நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண்

4. சித்தத் துணிவினை மானுடர் கேள்வனைத்
தீமையழிப்பவனை — நன்மை
சேர்த்துக் கொடுப்பவனை — பல
சீர்கள் உடையவனை — புவி
அத்தனையும் சுடரேறத் திசழ்ந்திடும்
ஆரியர் நாயகனை — உருத்திரன்
அன்புத்திருமகனைப் பெருந்திரளாகிப்
பணிந்திடுவோம் — வாரீர்

5. சாயி பிறந்தான் — எங்கள்
சத்திய சாயீசன் பிறந்தான் — இந்தக்
காற்றதை எட்டுத் திசையிலும் கடறிநும்
திண்ணம் உடையான் எங்கள் சாயிக் கண்ணன்
வண்ணம் உடையான் உயர்
தேவர் தலைவன் புவிமிசைத் தோற்றினன்
பண்ணை இசைப்பீர் — நெஞ்சில்

புண்ணை ஒழிப்பீர் — இந்தப்
பாரினிலே துயர் நீங்கிடும் என்றிதை
எண்ணிடைக் கொள்வீர் — நன்கு
கண்ணை விழிப்பீர் — இனி
ஏதும் குறைவில்லை வேதம் துணையுண்டு
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம்.

6. புட்டபர்த்தியிலே சித்திரா நதிக்கரை ஓரத்திலே
பிரசாந்தி நிலையத்திலே வீற்றிருக்கும் சாயீசா
ஓம் சரணம் அப்பா, ஓம் சரணம் அப்பா
சுருதியும் லயமும் ஆனாய் நீயே எங்கள் சிவயீசா
ஆலவாயான ஆயர் பாடியிலே அவதரித்தாய் அப்பா சத்தியா நாராயணா
சூரியவம்ச சூரியரத்னா காரத்தின் சொரூபா சாயீசா
சத்திய நாராயணனாக அவதரித்தாய் சத்தியா
பிராமண பாலுருவால் அவதரித்தாய்
யார் அந்தத் தாத்தா சத்திய நாராயணன் தான்அப்பா சத்தியா
மாணுக்க மாணிக்கமும் ஆனாய் நீயே
கூறை சோறிவை தந்து எனக்கருளினாய் நீயே
அருளில் அரும்பிய குறும்புமானாய் சத்தியா
நீ ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே பகவானே
சத்தியா உன் சபதங்கள் யார் அறிவார்
சாரணன் ஸத்ய நாராயணன் ஆனாய் நீயே
செப்பிலுடை சேஸ்தாராவும் ஆனாய் நீயே
இறகு முளைத்த பட்சிகள் ஆனாய் நீயே
சித்திர வதையிலும், சித்திர வதையானாய் நீயே
அவதாரமாக மலர்ந்தாய் அப்பா சாயீசா
மல்லிகையில் உன்நாமம் மலர்ந்த மந்திரமானாய் நீயே
வேற்றுமையிலும் ஒற்றுமையும் ஆனாய் நீயே
பறந்தோடும் பட்சியும் ஆனாய் நீயே
ஸத்ய சாயி பாபாவும் ஆனாய் நீயே நாராயணா
நாமிருக்கப் பயமேன் என்றாய் அப்பா சத்தியா
கற்பகம் கற்பனையல்ல என்றாய் நீயே
கல்கி தானே என்று திகைக்க வைத்தாய் அப்பா
பகைவனுக் கருள்வாய் அப்பா சாயீசா
சென்னையம் பதியில் ஒரு ஷீர்டி புத்திரனானாய் நீயே
பாத மந்திரமும் ஆனாய் நீயே சாயீசா

சிறிய பாம்பும் வீரியம் பீறும் பீறிய வளமும் ஆனாய் நீயே
பக்த வத்ஸவனும் ஆனாய் நீயே
சுபம் எய்த சுப்பம்மாவுக்கு அருள் புரிந்தாய் அப்பா
மரண ஸ்மரணமும் பிறவித் தரணமும் ஆனாய் நீயே
ஸாயி உன் அருளால் சாயும் துயரங்கள்
கடைத்தேறும், கடைப் பொழுதும் காப்பவனே
இம்மை, மறுமை இரண்டும் ஆனாய் நீயே
புலியாசனமும் சிம்மாசனமும் ஆனாய் நீயே
மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா
பிணி தீர்ப்பவனும் பிறவிகள் தீர்ப்பவனும் நீயே அப்பா
ஆபத்பாந்தவனும் நீயே அப்பா சத்தியா
கண்டேனே வெண்டேனே ஜண்டனே, இண்டனே
களவிலும், கொலையிலும் நிற்பவனே
அளவிலா அருட் செயல்கள் புரிபவனே
சித்தக் களத்திலும், யுத்தக் களத்திலும் திகழ்பவனே
நிந்தனையும் வந்தனையும் உடையவனே
பிரஸித்த. ஸித்தா மட்டுமானாய் நீயே
சித்து மீறிய சித் விலாஸமும் ஆனாய் நீயே
நீ அவதார மல்லவோ அவதார சத்தியா
சர்வ தேவ ரூபமுமானாய் நீயே
திருத்திப் பணி கொள்வாய் அப்பா சத்தியா
ஞான சாயியுமானாய் நீயே சத்திய சாயீசா
பிரேம சாயியுமானாய் நீயே சிவயீசா
தியாக சாயியுமானாய் நீயே நாராயணா
வேத சாயியுமானாய் நீயே அப்பா
சர்வமத ஸம்மத ஸாயியுமானாய் நீயே
தர்ம சாயியுமானாய் நீயே சத்தியா
யோக சாயியும் ஆனாய் நீயே அப்பா
சாந்த சாயியுமானாய் நீயே சத்திய சாயீசா
ஆனந்த சாயியாய் அவதரித்தாய் அப்பா நாராயணா.

7. ஒய்வும் ஒழிதலும் இல்லாமல் உன்
நினைவை நினைத்திருக்கும் எம் உள்ளம்,
என்வாயும் உரைப்பது மனத்தில் கண்டாய்
உன் மாயன் புகழை எப்போது கண்டுகொண்டோம்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம்,
ஓம் சாயி பகவானே நமக.

8. ஒன்றினும் திரியா உளம் உடைத்துறவி
பெற்றோர் மக்கள் உற்றோர் பெண்டிர்
இத்தகையாவும் மித்தையே என்னக்
காணுதார் மெய் காணுதாரே
ஆண் பெண் இல்லா ஆன்மா வானது
எவர்கே தந்தை? எவர்கே மைந்தன்?
எவர்கே பகை அது? எவர்க்கே உறவது?
யாவற்றுள்ளும் யாவுமாய் அவ்
ஒன்றே உளதலைதன்றி மற்றிலையால்
அதுதான் நீ என்றறியக் கடவை
ஓதுக நீ ஓம் தத் ஸத் ஓம் என

9. தைரியம் மிகுந்த செயிரறு துறவி
காமம் புகழ் பொருள் தாமுள இடத்து
வாய்மை என்நாளும் வரமாட்டாது
மாதரை மனைவியாய் மதிப்பவன் எவனும்
பூரணத்துவம் உறக்காரணமே இலை
தினை அளவேனும் தனதெனக் கொள்வோன்
சினமெனும் தளையிற் சிக்குவோன், இவர்கள்
மாயை என்னும் வாயிற் கடவார்
ஆதலின் இவற்றை அற வொழித்திடுக
ஓதுகநீ, ஓம் தத் ஸத் ஓம் என.

10. பூதங்கள் ஐந்தும் பொறிகலங்கிச் சிறியுனை
மோதி அழிக்க முனைந்தாலேன்? ஈதறிக
ஆன்மாவே! நீ தெய்வம்; அங்கும் இங்கும் பாராதே
மேன் மேலும் செல்க அதோ வீடு
வானகத்துத் தேவனல்லேன்; மானிடனல்லேன் விளங்கு
ஆனவுடல் சிந்தையலேன் ஆண்பெண்ணும் நானல்லேன்
என்னியல்பு கூறவந்த ஏடெல்லாம் ஊமைகளாய்க்
கண்மயங்கும்; நான் பிரமம்காண்.

11. இங்கு மங்கும் எங்கும் நோக்குவன்
எல்லாம் முறைக்கண் இருக்கவே காண்பன்
ஆழத் தமைந்த அவலத் திடையே
ஒளிமய ஆன்மா ஒளிரக் காண்பனே

12. சீவனே பிரமம் தெய்வமே மனிதன்
பேயே பிசாசமே பிரேதமே பூதமே
பண்ணவன் விலங்கு பறவை பூச்சியே
புழுவே யெனவீங் கெழுவன அனைத்துளும்
இதயத் தலத்தில் இவ்வன் புள்ளதே.

## வேறு

தாளம் : ஆதி இராகம் : கல்யாணி

ஓம் சரவணபவ

பல்லவி

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !
ஓம் சத்திய சிவசாயி

புட்டபர்த்தியில் இருந்து விவசாயம் செய்யும் சாயீசா, சிவயீசா
சித்திரா நதிக்கரையிலே சிவோகஞ் செய்யும் சாயீசா, சிவயீசா
ஓம் சிவசாயி, சாயீசா ஓம் சரணமப்பா.

அனுபல்லவி

உன்செயலால் அன்றி என்செயல் ஆவது ஒன்றுமில்லை
சாயீசா, சிவயீசா, சாயீசா ஓம் சரணம் அப்பா
பிரசாந்தி நிலையத்தில் வீற்றிருக்கும் சாயீசா, சிவயீசா
ஓம் சரணமப்பா

சரணம்

ஓய்வும் ஒழிதலும் இல்லாமல் உன்
நினைவை நினைத்திருக்கும் எம் உள்ளம்
வாயும் உரைப்பதுண்டு மனதில் கண்டாய்
உன் மாயன் புகழை எப்போது கண்டுகொண்டேன்

அப்பா சாயீசா, சிவயீசா சரணம் அப்பா,
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சரவணபவனே.

தாளம் : ஆதி இராகம் : மோகனம்

ஓம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ஓம்
கலியுக வரதா, கார்த்திகேயா சாயீசா,
கலியுகத்தில் கண்கண்ட தெய்வமப்பா சாயீசா,
நீயின்றி நாம் இல்லை நாம் இன்றி
நீஇல்லை பகவானே,

எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் ஓர் ஜீவன் சாயீசா,
சத்திய சாயீசா சரணம் அப்பா
ஓம் சரணம் அப்பா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்.

ஓம் சரவணபவ

தாளம் : ஆதி இராகம் : ஹரிகாம்போதி

எல்லா உலகமும் ஆனாய் நீயே சாயீசா
எல்லாம் வல்ல இறைவனும் நீயே சத்திய சாயீசா
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய்
அருள் புரிவாய் அப்பா சாயீசா,
ஆருடன் நோவேன், ஆருக்கெடுத்துரைப்பேன் சிவயீசா

உன்னை நம்பி உருக்கமுடன் தேடிவர அழைப்பாய் அப்பா
தெய்வம் ஒன்றென்று சொல்வாய், அப்பா அது
உண்டென்று சொல்வாய் அப்பா
ஒன்றே சொல்வாய், அப்பா அதை நன்றே சொல்வாய்
அப்பா சாயீசா,
தெய்வம் ஒன்று என்று சொல்வாய் அப்பா
அதை உண்டென்று சொல்வாய் பகவானே

ஓம் ஜெய சாயிராம்

## சத்தியம், சிவம், சுந்தரம்

(ஹரிவராசனம் மெட்டில் பாடவும்)

வாழ்வு ஆனவன் சாயி வாக்குமானவன்
வானில் நின்றவன் இந்த மண்ணில் வந்தவன்
தாழ்வு அற்றவன் சாயி தந்தை ஆனவன்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் சாயீசா
ஈசன் சாயீசா ஜெய சத்திய சாயீசா
ஜெய சாயிராம். ஜெய சாயிராம், ஜெய சாயிராம்

உலகையீன்றவன் பகவான் உண்மையுமானவன்
உண்மையானவன் எந்தன் உயிரைக் காப்பவன்
நிலவில் நின்றவன் சாயி நிராயன் ஆனவன்

நிலவி நின்றவன் எந்தன் நிதியும் சாயீசன்
சத்திய சாயீயே, ஜெய சத்திய சாயீயே
ஜெய சாயிராம், ஜெய சாயிராம், ஜெய சாயிராம்

செம்மையானவன் சாயி ஜெயமு மானவன்
அப்பனுனவன் அ புத் தந்தையானவன்
இம்மையானவன் சாயி இன்பமானவன்
உண்மையானவன் என்றும் முழுமையானவன்
ஜெய சாயிராம், ஜெய சாயிராம், ஜெய சாயிராம்

உயிருமானவன் சாயி உடலுமானவன்
உலகமானவன் எந்தன் உடமையானவன்
பயிருமானவன் சாயி படரும் கொம்பவன்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த சாயீசா
ஜெய சாயிராம், ஜெய சாயிராம். ஜெய சாயிராம்

துன்பமற்றவன் சாயி துரிய வாழ்பவன்
துறையுமானவன் இன்பத் தோணியானவன்
அன்பு உற்றவன் சாயி அபய வீடவன்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் சத்தியா
தேவன் சாயீசா, ஜெய தேவன் சத்தியா
ஜெய சாயிராம், ஜெய சாயிராம், ஜெய சாயிராம்

குருவுமானவன் சாயி குழந்தையானவன்
குலமுமானவன் எங்கள் குடும்பதீபமே
திருவுமானவன் சாயி திருசூலி மாயவன்
திருநீற்றில் என்னிடம் திகழும் சத்தியா
ஜெய சாயிராம், ஜெய சாயிராம், ஜெய சாயிராம்

சத்திய சாயீசா இதயக் கமல சத்தியா
கருணை சாயீசா வீரக் கனக சத்தியா
தந்தை சாயீசா என்னுள் அருளும் சத்தியா
அன்புச் சத்தியா ஜெய அருளும் சத்தியா
ஜெய சாயிராம், ஜெய சாயிராம், ஜெய சாயிராம்

ஓம் சாயிராம்

## விருத்தம்

ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே சாயீசா
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே சத்திய சாயீசா
வாசமலரெல்லாம் ஆனாய் நீயே பகவானே சாயீசா
மலையாய் மருகனாய் நின்றாய் நீயே சத்திய சாயீசா
பேசப் பெரிதும் இனியாய் நீயே சத்திய சாயீசா
பிராணனாய்அடி என்மேல் வைத்த சத்தியா
தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே சாய்பகவானே
திருவையாறகலாத செம்பொன் சோதியே சத்தியசாயி பகவானே
ஓம் சாயிராம்' ஓம் சாயிராம், ஓம் சாயிராம்
சத்தியம், சிவம், சுந்தரம், அன்பே சிவம்

இராகம்: கர்நாடக தேவகாந்தாரி

## விருத்தம்

ஓம்

சோடிழந்த அன்றிலைப்போல் துயரம் ஆனேன் சாயீசா
தோகை மயில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானேன் சத்தியா
காடுகளில் இனம்பிரிந்த கலைகள் ஆனேன் பகவானே
கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானேன் சிவயீசா.

ஓடுகின்ற பாய்மரத்தின் ஓர் காகமானேன் அப்பா, சாயீசா
உற்றார் ஒருவர் இல்லாப் பித்தனானேன் நாராயணா,
பாடுபட வழியறியேன் பழனிக்கந்தா
பச்சை மயில் மீதேறி வந்து என்னை இரட்சிப்பாயே சாயீசா
நீஎன்னும் நாமம் அற்று நான் என்னும் ஆணவம்
தாண்டவம் ஆடுதப்பா இக்கலியுகத்தில்·
கலியுக வரதா, கார்த்திகேயா சாயீசா.

இராகம் : தன்னியாசி

## விருத்தம்

பகவான் சாயியைப்போல் எந்நேரமும் விழிக்க வேண்டும்
பக்தி எனும் நின்கருணை பற்றி எண்ண வேண்டும்.
இகபரத்தில் எந்நாளும் இடரேயின்றி
என் இதயம் நின் சுகத்தில் இனிக்க வேண்டும்

களைதீர சாயிராம் நாம் ஓதல் வேண்டும்
பகவானைப்போல் அளவாகப் புசிக்க வேண்டும்
கண்டதெல்லாம் தின்னுமை காக்க வேண்டும்
சாயியைப்போல் ஒழுங்காக கருணைகள் செய்யும்
காருண்யம் வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம் ஓம் சாயிராம்.

தாளம் : இராகம் : காபி

சொன்ன சொல்லைச் சாயியைப்போல் காக்கவேண்டும்
சோம்பலதைச் சாயியைப்போல் துறக்க வேண்டும்
மன்னவனே, பின்னவனே சாயியைப்போல்
உயிர்கள் எல்லாம் ஒன்றுஎன்று மதிக்க வேண்டும்
சின்னவரோ, பெரியவரோ எவரையேனும்
சிறுமையின்றிச் சாயியைப்போல் மதிக்க வேண்டும்
என்ன குறை என்ன வந்தீர் எனக்கேட்டு
சாயியைப்போல் இன்முகமாய் எளிமை வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிரம், ஓம் சாயிராம்! ஓம்

குற்றமென்று நாம் செய்யினும் சாயியிடம்
கூசாமல் மன்னிப்புக் கோர வேண்டும்
மற்றவர்கள் பெரும்தவறு செய்திட்டாலும்
மன்னித்து சாயியைப்போல் மறக்க வேண்டும்
உற்றவர்கள் பிழை செயினும் ஒழித்திடாமல்
ஓரமின்றி சாயியைப்போல் உண்மை காட்டி
சற்றுமவர் துன்பம் நீங்க சலுகை பேசி
சரிப்படுத்தும் சாயியைப்போல் அன்பு வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம்.

விருத்தம்

இராகம் : ஆனந்த பைரவி

எத்தனை கடிதங்கள் வந்திட்டாலும்
சாயியைப்போல் சலிப்பின்றி எல்லோருக்கும்
தவறாமல் அருள்புரியும் நியமம் வேண்டும்
புத்தி கெட்ட கேள்வி சிலர் கேட்டாலும்
பொறுத்து விடை சாயியைப் போல் புகல வேண்டும்
பத்தியம்போல் பதட்டமுள்ள பார்வை நீக்கி
பரிவாகப் பணி மொழிகள் பதிக்க வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம் ஓம்

புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் சமமாய் எண்ணி
சாயியைப்போல் பொது நோக்கும் பொறுமை வேண்டும்
மகிழ்ச்சியிலே மதிமயங்கித் தடுமாறுமல்
பகவானைப்போல் மனவடக்கம் பயில வேண்டும்
நிகழ்ச்சிகளைச் சாயியைப் போல் நிறுத்துப் பார்த்து
நேர்மையுடன் குற்றம் எல்லாம் நீக்க வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம் ஓம்

வருகின்ற யாவர்க்கும், எளியனாக
சாயியைப்போல் வரவேற்கும் வழக்கம் வேண்டும்
தருகின்ற சந்தேகம் எதுவானாலும்
சாயியைப்போல் தணிவாக தர்க்கம் செய்து
திரிகின்ற மயக்கத்தை தீர்த்து வைத்து
திடமறிந்து வழிகாட்டும் தெளிவு வேண்டும்
புரிகின்ற புத்திமதி எது சொன்னாலும்
புண்ணின்றிச் சாயியைப் போல் புகட்ட வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம் ஓம்

தாளம் ; ஆதி இராகம் : சிந்துபைரவி

எத்தொழிலைச் செய்தாலும் சாயியைப் போல்
இறைவனின் சாயல் என்று எண்ண வேண்டும்
சத்தியத்தைக் கருணையுடன் சாதித்திட்டால்
சரியாக மற்ற தெல்லாம் சாயும் என்று
பத்தியத்தைச் சாயியைப் போல் பார்த்துக் கொண்டால்
பாதகமோ, சாதகமோ பலன்க ளெல்லாம்
நித்தியனும் சாயீசன் கடமை என்று
நிஜபக்தி பகவான் செயல் என்றும் நினைக்க வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம் ஓம்

உழைப்பின்றிச் சுகம் விரும்பல் ஊனம் என்று,
சாயியைப்போல் எல்லோரும் உணர வேண்டும்
அழைப்பின்றித் துன்பமுற்றோர் அருகில் ஓடி
சாயியைப்போல் அவர்க்குதவும் அன்பு வேண்டும்
பிழைப்பின்றிப் பரிதவிக்கும் ஏழை மக்கள்
பின்பற்றி இறை தொழிலின் பெருமை கொண்டு
களைப்பின்றிப் பசிதீரும் வழியைக் காட்ட
சாயியிடம் கருணையைக் காட்ட வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம் ஓம்

## விருத்தம்

இராகம் : மோகனம்

மனிதர் எல்லாம் ஒரு கடவுள் மக்களென்று
சாயியைப் போல் மனமார மதிக்க வேண்டும்
புனிதமுள்ள பரம்பொருளின் பெயரைச் சொல்லி
போர்மூட்டும் மத வெறியைப் போக்க வென்றே
அனுதினமும் தவம் கிடக்கும் சாயீசன்
அனுஷ்டிக்கும் சமரசத்தில் பக்தி வேண்டும்
தனது மனம், தனது இனம் என்றே எண்ணும்
தருக்குகளைச் சாயியைப் போல் தவிர்க்க வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிரபம், ஓம் சாயிராம் ஓம்.

சிறுதுளியும் வீண் போகாச் செலவு செய்யும்
சாயியைப்போல் சிக்கனங்கள் பழக வேண்டும்
பிறிதொருவர் பாடுபட்டுத் தான் சுவிக்கும்
பேதமையைச் சாயியைப் போல் பிரிக்க வேண்டும்
நெறிதவறி வருகிறது சொர்க்க மேனும்
நீக்கிவிட சாயியைப் போல் நேர்மை வேண்டும்
குறிதவறிப் போகாமல் ஒழுக்கம் காத்து
குண நலத்தில் சாயியைப் போல் கொள்கை வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம் ஓம்

வீரமென்றும் வெற்றியென்றும் கோபமூட்டி
வெற்றிகொடுக்கும் பேச்சை எல்லாம் விலக்கி வைக்கும்
ஈரமுள்ள வார்த்தைகளை எவர்க்கும் சொல்லி
இனிமை தரும் சாயியைப் போல் இரக்கம் வேண்டும்
காரமுள்ள கடும் சொல்லைக் கேட்டிட்டாலும்
சாயியைப் போல் சாந்தியாகச் சிரித்துத் தள்ளி
பாரமற்ற மனநிலையைப் பாதுகாத்து
பகைமை எண்ணாச் சாந்தி முறை பயில வேண்டும்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம்

பொது நலத்தைச் சாயியைப்போல் பொழுதும் எண்ணி
பொறுப்புணர்ந்து சாயியைப் போல் சேவைகளை
செய்ய வேண்டும்.
பொதுப் பணத்தைக் கண்போல எண்ணி
எப்பொழுதும் அதன் கணக்குகளைப் பொறித்து நீட்டி

துதிப்பதற்கோ, தூற்றுதற்கோ கொடுத்திடாமல்
தூய்மையுள்ள அறங்களுக்குத் துணைமை யாக்கும்
மதி நலத்தைச் சாயியைப் போல் மனதிற் காத்து
மக்களுக்குத் தொண்டு செய்வோர் மலிய வேண்டும்
ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம்

மதம் என்னுமோர் வார்த்தையை மறந்து வாழும்
மாசறியா அன்பினையே வளர்க்கும் சாயி
சதமெனுமோர் சத்தியத்தைச் சார்ந்திடாத
சடங்குகளை விட்டொழிக்கச் சக்தி தந்தான்
வித, விதமாய் உடை, நடைகள் விரிந்திட்டாலும்
வேற்றுமையுள் ஒற்றுமையே விளக்குகின்றான்
இதம் மிகுந்த சாயியைப் போல் சரித்திரந்தான்
இந்நாட்டின் கலியுகத்தின் ஈசன் அல்லவோ
ஓம் சாயிசா, சத்திய நாராயண சரணம் அப்பா

ஜாதி, குலம் பிறப்பை யெண்ணும் சபலம் விட்டோன்
சமதர்ம சன்மார்க்கம் பரப்புகின்றான் சாயீசன்
நீதி நெறி ஒழுக்க மென்ற நிறைகளன்றி
நேர்மையற்ற தேர்வுகளை நீக்குகின்றான்
ஆதிபரம் பொருளான கடவுள் அல்லோ சாயீசா
அகிலத்தில் வேறெதற்கும் அஞ்சான் சாயீ
ஜோதி பெரும் கருணை வள்ளல் சாயிபகவான்
சுருதியென மக்களெல்லாம் தொழுதல் வேண்டும்
ஓம் சாயிராம் ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம்

மந்திரங்கள் ஓதாமல் மயங்க வைத்தான்
மாயங்கள் புரியாமல் மலைக்கச் செய்தான்
தந்திரங்கள் இல்லாமல் இறைவனானன்
தண்டனைகள் பேசாமல் தணியச் செய்வான்
அந்தரங்க ஒற்றரில்லா இறைவனானன்
கலியுக தெய்வம் எங்கள் சாயி தெய்வம்
எந்த ஒரு சக்தியினால் இயன்றதென்று
எல்லோரும் கூர்ந்தறிய எண்ண வேண்டும்

போன இடம் எங்கெங்கும் புதுமை கொள்ளும்
புகுந்தமனை ஒவ்வொன்றும் பூரிப்பாகும்
கானகமும் கடிமனைபோல் களிப்புச் செய்யும்
கல்லணையும் மெல்லணையாய்க் கனிவு காட்டும்

ஈனர்களும் தரிசனத்தால் எழுச்சி கொள்வர்
இமையவரும் அதிசயித்து இமைத்து நிற்பர்
தீனரெலாம் பயமொழிவர் தீரன் சாயி
திருக்கதையே தெருக்க ளெல்லாம் திகழ வேண்டும்

உலகமெல்லாம் சாயிராம் பாட வேண்டும்
பள்ளியெல்லாம் சாயி வழி பழக வேண்டும்
நாடகங்கள் சாயிபகவான் கதைகள் நடிக்க வேண்டும்
நாட்டியத்தில் சாயி அபி நயங்கள் வேண்டும்
மாடமெல்லாம் சாயி சிலை மலிய வேண்டும்
மனைகள் எல்லாம் சாயிபுகழ் மலிய வேண்டும்
கூடுமெல்லா வழிகளிலும் சாயிராம்
அருள் கொள்கைகளே போதனையாய் திகழ வேண்டும்
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம்

கல்வி யெல்லாம் சாயி மணம் கமழ வேண்டும்
கலைகளெல்லாம் சாயி குணம் காட்ட வேண்டும்
சொல்வ தெல்லாம் சாயி அறம் சொல்ல வேண்டும்
சூத்திரமாய்ச் சாயி உரை துலங்க வேண்டும்
வெல்வ தெல்லாம் சாயிவழி விழைய வேண்டும்
வேள்வி யென்றே அவர் திருநாள் விளங்க வேண்டும்
நல்லவழிகள் யாவினுக்கும் நடுவாய் நின்ற
நாயகனும் சாயி சொன்ன நடத்தை வேண்டும்

குண்டுபட்டு திகிலடைந்து குலுங்கிடாமல்
கொள்கைதரும் சாயி ஜெயம் ஒன்றே கூறி
கொண்டமனச் சாந்தி நிலை குலைந்திடாமல்
கோணலுற்ற வாய் வெறுத்துக் குளறிடாமல்
அண்டை அயல் துணைதேடி அலைந்திடாமல்
அமைதியுடன் பரமபதம் அடைந்திடுவீரே
கண்டதுண்டோ, கேட்டதுண்டோ கதைதானுண்டோ
கற்பனையாய் இப்படியோர் கவிதானுண்டோ ?
ஓம் சாயிராம். ஓம் சாயிராம், ஓம் சாயிராம், ஓம்.

ஓம் சத்தியம், சிவம், சுந்தரம், ஓம் சரவணபவ.

---

# 6, பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா அவர்கள்

## 30—9—80 அன்று எழுதிய

## ஆங்கிலக் கடிதத்தின்

# தமிழ் மொழிபெயர்ப்பு

நாம் சார்ந்துள்ள மதத்திலோ அல்லது நாம் அணிகின்ற பட்டியிலோ அல்லது நாம் கூச்சல்போடும் கோஷங்களிலோ நம்மை மற்றவர்கள் எடைபோடமாட்டார்கள். மாறாக நமது பணியின் மூலமும் முயற்சி, தியாகம், நேர்மை, தூய்மையான ஒழுக்கம் என்பன மூலமும்தான் நம்மை எடைபோடுவார்கள். உங்களுக்குள்ளே உள்ள சுவர்க்கத்தை உணர்ந்துகொள்ளுங்கள். அதை உணர்ந்ததும் உங்கள் அபிலாசைகள் யாவும் நிறைவேறும். துயரங்கள், துன்பங்கள் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும். உடலுக்கும் அதன் சூழலுக்கும் அப்பால், மனத்திற்கும் அதன் நோக்கங்களுக்கும் அப்பால் வெற்றி, பயம் என்ற எண்ணங்களுக்கு அப்பால் உங்களை உணர்ந்து கொள்ளுங்கள். உலகத்திலே காணப்படுகின்ற துன்பத்திற்குப் பிரதான காரணம் மக்கள் தமக்குள்ளே நோக்குவதில்லை. வெளி சக்திகளிலேயே தங்கியுள்ளார்கள்.

அன்புடன்

**ஸ்ரீசத்ய சாயி பாபா**

*30—9—80*

# 7. பகவான் ஸ்ரீ சத்ய சாயி போற்றித் திருவகவல்

(அஷ்டோத்திரத்தைத் தழுவியது)

1. ஓம் ஸ்ரீபகவான் சத்யசாயி பாபாவே போற்றி
2. ஓம் ஸ்ரீசாயி சத்தியம் நிறைந்திடும் சத்யசீலனே போற்றி
3. ஓம் ஸ்ரீசாயி சத்யதர்ம பற்றுடைய சர்வேஸ்வரனே போற்றி
4. ஓம் ஸ்ரீசாயி வரமதை வழங்கிடும் வள்ளலே போற்றி
5. ஓம் ஸ்ரீசாயி சகலாத்துமத்தி லுறையும் சச்சிதானந்தனே போற்றி
6. ஓம் ஸ்ரீசாயி சத்ய குணமுடைய சுவாமிநாதனே போற்றி
7. ஓம் ஸ்ரீசாயி சாதுக்கள் இனம்வளரத் தண்ணருள்வோனே போற்றி
8. ஓம் ஸ்ரீசாயி சாதுக்களைக் காத்தருளச் சரீரமெடுத்தோனே போற்றி
9. ஓம் ஸ்ரீசாயி முக்காலம் உணர்ந்திடும் முக்கண்ணனே போற்றி
10. ஓம் ஸ்ரீசாயி மாந்தர்கள் மகிழ்ந்தேற்றும் மாதவனே போற்றி
11. ஓம் ஸ்ரீசாயி முப்பெருஞ் சக்திகொள் மும்மூர்த்தியே போற்றி
12. ஓம் ஸ்ரீசாயி எவ்வுயிர்க்கும் மேலான ஏக தலைவனே போற்றி
13. ஓம் ஸ்ரீசாயி பற்றற்ற நிலையுடையப் பரம்பொருளே போற்றி
14. ஓம் ஸ்ரீசாயி உள்ளமதை இயக்கிடும் ஒளிமயமே போற்றி
15. ஓம் ஸ்ரீசாயி எல்லையில்லா எழிலுடைய ஈஸ்வரனே போற்றி
16. ஓம் ஸ்ரீசாயி பர்த்தியில் அவதரித்த பகவானே போற்றி
17. ஓம் ஸ்ரீசாயி பர்த்திப் பதியுறையும் பராற்பரனே போற்றி
18. ஓம் ஸ்ரீசாயி சிர்டிபுகழ் உடலெடுத்தச் செம்மலே போற்றி
19. ஓம் ஸ்ரீசாயி ஜோடி ஆதிபள்ளிச் சோமப்பாவே போற்றி
20. ஓம் ஸ்ரீசாயி பரத்வாஜக் குலமுதித்தப் பரஞ்சோதியே போற்றி

21. ஓம் ஸ்ரீசாயி பக்தர்பால் பாசமுடைப்
பரமதயாநிதியே போற்றி
22. ஓம் ஸ்ரீசாயி புகழுருவான எங்கள் புண்ணியனே போற்றி
23. ஓம் ஸ்ரீசாயி வாழ்க்கைக் கடல்கடக்க
வழிகாட்டுவோனே போற்றி
24. ஓம் ஸ்ரீசாயி அகிலத்தை ஆளவந்த
அவதாரமூர்த்தியே போற்றி
25. ஓம் ஸ்ரீசாயி சகலவித அச்சம்நீக்கும்
சக்தியுடையோனே போற்றி
26. ஓம் ஸ்ரீசாயி ஆபஸ்தம்ப சூத்திரத்தில்
அவதரித்தோனே போற்றி
27. ஓம் ஸ்ரீசாயி அஞ்சாமை தந்தபயம் அளிப்போனே போற்றி
28. ஓம் ஸ்ரீசாயி வம்சமாம் ரத்னுகரத்தில்
வந்துதித்தோனே போற்றி
29. ஓம் ஸ்ரீசாயி பேதமற்றச் சீரடியின் பேரவதாரனே போற்றி
30. ஓம் ஸ்ரீசாயி சுகபோகம் நல்கிடும் சுந்தரேஸ்வரனே போற்றி
31. ஓம் ஸ்ரீசாயி சிர்டிசாயி சக்தியின் திருவுருவே போற்றி
32. ஓம் ஸ்ரீசாயி துவாரகாமாயியில் துலங்கிடுவோனே போற்றி
33. ஓம் ஸ்ரீசாயி சித்திராவதி நதிக்கரையில்
திருநடனமிடுவோனே போற்றி
34. ஓம் ஸ்ரீசாயி சீர்மிகுஞ் சக்திதரும் சிவசக்தியே போற்றி
35. ஓம் ஸ்ரீசாயி சரணம் என்பார்க்குச் சகலமுமானுயே போற்றி
36. ஓம் ஸ்ரீசாயி பேரானந்தப் பேரொளி வீசும்
பெம்மானே போற்றி
37. ஓம் ஸ்ரீசாயி ஆனந்தம் அருளிடும் அம்மையப்பனே போற்றி
38. ஓம் ஸ்ரீசாயி இடர்ப்பட்டோர்க் கிரங்கிடும்
இறைவனே போற்றி
39. ஓம் ஸ்ரீசாயி அனுதைகளை ஆதரிக்கும் ஆண்டவனே போற்றி
40. ஓம் ஸ்ரீசாயி இக்கற்ருேர்க் குதவிடும் தீனதயாளனே போற்றி
41 ஓம் ஸ்ரீசாயி உலகத்தின் நாயகனே ஓம்சத்ய சாயியே போற்றி
42- ஓம் ஸ்ரீசாயி பாரினைப் பரிபாலிக்கும் பரந்தாமனே போற்றி
43. ஓம் ஸ்ரீசாயி ஈரேழு உலகத்தின் எந்தையே போற்றி

44. ஓம் ஸ்ரீசாயி எளியோரின் இன்னல் நீக்க
ஏகிடுவோனே போற்றி

45. ஓம் ஸ்ரீசாயி மும்மூர்த்தி உருவெடுத்த மூலாதாரனே போற்றி

46. ஓம் ஸ்ரீசாயி பேரின்ப வீடருளும் பேரருளாளனே போற்றி

47. ஓம் ஸ்ரீசாயி குறைவிலா நிறைவுடையச் சோமானே போற்றி

48. ஓம் ஸ்ரீசாயி கருணையே வடிவெடுத்தக் காருண்யனே போற்றி

49. ஓம் ஸ்ரீசாயி அனைத்திற்கு மாதாரமான அற்புதமே போற்றி

50. ஓம் ஸ்ரீசாயி அன்பர்தம் அகங்களில்
அமர்ந்திடுவோனே போற்றி

51. ஓம் ஸ்ரீசாயி நல்வினைப் பயனளிக்கும் நாதப்பிரம்மமே போற்றி

52. ஓம் ஸ்ரீசாயி பாவங்களின் கறைபோக்கும்
பண்பாளனே போற்றி

53. ஓம் ஸ்ரீசாயி பெரும்பிணி அகற்றிடும் பெருவிருந்தே போற்றி

54. ஓம் ஸ்ரீசாயி வேதனைகள் தீர்த்தே விந்தைபுரிவோனே போற்றி

55. ஓம் ஸ்ரீசாயி எண்ணில்லாத் துதிகளை ஏற்றிடுவோனே போற்றி

56. ஓம் ஸ்ரீசாயி முன்தோன்றி முன்னுதித்த மூலவனே போற்றி

57. ஓம் ஸ்ரீசாயி ஆதிமூலச் சக்தியாய் அமைந்தோனே போற்றி

58. ஓம் ஸ்ரீசாயி விந்தைமிகு சக்திகொள் விஸ்வரூபனே போற்றி

59. ஓம் ஸ்ரீசாயி புலனுக்கும் புலப்படாதப் புகழேந்தியே போற்றி

60. ஓம் ஸ்ரீசாயி ஆவலையும் சினத்தையும்
அழித்திடுவோனே போற்றி

61. ஓம் ஸ்ரீசாயி பொன்னுடை புனைந்தே
பொலிவுறுவோனே போற்றி

62. ஓம் ஸ்ரீசாயி அற்புதச் செயலாற்றும் அறவுருவே போற்றி

63. ஓம் ஸ்ரீசாயி ஆபத்தில் உதவிடும் அண்ணலே போற்றி

64. ஓம் ஸ்ரீசாயி அன்பினால் ஆட்கொள்ளும் ஆனந்தமே போற்றி

65. ஓம் ஸ்ரீசாயி அன்பினில் அமர்ந்திடும் ஆருயிரே போற்றி

66. ஓம் ஸ்ரீசாயி அன்பினை அருளிடும் ஆரமுதே போற்றி

67. ஓம் ஸ்ரீசாயி அன்போடு அன்பரை அணைப்பவனே போற்றி

68. ஓம் ஸ்ரீசாயி பக்தரின் பக்திக்குப் பரிந்திடுவோனே போற்றி
69. ஓம் ஸ்ரீசாயி பக்தருக்குக் கற்பகமாய்ப்
பாரிலுதித்தோனே போற்றி
70. ஓம் ஸ்ரீசாயி பக்தர்தம் உளத்தரங்கில்
பரிமளிப்போனே போற்றி
71. ஓம் ஸ்ரீசாயி பக்தருள்ளக் கோவிலிலே
பள்ளிகொள்வோனே போற்றி
72. ஓம் ஸ்ரீசாயி பக்தரிடை ஆட்சிசெய்யும்
பர்த்தீஸ்வரனே போற்றி
73. ஓம் ஸ்ரீசாயி பக்திஞானச் சுடரேற்றும் பரபிரம்மனே போற்றி
74. ஓம் ஸ்ரீசாயி பக்திஞானப் பாக்கியத்தை
அளிப்போனே போற்றி
75. ஓம் ஸ்ரீசாயி பக்திஞானப் பாதைகாட்டும்
பரமேஸ்வரனே போற்றி
76. ஓம் ஸ்ரீசாயி ஞானத்தின் எல்லையான நல்லசிவனே போற்றி
77. ஓம் ஸ்ரீசாயி கீதையை உபதேசித்தக் கீதாச்சாரியனே போற்றி
78. ஓம் ஸ்ரீசாயி ஞானசித்தி நல்கிடும் ஞானனந்தமே போற்றி
79. ஓம் ஸ்ரீசாயி அருட்திரு வடிவுடைய அழகேசனே போற்றி
80. ஓம் ஸ்ரீசாயி புண்ணியம் ஒன்றுகூடிப் பூரித்தவடிவே போற்றி
81. ஓம் ஸ்ரீசாயி எல்லாப் பலன்களையும்
எமக்கருள்வோனே போற்றி
82. ஓம் ஸ்ரீசாயி ஆத்மாக்களி லுயர்ந்த பரமாத்மனே போற்றி
83. ஓம் ஸ்ரீசாயி ஆதியும் அந்தமுமில்லா அருட்ஜோதியே போற்றி
84. ஓம் ஸ்ரீசாயி எல்லையிலுக் கெட்டாத ஏகாந்தமே போற்றி
85. ஓம் ஸ்ரீசாயி காலத்தினைக் கடந்து நிற்கும்
கருணாகரனே போற்றி
86. ஓம் ஸ்ரீசாயி சித்திகளின் சிகரமான சிவானந்தமே போற்றி
87. ஓம் ஸ்ரீசாயி சித்தமதை நிறைவேற்றும் திருவருளே போற்றி
88. ஓம் ஸ்ரீசாயி ஆரோக்ய வாழ்வளிக்கும் அருமருந்தே போற்றி
89. ஓம் ஸ்ரீசாயி அன்னமோடு ஆடைதந்து ஆதரிப்போனே போற்றி
90. ஓம் ஸ்ரீசாயி பிறப்பு இறப்பெனும்
பிணியகற்றுவோனே போற்றி

91. ஓம் ஸ்ரீசாயி வேண்டுவன விரும்பித்தரும் வித்தகனே போற்றி
92. ஓம் ஸ்ரீசாயி கல்யாண குணங்களுடை கலியுகனே போற்றி
93. ஓம் ஸ்ரீசாயி கர்மவினை களைந்திடுங் கண்ணியனே போற்றி
94. ஓம் ஸ்ரீசாயி சுத்தாத்ம மனதிலுறையுஞ்
சுடரொளியே போற்றி
95. ஓம் ஸ்ரீசாயி எம்மதமுஞ் சம்மத
மென்றியம்பிடுவோனே போற்றி
96. ஓம் ஸ்ரீசாயி சாதுக்கள் மனங்களைச்
சமப்படுத்துவோனே போற்றி
97. ஓம் ஸ்ரீசாயி சாதகர்க்காய் ஆலினைநட்ட
சத்ய சாயீசனே போற்றி
98. ஓம் ஸ்ரீசாயி சந்தேக நிவாரிணி நாம்
சனாதனசாரதியே போற்றி
99. ஓம் ஸ்ரீசாயி தத்துவப் போதனையைத்
தந்தருள்வோனே போற்றி
100. ஓம் ஸ்ரீசாயி யோகியர் தலைவனான யோகீஸ்வரனே போற்றி
101. ஓம் ஸ்ரீசாயி யோகியர் வணங்கிடும் ஓங்காரரூபனே போற்றி
102. ஓம் ஸ்ரீசாயி எல்லா மங்களங்களும் எமக்கருள்வோனே போற்றி
103. ஓம் ஸ்ரீசாயி சகலவித சித்திகளும் தந்தாள்வோனே போற்றி
104. ஓம் ஸ்ரீசாயி ஆபத்தில் அபயக்கரம் அளித்திடுவோனே போற்றி
105. ஓம் ஸ்ரீசாயி துன்பம்நீக்கி இன்பந்தரும் தூமணியே போற்றி
106. ஓம் ஸ்ரீசாயி சாந்தமாய்ச் சமைந்திருக்கும் சற்குருவே போற்றி
107. ஓம் ஸ்ரீசாயி எளிதில் காட்சிதந்து எமையாளுவோனே போற்றி
108. ஓம் ஸ்ரீசாயி ஸ்ரீபகவான் சத்யசாயி பாபாவே போற்றி,

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**8. "சாயி பாபா, த ஹோலி மான்" என்ற சாமுவேல் ஏச். சான்ட்வீஸ் என்பவருடைய நூலில் 104ஆம் பக்கத்தில் பகவான் சாயி பாபா தமது கைப்பட எழுதிய ஆங்கிலக் கடிதம் ஒன்றின் தமிழாக்கம். அக்கடிதம் திகதியிடப்படவில்லை.**

## செய்தி

உடம்பாக, மனமாக, ஆத்மாவாக இருக்கும் நீ ஒரு பகற் கனவே. ஆனால், உண்மையில் நீ சத்து, (என்றும் உள்ளது) சித்து (என்றும் அறிவானது) ஆனந்தம் (என்றும் பேரின்பமயம்) ஆவாய். இந்தப் பிரபஞ்சத்தின் கடவுள் நீயே. நீயே முழுப் பிரபஞ்சத்தையும் உண்டுபண்ணுவதும் உள்ளிழுப்பதுவும். (அதாவது உனது மனதின் பக்குவத்திற்கு அமையவே நீ காணும் உலகு தோன்றும். மனம் ஒடுங்க உலகு மறைந்து பிரம்மமயமாகும்). எல்லையற்ற பரந்த பரத்துவத்தை அடைய, துன்பம் தரும், சிறிய, சிறைபோன்ற, தனித்துவம் போகவேண்டும். பக்தி என்பது அழுவது அல்ல. அல்லது அதுபோன்ற எதிரிடையான தன்மைகள் அல்ல. பக்தி என்பது எல்லாவற்றையும் எல்லாவற்றுள்ளும் அதுவாகக் காண்பதாகும்.

இதயம்தான் எமது இலக்கை அடைவது. ஆதலால் தூய இதயத்தைப் பின்பற்று. ஒரு தூய இதயம் அறிவுக்கு அப்பாற் சென்று தேடுகிறது. அந்தத் தூய இதயம் உற்சாகமடைகிறது.

எதை நாம் செய்தாலும் அது எம்மைத் தாக்குகின்றது. நல்லது செய்தால் இன்பம் கிடைக்கும். தீயது செய்தால் துன்பம் நழும். உனக்குள்ளேதான் உண்மையான இன்பம் உள்ளது. உனக்குள்ளே தான் பரந்த, தெய்வீக அமிர்தக் கடல் நிலைகொண்டுள்ளது. உனக்குள்ளே அந்த ஆனந்தத்தைத் தேடு. உணர்ந்துகொள் — உணர்ந்து கொள். அது இங்கேதான் இருக்கிறது. உண்மையான நீதான் அது. உனது உடம்பல்ல அது. மனமும் அல்ல. புத்தியும் அல்ல. மூன்றும் அல்ல. விரும்புவோரது விருப்பமும் அல்ல. எமது விருப்பம் நாடும் பொருளும் அல்ல. இவை எல்லாவற்றிற்கும் அப்பாலே நீ உள்ளாய். இவை எல்லாம் வெறும் புறத் தோற்றப்பாடுகள். நகைக்கும் பூவாகவும் மின்னும் நட்சத்திரமாகவும் தோற்றுவது நீயே. இந்த நிலையில், உன்னை விருப்பம்கொள்ள வைக்க இந்த உலகில் பொருளேது?

ஆசியுடனும் அன்புடனும்
ஸ்ரீ சத்ய சாயி பாபா

## நவம்பர் 23, 1968இல் பாபாவினது 43ஆவது பிறந்த தினத்தன்று

# 9. பாபா ஆற்றிய உரையின் தமிழாக்கம்

நல்லவர்களைப் பாதுகாக்கவும் தீமை செய்பவர்களை அழிக்கவும் உறுதியான அத்திபாரத்தில் தர்மத்தை நிலைநிறுத்தவும் நான் யுகந் தோறும் அவதரிக்கின்றேன். எப்பொழுது அமைதியின்மை உலகத் தைச் சூழுகின்றதோ அப்பொழுது, பிரசாந்தி பெறும் வழிகளை நிறுவ வும் சாந்தியின் வழியில் மனித சமுதாயத்தை கற்பிக்கவும் கடவுள் மனித வடிவில் வருவார். தற்காலத்தில், குடும்பத்தில்,பாடசாலையில், சமுதாயத்தில், சமயங்களில், நகரங்களில், நாடுகளில் இருந்த சாந்தி யையும் ஒற்றுமையையும், போட்டிகளும் பொறாமைகளும் பறித்து விட்டன.

சாதுக்களாலும் முனிவர்களாலும் கடவுளின் வருகை ஆவலோடு எதிர்பார்க்கப்படுகின்றது. சாதுக்கள் பிரார்த்தித்தார்கள்—நான் வந் துள்ளேன். எனது பிரதான பணிகள் வேதங்களையும் பக்தர்களையும் காப்பாற்றுதல். உங்களுடைய நற்பண்புகளையும் உங்களுடைய மனக் கட்டுப்பாட்டையும், உங்களுடைய பற்றின்மையையும், உங்களுடைய நம்பிக்கையையும், உங்களுடைய உறுதிப்பாட்டையும் கொண்டுதான் மக்கள் எனது மகிமையை மதிப்பிடுவார்கள். சிறிதளவேனும் அகங் காரம் இல்லாது முழுமையாகவும் பரிபூரணமாகவும் என்னுடைய கரங்களில் நீங்கள் உங்களை அர்ப்பணித்துவிட்டபொழுதுதான், நீங்கள் ஒரு பக்தன் என்று உரிமைகோர இடமுண்டு. அப்பொழுதுதான் இந்த அவதாரம் வழங்கும் அனுபவங்களின் மூலமாக நீங்கள் ஆனந்தத்தை நுகர முடியும். கடவுளோடு மனிதசமுதாயம் நெருக்க பெறவேண்டு மென்றே இந்தக் கடவுள் அவதாரம் மனிதரைப்போல் நடக்கின்றது. அதன் தெய்வநிலையை மக்கள் அடையவேண்டும் என்று விரும்புகிறது. கடவுள் மனித உருவில் வருவதற்கான காரணம், உங்களுக்குள்ளே இருந்து உங்களை இயக்கும் கடவுளை உணரவைக்கும் பொருட்டே.

தர்மவழிக்கு பகைவர்கள் என அடையாளம் செய்யப்படக்கூடிய ஒருசிலரைக் கொன்று அதன் மூலமாகத் தர்மத்தை நிலைநிறுத்தவே இராமர், கிருஷ்ணர் போன்ற அவதாரங்கள் வந்தன. ஆனால் இப் பொழுது எவருமே முழுமையாக நல்லவர்கள் அல்லர். ஆதலால், கடவுளின் பாதுகாப்புக்கு எவர் தகுதியானவர்கள்? எல்லோரும்

கொடுமைக் கறைபடிந்தவர்கள். அவதாரம், கொடுமையை வேரோடு அழிக்கத் தீர்மானித்தால் யார் நம்பப்போகிறார்கள்? ஆதலால் நான் பல பல வழிகளில் மனிதனுடைய புத்தியைத் திருத்தவே வந்துள்ளேன். நான் எல்லோருக்கும் புத்திமதி கூறவேண்டும். உதவ வேண்டும். கட்டளையிடவேண்டும். குறை கூறவேண்டும். நண்பனாகவும் நலன்விரும்பியாகவும் துணைநிற்க வேண்டும். அப்பொழுது அவர்கள் தீய இயல்புகளைக் கைவிட்டு நேர்ப்பாதையை அறிந்து, அந்தப் பாதையில் நடந்து இலக்கினை அடைவார்கள். இலக்கை அடைய வழிகளைக் கூறும் வேதங்கள் சாஸ்திரங்கள் மற்றும் சமய நூல்களின் பெருமதியை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். என்னை நீங்கள் ஏற்று 'ஆம்' என்று சொன்னால், நானும் பதிலளித்து 'ஆம், ஆம். ஆம்' என்றுசொல்லுவேன். என்னை மறுத்து 'இல்லை' என்று சொன்னால் நானும்'இல்லை' என்று எதிரொலிப்பேன். வாருங்கள், சோதியுங்கள், அனுபவியுங்கள், நம்பிக்கை வையுங்கள், என்னை பயன்படுத்தும் வழி அதுவே.

எந்தவொரு உரையிலும் நான் சாயி பாபா என்று குறிப்பிடுவதில்லை. ஆனால் நான் சாயி பாபாவின் அவதாரம் என்ற பெயரைத் தாங்கி வருகிறேன். கடவுளின் வெவ்வேறு தோற்றங்களான சாயி, ராமா, கிருஷ்ண போன்ற தோற்றங்களில் சிறிதளவு வேறுபாட்டைத் தன்னும் நான் ஏற்பதில்லை. இந்தத் தோற்றம் கூடிய முக்கியத்துவமானது, அந்தத் தோற்றம் குறைந்த முக்கியத்துவம் ஆனது என்று நான் கூறுவது கிடையாது. உங்களுக்குப் பிடித்தமானது என்று நீங்கள் தெரிந்தெடுத்த கடவுளை, உங்களுக்கு ஏற்கனவே பரீட்சயமான வழிகளில் தொடர்ந்து வழிபடுங்கள். அப்பொழுது நீங்கள் எனக்குக் கிட்டக் கிட்ட வருவதைக் காண்பீர்கள். ஏனென்றால் எல்லா நாமங்களும் எல்லா ரூபங்களும் என்னுடையவையே. என்னைக் கண்டு என் உரையைக் கேட்ட பிறகு உங்களுடைய இஷ்ட தெய்வங்களை விட்டுப் புதிதாக ஒன்றைப் பின்பற்றவேண்டும் என்ற தேவை இல்லை.

இந்த அவதாரம் செய்யும் ஒவ்வொன்றும் முன்னே தீர்மானிக்கப்பட்டவை. சத்தியத்தையும் தர்மத்தையும் வளர்க்க இராமர் வந்தார். சாந்தியையும் பிரேமையையும் வளர்க்க கிருஷ்ணர் வந்தார். இப்பொழுது இந்த நான்கும் (சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை) அற்றுப் போகும் அபாய நிலையில் உள்ளன. இதற்காகத்தான் இந்த சாயி அவதாரம் வந்துள்ளது. காடுகளுக்கு ஓடிவிட்ட தர்மங்கள் மறுபடியும் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் கொண்டு வரப்பட வேண்டும். கிராமங்களையும் நகரங்களையும் சேதமாக்கும் அதர்மம் காடுகளுக்கு விரட்டப்பட வேண்டும்.

மங்கள வாழ்வின் வழியை நீங்கள் மறந்துவிட்ட காரணத்தால் ஆனந்தமெனும் பொக்கிஷத்தின் திறவுகோலைத் தரவும் அந்த ஆனந்த ஊற்றைத் தட்டி எடுக்கும் முறையைக் கற்பிக்கவும் நான் வந்துள்ளேன். உங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் இந்தக் காலத்தை விரயமாக்கினால் அது உங்களுடைய வினையின் தலைவிதியாகும். அற்ப பொருட்களைப் பெறவும், அற்ப வருத்த மாற்றங்களைப் பெறவும் பதவி உயர்வுகளைப் பெறவும் உலகியல் இன்பங்களை, வசதிகளைப் பெறவுமே நீங்கள் என்னிடம் வந்துள்ளீர்கள். நான் உங்களுக்குத் தரவென்று கொண்டுவந்த முக்தி இன்பத்தை (விடுதலையை) என்னிடம் இருந்து பெற மிகச் சிலரே விரும்புகிறார்கள். இவர்களுள்ளும் ஆத்மீக பயிற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெறுபவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு சிலரே.

உங்களுடைய உலகியல் சம்பந்தமான புத்தி. அறிவு கடவுளின் வழிகளை அளந்தறியமாட்டாது. தனித்து புத்திக் கூர்மையினால் அவரை அடையாளம் காணமுடியாது. கடவுளிடம் இருந்து நன்மைகளை அடையலாமே ஒழிய அவரை விளங்கப்படுத்த உங்களால் முடியாது. உங்களுடைய விளக்கங்கள் எல்லாம் ஊகங்கள். அவை மிகப் பெரிய வசனங்களில் உங்கள் அறியாமையை மூடிமறைக்க எடுக்கும் முயற்சிகள். என்னிடம் இருந்து உயர்ந்த வாழ்வின் இரகசியத்தை அறிந்துகொண்டதற்குச் சான்றாக ஏதேனும் ஒன்றைத் தினமும் உங்கள் வாழ்வில் பயின்று வாருங்கள். உதாரணமாக, விரிந்த சகோதரத்துவம் உங்களிடம் இருப்பதாகக் காட்டுங்கள். கூடிய இனிமையாகவும் மனக் கட்டுப்பாடாகவும் பேசுங்கள். அமைதியான முறையில் அர்ப்பணமாகி வெற்றியையும் தோல்வியையும் தாங்கிக்கொள்ளுங்கள். உங்கள் ஒவ்வொருவரினதும் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக்கு எப்போதும் தெரிவதால் இரக்கத்தால் நான் இலகுவில் சலனம் அடையமாட்டேன். இறந்த காலமும் பின்னணியும் எனக்குத் தெரிவதால் என்னுடைய மறுதாக்கம் வித்தியாசமானது. முந்திய பிறப்பில், தெரிந்துகொண்டு செய்த தீமைகளின் விளைவு என்பதனால், உங்களுடைய துன்பம் தொடரும்படியாக விட்டுவிடுகிறேன். அடிக்கடி சிறிதளவில் நஷ்டஈடு செய்து சுகமளிக்கிறேன். உங்களுக்கு இன்பத்தையோ துன்பத்தையோ நான் அல்ல உண்டுபண்ணுவது. உங்களைப் பந்தப்படுத்தும் இந்தச் சங்கிலிகளை நீங்களே செய்துகொள்கின்றீர்கள். நான் ஆனந்தத்தின் திருவுரு. வாருங்கள், என்னிடம் இருந்து ஆனந்தத்தை எடுங்கள். அந்த ஆனந்தத்தில் வாழுங்கள். அதன்மூலமாகச் சாந்தி நிறைந்தவர்களாக இருங்கள்.

என்னுடைய நடவடிக்கைகள்தான், நான் கட்டிக்கொண்டிருக்கும் பணியின் அதாவது நான் வந்துள்ள நோக்கத்திற்குரிய பணியின் அத்திபாரமாகும். நீங்கள் காணும் அற்புத நடவடிக்கைகள் எல்லாம் அந்தவிதமாகவேதான் கொள்ளப்படவேண்டும். ஒரு அணைக்கட்டின் அத்திபாரத்துக்கு எத்தனையோவிதமான மூலப்பொருட்கள் தேவை. இவை இல்லாமல், அணைக்கட்டு நீடிக்கவோ, நீரை அணைபோடவோ மாட்டாது. மனிதன் தனது உயர்வுக்குக் கடவுளின் அவதாரமொன்றை பல வழிகளிலும் பாவிக்கவேண்டும்.

கடவுளுக்குத் தன்னைப் பிரபல்யப்படுத்தும் நோக்கம் இல்லை. எனக்கு எந்தவிதமான பிரபல்யமும் தேவை இல்லை. அதுபோன்றுதான் கடவுளின் எந்த அவதாரங்களுக்கும். என்னத்தைப் பிரசித்தப்படுத்த துணிகிறீர்கள்? என்னையா? என்னைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? என்னைப்பற்றி இன்று, ஒன்றைச் சொல்லுவீர்கள். நாளைக்கு வேறொன்று சொல்லுவீர்கள். உங்கள் நம்பிக்கை இன்னமும் திடமாக வில்லை. உங்கள் உலக காரியங்கள் நன்றாக நடந்தால் என்னைப் புகழ்வீர்கள். தீயதாக நடந்தால் இகழ்வீர்கள். நீங்கள் என்னைப் பிரசித்தப்படுத்தத் துவங்குகின்றபொழுது, மற்றவர்களைத் தாழ்த்தி, தம்மை உயர்த்தி அதிகம் பணம் சேகரிக்கும் சாதாரண மனிதருடைய மட்டத்திற்கு இறங்கி வருகின்றீர்கள்.

எங்கே பணம் சேகரிக்கப்படுகிறது அல்லது பொக்கிஷப்படுத்தப் படுகிறது அல்லது வெளிக்காட்டப்படுகிறது, அங்கே நான் பிரசன்னமாகமாட்டேன். எங்கே நேர்மை, நம்பிக்கை, சரணாகதி போற்றப் படுகின்றதோ அங்கே நான் வருவேன். பிரசித்தி தேடுபவர்கள் அற்பர்களே. அவதாரங்களின் விடயத்தில் பிரசித்தம் தேடுதல் என்பது பொருந்தாத விடயம். அவதாரங்களுக்கு விளம்பரம் தேவையில்லை.

தர்மத்தை நிலைநாட்டுதலே எனது இறுதிக் குறிக்கோள். தர்ம போதனை, தர்மம் பரப்புதல் ஆகியன அதை அடையும் வழிகள். நீங்கள் அற்புதம் என அழைக்கும் இவைகள், அந்தக் குறிக்கோளை அடையும் சில வழிகள். சாதகன் ஒருவனுடைய முன்னேற்றத்திற்கு சித்துகளும் யோக வல்லமைகளும் தடையாக அமையும் என்று இராமகிருஷ்ண பரமகம்சர் சொன்னதாக உங்களில் சிலர் குறிப்பிடுகிறீர்கள். ஆம், சித்துகள் ஒரு சாதகனைத் தப்பான வழியில் செல்ல வைக்கலாம். சித்துகளில் ஈடுபடாமல், அவன் நேரே தனது குறியை நோக்கி நடக்க வேண்டும். யோக சித்திகளைச் செய்து காட்டும் ஆசையில் ஈடுபட்டால் அவனது அகங்காரம் அவனைக் கீழே கொண்டுவரும். ஒவ்வொரு சாத

கழ ம் கட்டாயம் பின்பற்றவேண்டிய சரியான புத்திமதியாகும் அது. ஆனால், இராமகிருஷ்ணர் உதவிசெய்ய விரும்பிய, நெறிப்படுத்த விரும்பிய, எச்சரிக்கைசெய்ய விரும்பிய ஆத்மீக சாதகனொருவனோடு என்னை சமப்படுத்துவதிலேதான் தப்பு ஏற்படுகிறது. இந்த யோக சித்திகள் எல்லாம் இந்த அவதாரத்தில் இயல்பாகவே உள்ளன. பாதுகாக்கும் நோக்குடனும், இயல்பான நிரந்தரப் படைப்பாக ஆனந்தத்தை அளிக்கும் பொருட்டும் இந்தப் பொருள்கள் படைக்கப்படுகின்றன. காத்தலும் அழித்தலும் சர்வ வல்லமையுள்ள கடவுளால் தான் செய்யப்பட முடியும். வேறு ஒருவராலும் முடியாது.

சந்தேகம் உள்ளோர் அறிவின்மையால் அரற்றுகிறார்கள். அவர்கள் சாஸ்திரங்களைக் கற்றால் அல்லது நேரடி ஞானானுபவத்தைப் பெற்றால் அவர்கள் என்னை விளங்கிக்கொள்ளலாம். கடவுளின் இயல்பைக் கண்டுபிடிப்பதற்குத் தேவையான ஆத்மீக பயிற்சிகளை மேற்கொள்ள முடியாதபடி உங்களின் உள்ளீடாக உள்ள சோம்பேறித்தனம் தடுக்கிறது. இந்தச் சோம்பல் நீங்கவேண்டும். எந்த வடிவில் அது தோன்றினாலும், சோம்பல் மனி ன இயல்பில் இருந்து அகற்றப்படவேண்டும். இதுதான் என்னுடைய அவதார நோக்கம். வருத்தங்களை மாற்றுவது, ஆறுதல் கூறுவது, தனிப்பட்டவரின் துன்பத்தை நீக்குவது போன்றவை அல்ல எனது பணி. அது மிகவும் முக்கியமானதொன்றாகும். துன்பங்களையும் கஷ்டங்களையும் நீக்குவது எனது பணியின் பக்க விளைவே. வேதங்களையும் சாஸ்திரங்களையும் மீளநிறுவி, அவற்றின் அறிவை எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்துவதே எனது பிரதான பணியாகும். இந்தப் பணி வெற்றியடையும், அதற்குத் தடையேற்படாது, பணியின் விரைவும் ஆறுதலாக்கப்பட முடியாது. கடவுள் விரும்பித் திட்டமிடும்பொழுது அவற்றிற்கு இடையூறு வரமுடியாது. நான் செய்வதெல்லாம் மந்திரவித்தை என்று மக்கள் கூறுவதை நீங்கள் கேள்விப்பட்டி ப்பீர்கள். தெய்வீக சக்தியின் வெளிப்பாடுகளை அப்படி வியாக்கியானப்படுத்தக்கூடாது. மந்திரவாதிகள் தமது உழைப்புக்காகவும், புகழுக்காகவும் தமது தந்திரங்களைச் செய்கிறார்கள் அது பொய் வேலை. ஏமாற்று வேலை. ஆனால் இந்தச் சரீரம் அப்படியான கீழ் நிலைக்கு இறங்காது கடவுள் தாம் வருவதற்குத் தீர்மானித்ததற்கு இணங்கவே இந்த உடம்பு வந்துள்ளது. சத்தியத்தை நிலைநாட்டவே அந்த இறை தீர்மானம். தெய்வீக சக்தி செய்து முடிக்கமாட்டாத காரியம் எதுவுமே இல்லை என்பதை நினைவுகூருங்கள். அது பூமியை ஆகாயமாக மாற்றவும், ஆகாயத்தைப் பூமியாக மாற்றவும் வல்லமை உள்ளது. இதனை சந்தேகிப்பதென்றால், நீங்கள்தான் பலயீனர்கள்.

பெரிய விடயங்களை, இந்தப் பிரபஞ்சத்தின் அற்புதப் படைப்பை அறியாதவர்களாகின்றீர்கள்.

வேத உட்பொருளை எல்லோருக்கும் உணர்த்தி, அந்த அற்புதக் கொடையை எல்லோரிலும் சொரிந்து, சனாதன தர்மமாகிய புராதன ஞானத்தைப் பாதுகாத்துப் பேணவே நான் வந்துள்ளேன். எனது நோக்கம் சந்தோஷத்தைப் பரப்புதல். ஆதலால் ஒருமுறை அல்ல இருமுறை அல்ல மும்முறை வரத் தயாராயுள்ளேன். ஏன், நீங்கள் என்னைத் தேவை என்று கூறினால் நீங்கள் விரும்புமளவுக்கு வரத் தயாராயுள்ளேன். உங்களில் பலர் நினைக்கக்கூடும், இந்தியாவின் பலபாகங்களில் இருந்தும், உலகின் பல பாகங்களில் இருந்தும் பல மக்கள் இங்கு வருவதால் பிரசாந்தி நிலைய பணப்பெட்டியில் பணத்தைக் குவித்துவிடுகிறார்கள் என்று. உள்ளதைக் கேளுங்கள். அன்பையும் பக்தியையும் தவிர எவரிடமிருந்தும் எதனையும் நான் ஏற்கிறதில்லை. கடந்த பல வருடங்களாக இதுதான் என்னுடைய தொடர்ச்சியான நடைமுறையாக இருந்து வருகிறது. இங்கு வரும் மக்கள் நம்பிக்கை, பக்தி, அன்பு ஆகிய பணத்தைமட்டும் தருகிறார்கள். அவ்வளவுப் தான்.

உங்களில் பலர் உடல் வருத்தங்களுடனும் பலவகைப்பட்ட மன வருத்தங்களுடனும் இங்கு வருகிறீர்கள். நீங்கள் இங்கு கொண்டுவரப் படுவதற்கு அவை இரைகளே. (மீன்பிடிக்க இரை கட்டுவதுபோல). ஆனால் முக்கிய நோக்கம், நீங்கள் அருளைப்பெற்றுக் கடவுளில் உள்ள நம்பிக்கையைப் பலப்படுத்தவேண்டும் என்பதே. பணிவையும் பக்தியையும் உங்களுக்கு, இந்தப் பிரச்சனைகளும் கவலைகளும் தருவதால், அவை உண்மையில் வரவேற்கப்படவேண்டியன. வெளியுலக இன்பங்களை நாடி ஓடுவதால்தான், இந்த நிம்மதியின்மை. அப்படியான ஆசைக்கு முடிவே இல்லை. ஒருமுறை நீங்கள் புலன்களுக்கு அடிமைப் பட்டுவிட்டால், நீங்கள் இறக்கும்வரை, அது தனது பிடியைத் தளர்த்தாது. அது தீராத தாகமாகும். ஆனால் நான் உங்களை என்னிடம் அழைத்து, உலகியல் சம்பந்தமான வரங்களையும் தருவது ஏனென்றால், நீங்கள் கடவுள் பக்கம் திருப்பவேண்டும் என்பதற்காக. நான் மக்கள் மத்தியில் செல்கின்றேன், அவர்களுக்குப் புத்திமதி வழங்குகின்றேன், நெறிப்படுத்துகின்றேன், ஆறுதல் கூறுகின்றேன், உயர் நிலைக்கு எழுப்பி விடுகின்றேன், சத்யம் தர்மம் சாந்தி பிரேமை என்ற பாதையில் வழிப் படுத்திவிடுகின்றேன். இந்த விதமாக முன்பு ஒரு அவதாரமும் செய்ததில்லை.

எவராயினும் எந்தவிதமான அபிப்பிராயங்களைக் கூறினாலும் என்னுடைய நடவடிக்கைகளும் அமைப்புகளும் மாற்றப்பட மாட்டாது. தர்மத்தை நிலைநாட்டுதற்கான எனது திட்டங்களையோ, எனது சொற்பொழிவுகளையோ அன்றி எனது காரியங்களையோ நான் வேறுபடுத்திக்

கொள்ளமாட்டேன். பல வருடங்களாக இந்த இலட்சியத்திற்கு அமைய வே நடந்து, நான் எந்தப் பணிக்காக வந்தேனோ அந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறேன். அதாவது, பிரசாந்தி பெறும் வழிகளில் நம்பிக்கையை ஊட்டி வருகிறேன். நான் நின்றுவிடவும் மாட்டேன். ஒரு அடிதன்னும் பின் எடுத்து வைக்கமாட்டேன். ஆய்வுகூட அறிவைக் கொண்டு உலகின் அதிபெரிய விஞ்ஞானிகூட என்னை விளங்கிக்கொள்ள முடியாது. நான் எப்பொழுதும் ஆனந்தம் நிறைந்தபடியே இருக்கிறேன். எதுதான் நடந்தாலும் எனது புன்னகையைத் தடுக்க ஒன்றும் நெருங்கமாட்டாது. அதனால்தான் உங்களுக்கு ஆனந்தத்தை வழங்கி உங்களுடைய சுமையைக் குறைக்கின்றேன். என்னை ஆரும் புகழும் போது நான் ஆனந்தம் அடைவதில்லை. அதேபோல் என்னை ஆரும் தூற்றும்போதும் நான் துன்பம் அடைவதில்லை. என்னுடைய நோக்கத்தையும் தாத்பரியத்தையும் ஒருவரும் அறியவில்லை என்றே சொல்ல வேண்டும். ஆனால், அதனால் நான் கவலை அடையவில்லை. என்னிடம் உள்ளவைபற்றி எவரும் குறிப்பிடும்போது நான் ஏன் விகாரமடைய வேண்டும்? அது எனக்கு எப்பொழுதும் ''ஆம் ஆம் ஆம்'' தான். எல்லாவற்றையும் கொடுத்து, ஆண்டவனிடம் சரணாகதி அடைந்தால், அவர் உன்னைக் காப்பாற்றி வழிப்படுத்துவார். இதற்காகவே ஆண்டவன் வந்துள்ளார். நான் அதனைச் செய்வாரென்றும் அதற்காகத்தான் இங்கு வந்ததாகவும் சொல்லுகின்றார். உங்களுடைய இதயத்தில் உள்ள குழப்பங்களையும் இதயத்தின் அபிலாசைகளையும் நான் அறிவேன், ஆனால் நீங்கள் என் இதயத்தைப் புரியவில்லை. நீங்கள் மனம் நோகும்போதும் மகிழ்வடையும்போதும் நானும் அவற்றைப் புரிந்துகொள்கின்றேன். ஏனென்றால் உங்கள் இதயத்தில் நான் இருக்கிறேன். ஒவ்வொருவரதும் இதயம் என்னும் கோயிலில் வசிப்பவன் நானே. எரியும் நிலக்கரித் தணலோடு, நிலக்கரி சேர்ந்திருந்தால்தான் தணலாகும். அதுபோல் என்னோடு உள்ள தொடர்பினையும் கூட்டினையும் இழந்துவிட வேண்டாம்.

இதயத்தில் என்னோடு நெருங்கிக்கொள்ளுங்கள். அதற்கு வெகுமதி கிடைக்கும். அப்பொழுது நீங்களும்கூடக் கடவுளின் அன்பின் சிறுபகுதியையேனும் பெற்றுக்கொள்ளலாம். இது ஒரு அரிய பெரிய சந்தர்ப்பம். நீங்கள் எல்லோரும் விடுதலையாக்கப்படுவீர்கள் என்பதில் நம்பிக்கையாய் இருங்கள். நீங்கள் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். உலகில் எல்லாம் நல்லாக நடைபெறப்போகின்றன, எல்லோருக்கும் ஆனந்தம் நிறைந்த சந்தோஷமான வாழ்வு மலரப்போகின்றது என்பதில் பலருக்குச் சந்தேகமாக இருக்கின்றது. பொற்காலம் திரும்பவும் வரும். இந்தத் தெய்வ உடம்பு வீணுக்கு வரவில்லை. மனித சமுதாயத்தைப் பீடித்துள்ள துன்பமான நெருக்கடியை மாற்றி அமைப்பதில் இது வெற்றிபெற்றே தீரும்.

# 10—1. ஒழுக்கமே வாழ்க்கை

*பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா*

ஒருவர் உலகியல் சார்ந்த பல்துறைக் கல்வியிலும் நன்கு தேர்ந்தவராயிருக்கலாம். அதிகாரமுள்ள உயர்ந்த பதவிகளை வகிக்கலாம். பெருஞ் செல்வத்தைக் கொண்டவராக இருக்கலாம். ஆனால் எல்லா உடமைகளிலும் சிறந்ததான கறையற்ற ஒழுக்கம் ஒருவர்பால் இல்லாவிடின் எல்லாத் தேட்டங்களினாலும், உடமைகளினாலும் பெறப்படும் அனுகூலங்களை அவர் ஒரு நொடியில் இழந்துவிடுவார்.

செழிப்பான பண்பு — நயம், மேன்மையான இயற்பண்புகள், அப்பழுக்கற்ற பண்பொழுக்கம் ஆகியனவே நல்லொழுக்கத்திற்கான அடிப்படைகளாகும். நற்பண்பு இல்லாத ஒருவர் விலங்கிற்கொப்பாவர். மனிதனின் விலையுயர்ந்த அணிகலன் ஒழுக்கமாகும். உலகத்து மனிதர்கள் வெளிப்புற அழகிற்கு மதிப்புக் கொடுக்கக்கூடும். ஆனால் கடவுளின் பார்வையில் நல்லொழுக்கமே உண்மையான செல்வமாகும். நன்னடத்தை உண்மையான அரும்பெரும் செல்வமாகும்.

கட்டுப்பாடு, பணிவு, கீழ்ப்படிவு ஆகியன இல்லாவிடின் அதி விவேகமுள்ள மனிதரும் அதலபாதாளத்தில் விழநேரிடும். ஒழுக்கமில்லாதவிடத்துக் கடுமையான உழைப்பின்மூலம் பெறப்பட்ட அறிவு பிரயோசனமற்றதாகிவிடும், அப்பழுக்கற்ற ஒழுக்கத்தை விருத்திசெய்யும் ஒரு மனிதனினால் அடையமுடியாதது எதுவுமில்லை. ஆன்மீகத் துறையிலும் அவன் அளப்பரிய வெற்றியையெய்துவான் மனிதனின் பெருமதியினை உலோகாயதரீதியான செல்வத்தின் மூலம் அளவிட முடியாது. ஒழுக்கத்தைப் பேணுவதன்மூலம் மாத்திரமே அவன் பெறுமதியடைகிறான். ஆகவே அவன் சாதாரண உடல், உள்ளம் ஆகியன சார்ந்த சக்திகளைப் பெறுவதில் மாத்திரம் திருப்தியடையக்கூடாது- அவன் எல்லாத் துறைகளிலும் வெற்றிபெற்று விளங்க நல்லொழுக்கத்தை விருத்திசெய்ய முயலல் வேண்டும்.

ஆன்மீகரீதியில் பூரணத்துவம் பெற ஒழுக்கத்தைப் பேணுவது முதன்மையானதெனப் பழமை வாய்ந்த இந்தியப் பாரம்பரியம் வலியுறுத்திக் கூறுகிறது. மதம் மதமேயல்ல. அதிகமானோர் இன்று ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக வெளிப்புற நடைமுறைகளுக்கு முக்கியத்துவமளித்து, ஆடம்பரத்தின் மூலம் மதத்தை மூட நம்பிக்கையாக்குகின்றனர். அவர்கள் உளத்தூய்மையிட்டுச் சிறிதும்

கவனிப்பதில்லை. சிலர் காவியணிந்து, நெற்றியில் விபூதியணிந்து, கழுத்தில் உருத்திராட்சம் அணிந்து, அத்தகைய அணிகலனின் வாயிலாகப் பார்ப்போரின் கவனத்தையீர்த்து அவர்களது பாராட்டைப் பெற முயலுவர். அவர்கள் பகட்டுக்காகக் கிரியைகளையும், பலிகளையும் மேற்கொள்ளுவர். அத்தகய வெளிப்புறப் பகட்டுகள் ஒழுக்கத்தைக் குறைப்பனவாகா.

மனத்தூய்மையும், நேர்மையும் இல்லாதவிடத்துக் கிரியைகளும் உடலைத் தூய்மை செய்வதும் ஞானத்தை அளிக்கா. ஒருவர் மனதை சுத்திகரிக்காவிடின் பத்துத் தடவைகள் ஸ்நானஞ்செய்தாலும் அழுக்குடனேயே இருப்பான். ஒருவர் ஒருகவளம் உணவினை உள்ளங்கையிலெடுத்து வாயைச்சுற்றி முந்நூறு தடவைகள் கொண்டு சென்றாலும், அதை வாயினுட் செலுத்தினாலன்றி அவ்வுணவின் சுவையை அறிய முடியாது. அவ்வாறே நல்லொழுக்கத்தை வெளிப்புற நடைமுறைகளாலன்றி உட்புற அப்பியாசங்களினாலேயே வளர்க்க முடியும். ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு உட்புறத் தூய்மையே அடிப்படைத் தேவையாகும். ஆகவே ஆன்மீக வழியை நாடுவோர் இதுபற்றி மிக எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். ஒவ்வொரு நபரும் பேணி வளர்க்கவேண்டிய மூன்று முக்கிய அம்சங்களாவன : தூய்மை, பொறுமை, ஊக்கம் என்பனவாகும். இவையே உண்மையில் மனித முயற்சியின் எல்லா அம்சங்களிலும் வெற்றியைப் பெறுவதற்கு ஆரம்பப் படிக்கற்களாகும். இப்பண்புகளைக் கொண்ட மனிதர்கள் தமது குறிக்கோளையடைவது நிச்சயமாகும்.

ஒவ்வொரு மாணவனும் தனது மனதிற் தூய்மையான சிந்தனைகளை நிரப்பும் வகையில் தனது பாடப் புத்தகங்களுடன், சமயநூல்களையும் படித்தல்வேண்டும். மனிதன் பொறுமையை வளர்க்கவேண்டும். ஏனெனில் பொறுமையின்மூலம் மிகக்கடினமான காரியத்தையும் செய்ய முடியும் அல்லது மிகச் சிக்கலான பிரச்சினையைத் தீர்க்க முடியும். மனிதனால் பொறுமையின் மூலம் மிகமோசமான நிலைமையையும் சமாளிக்க முடியும். ஒழுக்கத்தின் மூன்றாவது அம்சமான ஊக்கம், முன்னேற்றப் பாதையிற் சலியாது சென்று இறுதிக் குறிக்கோளையடைய மனிதனுக்கு உதவும். இம்மூன்று நற்பண்புகளின் வாயிலாக வாழ்க்கை தூய்மையடையும். இவை இல்லாதவிடத்து அது பேயின் உறைவிடமாகும்.

ஒழுக்கத்தில் தனிப்பட்ட ஒழுக்கம், தேசிய ஒழுக்கம் என இரு கூறுகளுள்ளன. இவை ஒன்றுடனொன்றிணைந்து வளரும்போது தனிப்

பட்ட ரீதியிலும், கூட்டுரீதியிலும் முன்னேற்றம் ஏற்படும். தனிப்பட்ட முயற்சி இவ்விரு ஒழுக்கக் கூறுகளிலொன்றைக் கவனிக்காதவிடத்து நல்ல பெறுபேறுகளைத் தரமாட்டாது. ஏனெனில் அவை ஒரு நாணயத்தின் முகப்புப்பக்கமும், மறுபக்கமும் போன்றவையாகும். இப்பக்கங்களில் ஏதாவதொன்று தேய்ந்திருப்பின் அந்நாணயம் புழக்கத்துக்குதவமுடியாது.

இந்தியப் பண்பாடு தனிப்பட்ட ஒழுக்கத்திற்கு உயர்ந்த முக்கியத்துவம் அளிக்கிறது. தூய்மை, பொறுமை, ஊக்கம் ஆகிய மூன்று பண்புகளுமுள்ள ஒருவர் சமூகத்தால் என்றும் மரியாதையும், மதிப்புமளிக்கப்படுவர். செல்வம், பதவியதிகாரம், கல்வியறிவு ஆகியன இருந்தாலும் ஒருவரிடம் இம்மூன்று விலைமதிப்பற்ற பண்புகளுமில்லாதவிடத்து அவரைப் பண்டைய இந்தியச்சமுதாயம் மதித்ததில்லை. சுயநலம், தற்பெருமை, பொறாமை ஆகியன குடிகொண்ட கல்விச் செருக்காளர் ஒருபோதும் தத்துவ ஞானிகளாகக் கருதப்பட்டதில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக, தனிப்பட்டோரின் குறைபாடுகள் பற்றிச் சமூகம் கையாண்டுவந்த கண்டன வழிமுறைகள் இன்று வழக்கில்லாதொழிகின்றன. நவீன கல்வியும், தற்கால சமூகமும் தனிப்பட்டவரின் ஒழுக்கத்துக்குரிய அங்கீகாரம் வழங்கவில்லை. இன்று மக்கள் சொற் சிலம்பத்தினாலும், கருவத் தோற்றத்தினாலும், விளம்பரத்தினாலும் கவரப்படுகின்றனர். தனிப்பட்டவரின் ஒழுக்கத்தையிட்டு எவரும் கவலை கொள்வதில்லையென்பதோடு, ஒழுக்கமற்றவரை ஒருவரும் கடிந்துரைப்பதுவுமில்லை. உயர்ந்த பதவிகளிலுள்ளோரின் தனிப்பட்ட ஒழுக்கமின்மையை மக்கள் மன்னித்துவிடுவதாலேயே சமூகத்திற் பல பிரச்சினைகள் மலிந்துள்ளன. ஒழுக்கமும், நடத்தையும் வருந்தத்தக்க நிலையிலுள்ளன. மக்கள் தமது இலட்சியங்களை நாளுக்குநாள் மாற்றிக்கொள்கிறார்கள்.

முன்னைய காலத்திற் பெரிய மனிதர்கள் திறம்பட வாழ்ந்து வரலாறு படைத்தார்கள். அவர்கள் தர்மத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றி உயர்ந்த இலட்சியங்களைக் கடைப்பிடித்தார்கள். தாம், ஆட்சியாளர்கள் எலலோரையும் வளர்க்குமாறு வேண்டிக்கொண்ட இலட்சியங்களின்படியே தாமும் வாழ்ந்து முன்மாதிரியாகத் திகழ்ந்தனர். அவர்கள் கறையற்ற ஒழுக்கத்துடன் வாழ்ந்ததோடு அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலோ அரச பரிபாலனத்திலோ மற்றையோர் கிஞ்சிற்றும் குறைகாண அவர்கள் இடமளிக்கவில்லை. உதாரணமாக நாம் மற்றைய ஆன்மீகத் தலைவர்களைக் குறிப்பிடாது சிவாஜியின் வாழ்க்கையை எடுத்துக்கொள்வோம். சிவாஜியின் வாழ்க்கையும் அவ

ரது ஆட்சியும் ஆன்மீகப் பண்புகளாலானவையென்பதோடு, அவரது நடத்தையில் எதுவித களங்கமுமற்றவராயுமிருந்தார். யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட முஸ்லிம் பெண்களை நடத்துவதில் அவர் காட்டிய உயர்பண்பு பாராட்டத்தக்கது. ஏனெனில் அவர் தாயைக் கவனிப்பது போல் அவர்களை மிகுந்த மரியாதையுடன் கவனித்து அவர்களுக்கு எவ்வித துன்புறுத்தலுமில்லாமல் அவர்களுடைய உறவினர்களிடம் கையளித்தார். இதுபோன்ற பல உயர் பண்புகளுக்காகவே வரலாற்றில் சத்திரபதி சிவாஜி நன்கு நினைவுகூரப்படுகிறார். எனினும் அவரது மகன் சாம்பஜி தனிப்பட்ட ஒழுக்கமென்னும் செல்வமின்மையால் பேராண்மையும், போர்த்திறனுமிருந்துங்கூட இழிவையே தேடிக் கொண்டான். ஒழுக்கமில்லாதுபோனதினால் அவன் தன் நாட்டு மக்களை பேராபத்தின்பால் இட்டுச்சென்றான். நல்லொழுக்கம் நிறைந்த தலைவர்களே நாட்டைக் காப்பவராவர். உறுதிமிக்க ஒழுக்கமும், பெருந்தன்மை வாய்ந்த நடத்தையுமுள்ளவர்களால் வகுக்கப்படும் இலட்சியங்கள் மனித இனத்துக்குப் பெருஞ்செல்வமாகும். தனிப்பட்ட ஒழுக்கமற்ற மனிதன் ஊர் பெயரில்லாது போய்விடுவான். ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்வோரால் நாட்டுக்குப் பெரும் ஊறுவிளையும். எமது உள்ளார்ந்த பலவீனங்களை எதிரிகள் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வர். படித்தோர், பொறுப்புவாய்ந்தோர், நாடுகளின் ஆட்சியாளர்கள் ஆகியோர் இவ்வுண்மையைத் தமது மனத்திலிருத்த வேண்டும். அவர்கள் ஒழுக்கமற்றவர்களாயிருப்பின் எதிரிகள் நாட்டைக் கைப்பற்றுவர். நாட்டின் மூளைசாலிகள் தேசிய ஒழுக்கம் இல்லாதவராயிருப்பின் நாடு கேடு சூழும். ஒழுக்கமின்மையால் ஏற்பட்ட விபரீத விளைவுகளைப்பற்றிய பல உதாரணங்களை வரலாறு கூறும்.

மனிதர்களிடையே, குறிப்பாகப் படித்தோரிடையே, இன்னுமொரு பலயீனத்தை நாம் காண்கிறோம். அவர்கள் புகழுரைக்கு விரைவில் அடிமையாகிவிடுகிறார்கள். புகழுரையில் மயங்கி, வேண்டப்படும் எந்த உதவியையும் சிலர் செய்வர், அவர்களைத் தேவர் தலைவர் இந்திரன் எனவும், சந்திரன் எனவும் புகழும்போது அவர்கள் தமது சுயநிலையிழந்து எதையுஞ் செய்யத் துணிவர். அவர்கள் ஆராய்ந்தறியும் அறிவினையிழப்பதோடு, எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாதென்பதைத் தெரியாது போவர். பகுத்தறிவும் ஒழுக்கத்தின் ஒரு பகுதியாகுமென்பதோடு, விவேகமுள்ள மனிதர்கள் இதை இனங்கண்டு கொள்ளுதல் வேண்டும். புகழ் விரும்புதல் தனிப்பட்ட ஒழுக்கத்தைக் குறைத்துவிடும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். வாழ்க்கையென்னும் போராட்டத்தில் ஒருவர் அண்டிப்பிழைப்பதைத்

தவிர்த்துக்கொள்ளவே வேண்டும். பண்டைய காலத்தில் மக்கள் இன்றுபோல் அரசர்களைப்படியிறக்கவும், அமைச்சர்களைப் பதவிவிலக்கவும் நேர்மையற்ற உபாயங்களைக் கையாளவில்லை. நெருக்கடி ஏற்படும் காலத்துக் குடும்ப குருவின் ஆலோசனையைக் கேட்டு அதன் பிரகாரம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சுயநலமற்ற, மதி நுட்பமிக்க குருமார் இல்லாத காரணத்தால் அரசர், அமைச்சர்கள் ஆகியோர் வஞ்சகச் சூழ்ச்சிக்குப் பலியாகின்றனர். நெருக்கடி ஏற்படுந் தருணத்தில், ஆட்சியாளனுக்கும், அரசுக்கும் தனிப்பட்ட ஒழுக்கம் கைகொடுக்கிறது. ஆகவே ஒவ்வொருவரும் தத்தமது தனிப்பட்ட ஒழுக்கத்தையும் நல்ல குணங்களையும் பேணிவளர்த்தல்வேண்டும். இதிற் படித்தவர்கள் முன்மாதிரியாயிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாட்டிலும், சமூகத்திலும் சமாதானமும், பாதுகாப்பும் நிலவும்.

குற்றமற்ற ஒழுக்கம், தெய்வீகத்தன்மையின் பாற்பட்டதெனலாம். ஒவ்வொரு மனிதனும் தெய்வீகத்தன்மையை வெளிக்கொணர உரித்துடையவனுகிருன். அது மனிதனின் தனிச் சிறப்புரிமையென்பதோடு, கல்வி இதையடைவதற்கு அவனுக்குத் துணைபுரிகின்றது. கல்வியென்பது பலநூல்களை மாத்திரம் படிப்பதெனக்கொள்ளலாகாது. அது மனிதனின் உள்ளத்தைத் தூய்மையாக்கும் ஒரு படிமுறையாகும். கல்வி மனிதனின் ஒழுக்கத்துக்கு ஆதாரமாயிருக்கும் நன்னெறி, ஆன்மீகம் ஆகிய செல்வங்களை வளர்த்துச் சுயநலத்தை ஒழிக்க அவனுக்குக் கற்பிப்பதோடு, தியாக உணர்வையும் ஊட்டுகிறது.

எனினும் இன்று கல்வி சுயநலத்தை மாத்திரமே ஊக்குவிப்பதோடு, மக்களைத் தமது புலன்களுக்கு அடிமையாக்குகிறது. உண்மையான கல்வியானது புலன்களை எவ்வாறு வெல்வதென்றும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவதென்றும் மனிதனுக்குப் புகட்டுதல்வேண்டும். மனித குலத்தின் உள்ளார்ந்த தெய்வீகத்தன்மையை ஒருவர் வெளிக்காட்டக் கல்வி உதவுதல்வேண்டும். அது எமது புது அனுபவத்தைப் பழையதுடன் ஒருங்கிணைத்து வாழ்க்கையைப்பற்றிய புதிய கண்ணோட்டத்தினை உருவாக்க உதவுதல்வேண்டும்.

சுய அருள் வெளிப்பாடே கல்வியின் அதிமுக்கியமான குறிக்கோளாகும். நேரடியான ஆன்மீக கூட்டுறவின்மூலம் பெறப்படும் ஞானத்தினுலேயன்றி, மறைமுகமான தொடர்பினுல் ஒப்புயர்வற்ற ஞானத்தைப் பெறமுடியாது. வாழ்க்கைக்கு மிக முக்கியமான இந்நேரடி அனுபவத்தைப் பெறுவதற்குத் தனிப்பட்ட ஒழுக்கமும் முக்கியமானதாகும்.

முற்காலத்தில் எம்மிடையே தழும்பாத ஒழுக்கமிக்க பக்திமான்கள் வாழ்ந்தார்கள். தேசாபிமானிகளுக்குக் குறைவிருக்கவில்லை. எம்மிடையே எண்ணற்ற வலிமைவாய்ந்த, துணிச்சல்மிக்க, சக்திவாய்ந்த வீரர்கள் இருந்தனர். இன்றும் புண்ணிய பூமியாகிய பாரதநாட்டில் அத்தகைய வீரர்கள் கணிசமானோர் உள்ளனர். அத்தகையோர் இலட்சக்கணக்கில் இருந்தாலும் அவர்களுக்குச் சமுதாயத்தில் இடமில்லாதிருப்பது வருந்தத்தக்கது. உலோகாயதரீதியிற் திறமைகள் பெற்றும், படாடோபத்தில் ஈடுபட்டுமுள்ளோருக்கு இன்று, மிகவும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. உரத்த குரலுள்ளவருக்கே இன்று காலமாயிருப்பதோடு, பகட்டாரவாரத்திற்கே உலகிற் செல்வாக்குப் பெருகுகிறது. நல்லொழுக்கம் நிறைந்தோர் ஒதுக்கப்படுகின்றனர். ஆகவே தனிப்பட்ட ஒழுக்கமும், தேசிய ஒழுக்கமும் ஒன்றாக வளர்க்கப்படவேண்டுமென்பதே இன்றைய அதிமுக்கிய தேவையாயிருக்கிறது.

தேசபக்தியென்பது தேசிய ஒழுக்கத்தின் ஒரு வெளிப்பாடாகும். தனது உடலைப்போன்றே, தான் வாழும் நாடும் தனக்கு அருமையானதேயென ஒருவர் உணர்தல் வேண்டும். மனிதனுக்குத் தன்னுள்ளே காணப்படும் உயிர்த்துடிப்பினைப்போன்றே தாய்நாடும் அருமையானதாயிருத்தல்வேண்டும். உடலும், நாடும், உருவமும் அதன் பிரதிவிம்பமும் போன்றவை. அவை மனிதனின் இருகண்கள் போன்றவை.

தேசிய ஒருமைப்பாடுபற்றிய உணர்வும் அல்லது தேசிய உணர்வும், தேசிய ஒழுக்கத்தின் ஒரு வெளிப்பாடேயாகும். இன்று மக்கள் தமது கண்ணோட்டத்தினைத் தமது மாநிலங்களின் குறுகிய எல்லைகளுக்குள் மாத்திரமே செலுத்தி வருகின்றனர். தேசிய உணர்வு மறைந்து சிறிதும், சுயநலமிக்க பிரதேச உணர்வுமாக நாடு துண்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பகுதியும் முழுமையை மறந்து, ஈற்றில் பலவீனமாக்கப்படுகிறது. தேசிய உணர்வின்மையினாலேயே மான்சிங், தனது நாட்டவரும், பெரும் புகழ்பெற்ற வீரனுமான ரனபிரதாப்பைக் கைவிட்டு அந்நிய ஆட்சியாளனான அக்பரின் அடிமையானான். சுயநல நோக்கங்களினால், ஜயச்சந்திர, முகம்மதுகோரியுடன் சேர்ந்து மாவீரனான பிருதிவிராஜைத் தோற்கச் செய்தான். சிவபெருமானின் அடியார்களெனக் கூறிக்கொண்டு சில குருமார்கள் முகம்மது கஜனிக்கு உதவிசெய்து புகழ்பெற்ற சோமநாத ஆலயத்தின் அழிவுக்குக் காலானார்கள். தனிப்பட்ட முறையில் அவர்கள் நல்லவர்களாயிருக்கலாம்; ஆனால் அவர்க

ளுக்குத் தேசிய ஒழுக்கமும், பரந்த தேசிய நோக்கும் இல்லாது போய் விட்டன. குறுகிய நோக்கும், சுயநலமும் மேலோங்க அவர்கள் எதிரி களின் அணியைச் சார்ந்து தமது மக்களுக்குப் பிரதிகூலம் இழைத்தனர்.

ஒருவரின் தாய்நாட்டின்பாலுள்ள பக்தி இறைவன் பாலுள்ள பக்தியைப்போன்று அதே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒருவரின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு நேர்மையும், வாய்மையும் முக்கிய மானவை. அதேபோன்று தேசிய ஒழுக்கமும், தேசபக்தியும் ஒருநாட் டின் நலனுக்கு அவசியமானவையாகும். வாய்மையும் தேசபக்தியும் ஒருவரிடம் வளருமாயின் அவரது நோக்குப் பரந்ததாகவும், பாரபட்ச மற்றதாயுமிருக்கும். ஒவ்வொரு மாணவனும், ஒவ்வொரு பிரசையும், தன்னுற் பெறப்பட்ட நல்லொழுக்கம் என்னும் செல்வத்தைச் சமுதா யத்தின் மேம்பாட்டுக்கு உபயோகப்படுத்துதல் வேண்டும். திரும்ப எதுவித வெகுமதியையும் எதிர்பாராமல், மாயத் தோற்றங்கொண்ட தும், நிலையில்லாததுமான புகழுக்காகவும், மதிப்பிற்காகவும், கணிப்பிற் காகவும் பின்செல்லாது, ஒவ்வொருவரும் தனது ஆற்றல்களையும், உடை மைகளையும் தன்னலமற்ற முறையில் நாட்டுக்கு அர்ப்பணித்தல் வேண்டும்.

உயர்கல்வி பெறப்பெற ஒருவர் தனது உள்ளத்திற் பொறாமை, ஆணவம் ஆகியன போன்ற கெட்ட போக்குகளைப் புகவிடலாகாது. கல்வியின் மிக உயர்ந்த இலட்சியங்களாகப் பணிவையும், கீழ்ப்படிவை யும் இனங்கண்டு கொள்ளுதல் வேண்டும். ஒருவர் தனது தாய்நாட்டின் பால் அன்புகொண்டவராகத் தனிப்பட்ட ஒழுக்கத்தையும், தேசிய ஒழுக்கத்தையும் பேணுதல்வேண்டும். எம்மை ஈன்ற தாய்போன்று நாம் பிறந்த நாட்டையும் நாம் ஆழ்ந்த அன்புடன் நேசித்தல்வேண் டும். நல்ல இலட்சியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இராமாய ணத்திலுள்ள ஒரு சம்பவத்தை மாணவர்கள் நினைவுகூர்தல்வேண்டும். இச்சம்பவத்தின்மூலம் இராமரும் தனது நாட்டை மிகவும் நேசித்தார் என்பது தெளிவாகிறது.

ஸ்ரீராமரும், இலஷ்மணரும் வானரசேனையின் உதவியுடன் அவ் வானரங்களால் அமைக்கப்பட்ட பாலத்தின்மூலம் கடலைக் கடந்து இலங் கையைக் கைப்பற்றி, இராவணனைக் கொன்று சீதையை மீட்டனர். செல்வமும் வளமும் பொலிந்து விளங்கிய இலங்கையென்னும் பொன் னகரை இலஷ்மணர் பார்த்தார். இராமரின் ஆழ்ந்த நாட்டுப்பற்றை உலகுக்குத் தெரிவிக்கும்வண்ணம் இலஷ்மணர் பின்வருமாறு விளையாட்

டாகக் குறிப்பிட்டார் : ''அண்ணு ! தாங்கள் இலங்கையைத் தங்கள் தலைநகராகக்கொண்டு இங்கிருந்து ஆட்சியைப் புரிந்தால் என்ன? இந்த மகிழ்ச்சிகரமான நாட்டை விட்டுவிட்டு வறுமையும் சிறுமையும் மிக்க பாரதநாட்டுக்கு ஏன் திரும்பிப் போகவேண்டும்?'' இராமர் கூறுகிறுர் : ''இலஷ்மணு ! இது பொன்னகரமாக இருக்கலாம். எங்களை ஈன்ற தாயும், நாம் பிறந்த நாடும் சொர்க்கத்தைக் காட்டிலும் அருமையானவை. அழகில்லை என்பதற்காக எவரும் தம் தாயைத் தள்ளி வைப்பதில்லை. அதேபோன்று வறுமையிருந்தாலும் தான் பிறந்த நாட்டை ஒவ்வொருவரும் நேசித்து மதிப்பளிக்கிறுர்கள். இது தேசபக்தியின் அடையாளமாகும்.'' சூரியவம்சத்தில் உதித்த புகழ்மிக்க அரசர்களிடையே தனிப்பட்ட ஒழுக்கமும், தேசிய ஒழுக்கமும் நன்கு இணைந்துள்ளன. இதன் காரணமாக நாட்டின் மூலைமுடுக்குகளெல்லாம் இராமரின் பெயர் ஒலிக்கின்றது.

செல்வம் மிகுந்த அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு இந்தியா திரும்ப இருந்த சுவாமி விவேகானந்தரைச் சில நிருபர்கள் ஒரு மகாநாட்டுக்கு அழைத்தனர். அவரது தாய்நாடான இந்தியாபற்றிய அவரது கருத்துக்களை அவர்கள் வினவினர். சிலகணம் ஆழ்ந்த மௌனம் மேற்கொண்டபின் கவலையான புன்முறுவலுடன் அவர் பதிலளித்தார். ''முன்பும் இந்தியாவை நான் நேசித்து வந்தேன். இப்பொழுது இந்தியாவில் உள்ள ஒரு துளி புழுதியும் எனக்கு அருமையாயுள்ளது. எனக்கு இந்தியா இறைவனின் புனித பூமியாகத் தோற்றமளிக்கிறது.'' இது தேசபக்தி எனும் சுடரின் தெய்வீகப் பேரொளியாகும்.

ஒழுக்கத்தின் இவ்விரு அம்சங்களையும் விருத்திசெய்வதோடு ஒருவர் கட்டுப்பாட்டையும் வளர்த்தல்வேண்டும். கட்டுப்பாடு இல்லாத இடத்து ஒருவர் எவ்வளவு விவேகம் உடையவராயினும் அவரது கல்வி அவருக்குப் பலனளிக்காது. சிறுவர், சிறுமியருக்கு மாத்திரமன்றி ஒவ்வொரு பிரசைக்கும் கட்டுப்பாடு அவசியமானது. ஒரு நிறுவனமாயினும் சரி, அரசியல் ஆட்சியாயினும் சரி, இராணுவமாயினும் சரி, வர்த்தகம் அன்றி ஏதாவது தொழிலாயினும் சரி ஒவ்வொன்றிலும் வாழ்க்கையை, இது வழிநடத்திச் செல்கிறது. கட்டுப்பாடு மாத்திரமே வர்த்தகத்திலும், கைத்தொழிலிலும், கல்வி நிறுவனங்களிலும் அரசியல் ஸ்தாபனங்களிலும் வெற்றியளிக்கிறது. நாடும் கட்டுப்பாட்டின் மூலமே முன்னேற்றம் அடைகிறது.

சிறுவயதில் இருந்தே கட்டுப்பாட்டுணர்வு வளர்க்கப்படவேண்டும். நூல்களின்மூலம் கட்டுப்பாட்டைக் கற்றுக்கொள்ள முடியாது. தொடர்ச்சியான பயிற்சிமூலம் மாத்திரமே கட்டுப்பாடு உறுதியடைகின்றது. தலைவனின் கட்டளை முழுநம்பிக்கையுடன் கடைப்பிடிக்கப் படவேண்டும். விளையாட்டு மைதானத்தில் எவ்வளவு உணர்ச்சிவசப் படவேண்டியிருந்தாலும், உற்சாகமடைய வேண்டியிருந்தாலும் தலைவனின் ஊதல் ஒலிகேட்டதும் விளையாட்டு வீரர்கள் அசையாது நிற்பர். ஒரு படைத் தலைவனது அல்லது ஆசிரியரது கட்டளை மிகக் கவனமாக நிறைவேற்றப்படவேண்டும். நாம் பக்திப்பாடல்களை ஒன்று சேர்ந்து பாடும்போது அங்கு ஓர் ஒத்திசைவை ஏற்படுத்துதல்வேண்டும். ஒருவர் தாம் நினைத்தபடி பாடுவதோ, விளையாடுவதோ அல்லது கட்டளைகளை இடுவதோ விரும்பத்தக்கதல்ல.

துரதிஷ்டவசமாக இன்று கட்டுப்பாடு வெளிப்படையாகவே இல்லாதொழிந்து கட்டுப்பாடின்மை மேலோங்கி நிற்கிறது. அநேகமாக, உலகத்தில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் கிளர்ந்தெழுவதன் மூலம் அப்பல்கலைக்கழகங்கள் மூடப்படுகின்றன. அரசியல் கட்சிகளிடையே கட்டுப்பாடு இல்லாமையால் அங்கு உறுதியின்மை காணப்படுகின்றது. இன்று தனிப்பட்ட ஒழுக்கம், தேசிய ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியன மிகக் கீழ்நிலையில் இருப்பதால் வாழ்வின் பல துறைகளில் குழப்பமும், தொந்தரவுகளும் காணப்படுகின்றன. இவை மூன்றும் எல்லோராலும் கடைப்பிடிக்கப்படும்போதுதான் நாட்டில் சமாதானமும், பாதுகாப்பும் ஏற்படும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் ஆன்மீக உணர்வு விரைவாக வளர்க்கப்படவேண்டும். தத்துவமும், ஆன்மீகமும் துறவிகளுக்கு மாத்திரமே உரியது எனக் கருதுவது தவறாகும். எப்படியாயினும் ஆச்சிரமங்களில் தஞ்சம்புகுவதால் எவ்வித பயனும் ஏற்படாது என்பதை நாம் உணர்தல்வேண்டும். ஏனெனில் எங்கு புகலிடம் தேடினாலும் அங்கு பொறுப்புக்களை நாம் தட்டிக்கழிக்கமுடியாது. சமுதாயத்தில் வாழ்ந்தவாறே உங்கள் முன்னேற்றத்தை நீங்கள் அடைய முயலவேண்டும். சமுதாயச் சூழலின் தாக்கத்தைப் புறக்கணித்து மனிதன் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளமுடியாது. மனிதனின் ஒவ்வொரு சிந்தனையும் தேவையை ஒட்டியே தீர்மானிக்கப்படுகிறது.

இது சுற்றுப்புறச் சூழலை ஒட்டியும், மனத்தூய்மையை ஒட்டியுமே நிகழ்கிறது. தன்னை நேசிக்க முயல்கையில் மனிதன் தன்னைச் சுற்றியுள்ளோரை நேசிக்கமுடிகிறது. அன்பு, மகிழ்ச்சி, குதூகலம் ஆகியவை ஆன்மாவின் அருஞ் சொத்துக்களாகும். சிநேக மனப்பான்மையின் அடிப்படையில் மற்றவர்களுடன் இவற்றின் பயனைப் பகிர்ந்துகொள்ளும்பொழுதே அது நன்கு அனுபவிக்கப்படுகின்றது.

''தனக்குதவுதல் மற்றவர்களுக்கு உதவுவதற்கு வழிகோலும்''

''பொறுமையின் விளைவு வேதனையாகும்''

''வெறுப்பு வெறுப்பையே வளர்க்கும்''

''துன்புறுத்தினல் நீ துன்புறுத்தப்படுவாய்''

''நேசித்தால் நீ நேசிக்கப்படுவாய்''

அன்பே தெய்வம்
அன்பில் வாழுங்கள்.

# 10—2. பொறாமை அறியாமையின் விளைவு

### பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

பொறாமையும், வெறுப்பும் இரட்டைத் திருடர்களாவர். விருட்சங்களின் வேர்களைத் தாக்கும் பூச்சிகளைப் போன்றன அவை. உயர்ந்து பசுமையாய், வனப்புடன், மலர்க் கொத்துக்களாற் கிரீடந்தாங்கி, நறுஞ்சுவைமிக்க கனிகளைத் தரும் விருட்சங்களின் வேர்களினூடே இப் பூச்சிகள் நுழைந்துவிடுகின்றன. அவ்வழகிய விருட்சம் முற்றாக அழிந்து விடும்வரை கண்டுகொள்ள முடியாதவாறு இவை பெருகிச்செழிக்கும். இதேபோன்று இவ் இரட்டைத் திருடர்கள் அதாவது பொறாமையும், வெறுப்பும் ஒருவரிடம் புகுந்துகொண்டதும் அப்பொழுதிலிருந்தே அவரது வீழ்ச்சி தவிர்க்கமுடியாத தலைவிதியாகிவிடுகிறது. கணப் பொழுதுக்குள் அவர் வருடக்கணக்காகப் பாடுபட்டுத்தேடிப் போற்றிப் பாராட்டிய நற்பண்புகள் யாவும் தவிடுபொடியாகிவிடும். மனிதனுக்குப் பொறாமையைப்போன்ற மிக ஆபத்தான வைரி வேறெதுவுமிருக்க முடியாது. உண்மையில் பொறாமையின் வடிவங்களும், அது கைக்கொள்ளும் உபாயங்களும் வியக்கத்தக்க வகையிற் பலதரப்பட்டவையாகும். அது தன்பாட்டிலேயே பெரும்பாலும் கருதுகோள் எதுவுமில்லாமலும், பயன் விரும்பாமலும் செயற்படும்.

பொறாமையின் பிடியிற் சிக்கியவர் தன்னைக்காட்டிலும் திறமையாக வேலைசெய்யும் எவரையும் ஒருகாலும் சகிக்கவேமாட்டார். இன்னொருவர் அதிகமாகப் படித்து வகுப்பேற்றம் பெறுவதைக் காணும் போது அவருக்குப் பொறாமைத் தீ பொங்கியெரியும். தன்னைக்காட்டிலும் வேறொருவர் புகழடைவதை அவர் ஒரு கணமேனும் சகிக்கார். வீடுகளில் வாழும் மக்கள் தம்முள் இணக்கத்துடனும், மகிழ்ச்சியாகவும், திருப்தியுடனும் தம்முள் முரண்பாடின்றி வாழ்வதை இவர் வெறுப்பார். அத்தகய விரும்பத்தகாத போக்குகளை வளர்க்கும் பொறாமையும் வெறுப்பும் மனிதனின் உள்ளத்தில் வளரும் சந்தர்ப்பத்தைக் காத்திருக்கும்.

ஆகவே பொறாமையாகவும், வெறுப்பாகவும் உருவெடுத்து முதிரும் எரிச்சலிலும் அச்சத்திலுமிருந்து விலகிக்கொள்வதற்கு ஒவ்வொருவரும் முழுமூச்சுடன் முயலல்வேண்டும். சிறப்பாக இளைஞர்கள் இவ்விரு

தந்திரப்பிசாசுகளையும் தவிர்த்து அவற்றை வெகுதூரத்திற்குத் துரத்தி விடுதல்வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கை பயனுள்ளதாகிறது.

பொறுமை உள்ளறிவினைச் சுருக்கிவிடும். மனிதனுக்குப் பரந்த உள்ளறிவே முக்கியமான உபகரணமாகும். ஆகவே ஒவ்வொருவரும் தனது உள்ளறிவினை அன்பின்மூலம் பெருக்க முற்படல் வேண்டும். உன்னைக்காட்டிலும் அதிக அறிவு உள்ளோரை, அல்லது அதிக விவேக முள்ளோரை, அதிக திறமையுள்ளோரை அல்லது நல்லபணிகளில் அதிக சுறுசுறுப்பு உள்ளோரை, அல்லது அதிக உள்ளறிவு படைத்தோரை நீ காணும்பொழுது மகிழ்ச்சியடை. நல்லதை உண்மையிலேயே கெட்ட தாகப் பழித்துரைக்குமாறு பொறுமை உன்னைத் தூண்டும். அதன் பிடியிலிருந்து நீ தப்பிக்கொள்ளவேண்டும். உனக்கு மேலான புகழை நீ ஆர்வத்துடன் பெற முயலவேண்டும். முற்றுக கற்று கல்வியில் அதிக சிறப்புத் தகுதிகளைப் பெறு. மிகக்கஷ்டமான கருமங்களில் உன்னை ஈடுபடுத்தி அதிக புகழையடை. அதுவே நீ உனக்கு ஆற்றும் கடமை யாகும்.

இக்கடமையினைச் செய்யாது மற்றையோர் அடையும் உயர்ச்சி யையோ அல்லது அவர்கள் அடைந்துள்ள புகழையோ இட்டு ஏன் வெறுப்படையவேண்டும்? தன்னைப்பற்றிப் புகழ்வது, மற்றையோரை இகழ்வது இவை இரண்டும் ஒரேமாதிரியாகக் கூடாதவையே. எவ் வளவுதூரம் நீ உன்னைப்பற்றிப் புழுகினுலும் அல்லது எவ்வளவிற்கு மற்றவர்களைப்பற்றிக் குறைவாகக் கூறினுலும் அது உனக்கு மதிப்பி னைத் தரமாட்டாது. மனிதனென்ற அந்தஸ்தில் இவையிரண்டும் கதை களாகவே தோன்றும்.

சில மனிதர்கள் மற்றவர்களைப் பழித்துரைப்பதில் ஈடுபடுவார் கள். அவர்கள் மற்றவர்களைப் பிரயோசனமற்றவர்களாகவும், மற்ற வர்களை அக்கறைகொள்வதற்கு அருகதையற்றவர்களெனவும் கருது வார்கள். மற்றவர்களிடம் காணப்படும் நற்பண்புகளைக்கூட இவர்கள் இழித்துரைப்பதோடு திரித்தும் கூறுவர். கல்வியறிவு இல்லாதோர் மாத்திரமன்றி, தம்மைப் பெரிய அறிவாளிகளாகப் பெருமை பேசு வோரும், உலோகாயதத்தில் தமக்குப் பற்றில்லையெனக் கூறித்திரிவோ ரும்கூட இத்தகைய செயல்களில் ஈடுபடுவதோடு இத்தகைய அற்பத் தனத்தில் இறும்பூதெய்தவும் செய்வர். அவர்களது அறிவாற்றல் அவர்களது உணர்ச்சிகளைத் தொடாது போயிற்று. அவற்றினுல் பண்

பாட்டுரீதியில் எதுவித தாக்கமுமேற்படவில்லை. பண்பாட்டினுல் உருவாக்கப்பட்டாலன்றி ஒரு மனிதன் எவ்வளவு அறிவுபெற்றவனுயினும் அவன் தன்னுள்ளே கெட்ட போக்கினையே கொண்டிருப்பான்.

ஒரு சிறு தீப்பொறியினுல் ஒரு வண்டி எரிபொருள் ஒரு கணப்பொழுதிற் சாம்பராகிவிடும். ஒருதுளி விஷம் ஒரு குடம் பாலினை வீணுக்கிவிடும். ஒரு அறிவாளி பலதுறைகளில் அறிவுபெற்றிருக்கலாம். அல்லது அதிகாரஞ்செலுத்தக்கூடிய உயர்ந்த பதவியில் இருக்கலாம். ஆனுல் ஒரு மிகச்சிறிதளவு பொருமை அவனது உள்ளத்திற் புகுந்துவிடின் அவனது வாழ்க்கை பாழாகிவிடும். ஆகவே நாம் வாழ்நாள் முழுவதும் விழிப்பாயிருத்தல்வேண்டும். பொருமையை எமது உள்ளத்துள்ளே புகவிடின் அது தன்னுடன் தனது கூட்டாளிகளான மடமை, இறுமாப்பு, கோபம், சுயநலம் ஆகியவற்றையும் கூட்டி வந்துவிடும். இக்கேடுகள் ஒருவரின் இரத்தத்தில் ஊறி ஈற்றில் அவரை ஒரு வெறுக்கத்தக்க இழிநிலைக்குத் தள்ளிவிடும்.

உண்மையில் நற்பெயரைத் தேடிக்கொள்வது கஷ்டம். ஆனுல் கெட்ட பெயரை நொடியில் சுலபமாகப் பெற்றுவிடலாம். ஒருவன் நற்பெயரைப் பெறுவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்குச் சிறந்த விதிமுறை அன்பை வளர்த்து மற்றவர்களிடமிருக்கும் நல்லவற்றை மாத்திரம் வசீகரித்தலாகும். பொருமையின் ஆட்சிக்குட்பட்டோர் தமது தன்னம்பிக்கையையும் இழந்துவிடுவர். தமது ஆற்றலிற் தமக்கு நம்பிக்கை இருப்பதாக அவர்கள் நடித்தாலும் உண்மையில் அவர்களுக்குத் தம்மீது நம்பிக்கையிருக்காது. தன்னம்பிக்கை ஒருவருக்கிருப்பின் அங்கு பொருமைக்கே இடமிருக்க மாட்டாது.

பொருமை சுயநலத்தினின்றும் பிறப்பது. ஆகவே ஒவ்வொருவரும் அக்கெட்ட பண்பிற்கு பிரியாவிடை (விலக்குதல்) அளித்தல் வேண்டும். உண்மையில் கல்வியறிவு, செல்வம், அதிகாரமளிக்கும் பதவி ஆகியனவெல்லாம் நீர்க்குமிழிபோலும், ஊர்ந்துசெல்லும் முகில்களைப்போன்றும் நிலையற்றன. அவைகளைப்பற்றிப் பெருமையடைதலும், அவைமூலம் ஒருவர் மதிப்பையும், புகழையும் எதிர்பார்ப்பதும் உயிருள்ளவரை உயிரற்றவராகவே அவரைக் காட்டும். பொருமைக்கும், ஆணவத்திற்கும் விடைகொடுத்து அனுப்புவதும் அதேநேரத்தில் சமாதானத்திற்கும், அன்பிற்கும் ஆதரவளிப்பதுவும் உங்கள் கடமையாகும். இக்கருமத்தைச் செய்துமுடிப்பதற்கு நீங்கள் பலமற்றவர்கள்

என்னும் எண்ணத்தை ஒழித்துவிடுங்கள். ஒற்றுமை மனப்பாங்கினை உங்களிடம் பதித்துக்கொள்ளுங்கள். இன்று பாரதத்தின் வருங்காலக் குடிமக்களாகிய மாணவர்களினால் இப்பண்பு கவனமாக வளர்க்கப்பட வேண்டியுள்ளது. அவ்வாறு அவர்கள் செய்யாவிடின் நாடு அழிய வேண்டியதுதான்.

காரணமற்ற உணர்ச்சிப் பிரவாகங்களுக்கோ அல்லது அடிப்படையற்ற அதிகாரத்தைக் காட்டத் தூண்டப்படும் நிலைக்கோ அல்லது அசாத்திய துணிவினைக்காட்ட முனையும் ஆசைக்கோ அவர்கள் அடிமைகளாகிவிடக்கூடாது. சகமனிதர்களுடன் எளிய இயற்கைபூர்வமான வாழ்க்கை வாழவும், சம அந்தஸ்துடன்கூடிய சூழலில் மகிழ்ச்சியுடனிருக்கவும் அவர்கள் பழகிக்கொள்ளுதல்வேண்டும். சாதிமத அடிப்படையிலோ, வயது அடிப்படையிலோ தம்மை மற்றவர்களிடம் இருந்து பிரிக்கும் தப்பெண்ணத்தை அவர்கள் ஒதுக்கித்தள்ளல் வேண்டும். சமநிலையுணர்வினை வளர்க்குமுகமாக வாழ்வின் இன்ப துன்பங்களை அவர்கள் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும். அதன்மூலம் அவர்கள் சமாதானம், வளம், பாதுகாப்பு ஆகியவற்றினை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

# 11—1. சாயி சரவணமுத்து மக்களுக்கு விடுத்த விண்ணப்பம் ஒன்றின் தமிழாக்கம்

அம்மா, அப்பா, மகன், மகள், மச்சான், மச்சாள்...... அப்படிப் பலவித உறவு சொல்லி நீங்கள் கூறிக்கொள்கிறீர்கள். உண்மையில் அம்மா யார்? அப்பா யார்? மகன் யார்? இந்த உறவினர் எல்லோரும் யார்? எதனைப் பார்த்து நீங்கள் இப்படி அழைக்கின்றீர்கள்? நீங்கள் கருதுவது ஆத்மனை அல்ல, உடலையே அப்படி அழைக்கின்றீர்கள். ஏனென்றால், ஆத்மன் ஒருவனே எல்லோரது உடலிலும் புகுந்திருக்கிறான். ஒரு ஆத்மாவே பல உடலிலும் நிலைகொண்டுள்ளது. அந்த உண்மையைப் புரிந்துகொண்டால், நீங்கள் உறவுமுறை கொண்டாடமாட்டீர்கள். எல்லோரையும் ஒருவராகவே பாவனை செய்வீர்கள். உண்மையான அன்பு அப்பொழுதுதான் வெளிப்படுகின்றது. அந்த நிலையில் போட்டி, பொறாமை, கோபம், வெறுப்பு, விருப்பு போன்ற இயல்புகள் மறைகின்றன.

இனி, நாம் காணும் உலகம் உண்மையானதா? இல்லை. மாற்றம் அடையும் எதுவும் உண்மையானதல்ல. எந்தப் பஞ்ச பூதங்களால் பிரபஞ்சம் ஆக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பூதங்களால்தான் உடம்புகளும் ஆக்கப்பட்டிருக்கிறது.

இனி, உங்களது தனித்துவ ஆத்மனும் உண்மையல்லன். ஏனென்றால், அவனும் விடுதலையின்போது பரமாத்மனோடு ஒன்றித்து விடுகிறான். குடம் உடையும்போது, குடத்தினுள் இருந்த வெளி, குடத்திற்கு வெளியே இருந்த வெளியோடு ஒன்றித்துவிடுவதுபோல், உங்கள் தனித்துவ ஆத்மாவும் நிரந்தரமானதல்ல.

உனது உடலும் நிரந்தரமல்ல. உலகமும் நிரந்தரமல்ல. உனது ஆத்மாவும் நிரந்தரமல்ல. அப்படியாயின் நீ யார்? நீ சத்து. சித்து. ஆனந்தம். நீ பரப்பிரம்மம்.

இந்த உண்மைகளை அறியாது, நீங்கள் உடலையும், உறவினர்களையும், உலகினையும், ஆத்மனையும் நம்பி ஏமாறுகிறீர்கள். நீ சச்சிதானந்தமாகிய பரப்பிரம்மம் என்பதனை விளங்கி சாந்தியோடு வாழ்வாயாக.

— சாயி சரவணமுத்து

# 11—2. பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா

— நூலாசிரியர் —

**ப**கவான் ஒருமுறை கிருஷ்ண ஜயந்தியின்போது, தான் கிருஷ்ண அவதாரத்தில் அணிந்திருந்த மணிமாலையைச் சிருஷ்டித்துக் காட்டியும், கிருஷ்ணர் தலைப்பாகை கட்டும் முறையையும் தமது தலையில் சால்வை யொன்றால் கட்டி, மயில் இறகு செருகித் தோற்றமளித்துக் காட்டியும் தான் கிருஷ்ணரே என்பதை நிரூபித்தார். ஒருமுறை அமெரிக்கப் பக்தன் ஹிஸ்லொப், பாபாவோடு உரையாடும்போது, ''கிருஷ்ண உடலில் வந்தபிறகு, கடவுள் சத்யசாயி உடம்பில்தானே வந்திருக்கி றார். இது சரியா?'' என்று கேட்க, ''ஏன், சீரடி சாயியின் உடலை மறந்துவிட்டாயா?'' என்று பாபா கூறினார். இந்த உரையாடலில் இருந்து நாம் அறியக்கிடப்பது துவபரா யுகத்தின் முடிவில் கடவுள் கிருஷ்ண உடலை எடுத்தபிறகு, அந்த அளவு வல்லமையோடு சீரடி சாயியின் உடலிலேதான் வந்திருக்கிறார் என்பது. கலியுக அவதாரங் களாக நாம் கொள்ளும் ஏனைய அவதாரங்கள் எல்லாம் (புத்தர், யேசு, ராமகிருஷ்ணர் போன்றவை) முழுஅளவிலும் சக்தி தாங்கி வந்ததாகக் கொள்ளமுடியாமல் இருக்கிறது. இன்னும் ஒருமுறை பாபா பேசும் போது, கிருஷ்ணரிடம் யோக சக்தியும் மகா சக்தியும் இருந்தன என் றும் சத்ய சாயியிடம் யோகசக்தி, மகாசக்தி, மாயாசக்தி ஆகிய மூன் றும் உள்ளதாகக் கூறினார். கிருஷ்ணரிலும் விசேடமான சக்தியொன் றைத் தாங்கியே வந்திருக்கிறார். மாயா சக்தியால்தான் நாம் இவரை மனிதன் என்று எண்ணும்படியாக இவர் நடக்கக்கூடிய ஆற்றல் உள் ளதுபோலும். மனிதனோடு மனிதனாக நடவாமல்விட்டால், நாம் அவரை நெருங்கமாட்டோம். இறைவனை உணரமாட்டோம்.

எந்த மொழியையும் பேசும் ஆற்றலாலும், எவ்விடத்திலும் ஒரே நேரத்தில் பிரசன்னமாகும் ஆற்றலாலும், எவ்விடத்திலும் உள்ள தமது (அல்லது கடவுள்) படங்களில் விரும்பிய பொருளைத் தோற்று விக்கும் ஆற்றலாலும் அத்வைதம் என்ற முடிவான தத்துவத்தை எந்த நெறி நிற்போரும் ஒத்துக்கொள்ளக்கூடிய முறையில் மக்களுக்குப் புரிய வைக்கும் ஆற்றலாலும், எத்தனைபேர் எத்தனையோ இடங்களில் நின்று மனதினால் இவரை நினைக்க, அவர் அறிகுறி காட்டும் ஆற்றலாலும் இன்னும் எத்தனையோவிதமான விசேட ஆற்றல்களாலும் சாயி பாபா தன்னிகரற்ற தனிப்பெருங் கடவுளாவார். கிருஷ்ணர் கோவர்த்தன

கிரியை உயர்த்தினுர். தான் முழு மலைத்தொடரொன்றை உயர்த்த இருப்பதாகவும், மக்களுக்குத் தரிசனம் கொடுக்க, வானவூர்தியாலும் உதவமுடியாதபடி வ ருமென்பதால் தான் ஆகாயத்தில் பறந்து தரிசனம் கொடுக்க இருப்பதாகவும் கூறும் ப க வா ன் சிவனே. சிவசக்தியே ஆவார். அவர் 96 வருடமிருந்து மறைந்து பின்பு கர்நாடக மாநிலத்தில் பிரேமசாயி பாபா என்ற பெயரோடு முழுவதும் சக்தி அவதாரமாக விளங்கப்போவதாகக் கூறியுள்ள அவர், பிரேமசாயியின் உருவத்தை இப்பொழுதே எமக்குக் காட்டியுள்ளார். இந்த நூலின் முகப்பு அட்டையில் நீங்கள் அந்த உருவையும் காண்கின்றீர்கள். எத்தனை அற்புதம்? எத்தனை செயல்கள்?

உடலால் செய்யப்படும் ஐவகைக் குற்றங்களையும் விலக்க முயற்சிக்கும்படி சாயி கூறுகிறுர். கொலை, விபச்சாரம், களவு, மது, மாமிசம் புசித்தல் என்பனவே அவையாகும். இந்தரீதியில் தாவர உணவு விரும்பத்தக்கது. உணவைத் தாவரமாக்கிவிட்டு மற்றைய நான்கையும் தொடர்ந்து செய்வதால் புண்ணியமேது? ஐந்தையும் ஒத்து நீக்க வேண்டும். "Try to Prevent the Five Sins" என்று அவர் கூறும் போது, நீக்க முயலுங்கள் என்பது அர்த்தம். மாமிச உணவை நீக்க முடியாத ஒரு நழ்நிலை அல்லது மாமிச உணவை நீக்குதலால், பெரிய தவறென்றை இழைக்கவேண்டி இருக்கின்றது என்ற ஒரு சூழ்நிலை இருக்குமாயின் மாமிச உணவைத் தொடர்வது பெரிய பாவமாகாது. எனினும் ஞானியொருவன் தானே தானுகி நிற்பதால் அவன் ஆற்றும் எந்தக் காரியமும் அவனைப் பந்தப்படுத்தாது. நாம் உணவில்மட்டும் சாத்வீக உணவைத் தெரிந்துண்பதால் பயன் அதிகம் இல்லை. பஞ்சப் புலன்களாலும் நுகரப்படுவனவும் சாத்வீகமானதாக அமையவேண்டும் என்பது பகவான் கருத்து.

எல்லாம்வல்ல சாயியின் அருள் எம் எல்லோருக்கும் கிடைக்க மத வெறி நீங்கவேண்டும். தெய்வம் ஒன்று. அதுதான் பாபா. அதுதான் யேசு, முகமது, புத்தர், ஏன் எம்முள்ளே இருக்கும் ஆத்மாவும் அதுவே.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

# 11—3. பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா

— நூலாசிரியர் —

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அருளுரைகளிலிருந்து சில முத்துக்கள் என்ற பெயரில் ஞானசேகரம் ஐயா தொகுத்தெழுதிய நூலில் இருந்து, பகவான், தமது 60ஆவது பிறந்த நாளிலிருந்து அத்வைதத்தை உபதேசித்து வருவதாக நமக்கு விளங்குகின்றது. "என்னுடைய 60ஆவது பிறந்த நாளிலிருந்து அத்வைதத்தையே உபதேசிக்க முனைந்து இருக்கிறேன். கர்ம, உபாசனை இரண்டும் 60 ஆண்டு வரை உபதேசித்ததாயிற்று. கர்மமே ஆரம்பப் பள்ளிப் படிப்புப் போன்றது. ஞானமே கல்லூரிப் படிப்பு. கல்லூரிப் படிப்பில் அடி எடுத்து வைக்கவேண்டிய நீங்கள் இன்னமும் ஆரம்பப்பள்ளி நிலையிலேயே இருந்தால் என்ன பயன்? ஆன்மீக சாதனையில் கர்ம, உபாசனைக் கட்டங்களைத் தாண்டி ''அத்வைத ஞானம்" எனும் கட்டத்திற்கு வர வேண்டும். இன்றுமுதல் நீங்கள் இந்த '' அத்வைத மதம் " பற்றிக் கற்றுக்கொள்வதையே இலட்சியமாகக்கொள்ளவேண்டும்''—இது பகவானுடைய கூற்று. பலருக்கு அத்வைத மதம் என்பது என்னவென்று தெரியாமல் இருக்கிறது. விசேடமாக யாழ்ப்பாணத்தில் சைவ சித்தாந்தம் என்று சொல்லப்படும் துவைத மார்க்கத்தில் பண்டுதொட்டு ஈடுபட்டு வந்த சமயவாதிகளுக்கு அத்வைதம் என்ற சொல்லே பிடிக்காத அளவுக்கு வந்துவிட்டது. பாதநாராயணர் (வியாசர்) எழுதிய பிரம்ம சூத்திரம் என்ற நூலில் '' ஏகம் ஏவ அத்துவிதீயம் பிரம்மம்'' என்ற வேதக் கூற்று, வருகிறது. இதற்கு ஆதிசங்கரர் கொடுத்த விளக்கங்களை அத்வைதம் என்றும், இதற்கு இராமானுஜர் கொடுத்த விளக்கங்களை விசிட்டா அத்வைதம் என்றும் மத்துவர் (மற்றும் மெய்கண்டார்) கொடுத்த விளக்கங்களை துவைதம் என்றும் சொல்லுகிறோம். மூன்று ஆசாரியர்களும் மூன்று விதமாக விளக்கம் கொடுத்தார்களே ஒழிய மூன்று மார்க்கமும் முடிவுகட்டுவது, அதாவது அவற்றில் இருந்து நாம் அனுமானிப்பது, ஒரே விடயத்தைத்தான். அது என்னவென்றால் ஒரே ஒரு சத்துப்பொருள்தான் இவ்வாறு உலகங்களாகவும் உயிர்களாகவும் காட்சி அளிப்பது. இந்தச் சத்தைத் தவிர இரண்டாவது பொருள் எதுவுமே இல்லை. உயிர்களாகவும் உலகங்களாகவும் கடவுளாகவும் நாம் நமது சிற்றறிவில் பிரித்துக் காண்பது பேரறிவில் ஒன்றேதான். அதனை வேதங்கள் பரப்பிரம்மம் என்று அழைக்கின்றன. இந்த இயற்கையில் இரண்டு சத்துப் பொருள் இருக்குமானால், யார் பெரியவர்

என்ற பிரச்சனை அவர்களுக்கு இடையே ஏற்பட்டுவிடும். அப்படியான நிலையில் கடவுள் என்ற பதத்தையே பாவிக்கமுடியாது போய்விடும். விஞ்ஞானம்கூடச் சடப்பொருள் ஆக்கப்படவும் முடியாது, அழிக்கப் படவும் முடியாது என்று முடிவுகொண்டுள்ளது. அதாவது புதிதாகச் சடப்பொருளை உருவாக்கமுடியாது. இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள சடப்பொருளைத்தான் நாம் சக்தியாக மாற்றலாம். அல்லது உள்ள சக்தியைத்தான் சடப்பொருளாக மாற்றலாம். அதாவது சக்திக்காப்பு விதி பேணப்படுகிறது. அந்தச் சக்திதான் பரப்பிரம்ம சக்தி.

சுருக்கமாகச் சொன்னால் 'நீயும் பரப்பிரம்மமே', என்பது அத்வைதம். 'நீ பரப்பிரம்மத்தின் ஒரு கூறு' என்பது விசிட்டா அத்வைதம். 'நீ வேறு பரப்பிரம்மம் வேறு' என்பது துவைதம். ஆன்மீக பாதையில் ஆரம்பப் படியில் உள்ளவர்கள் துவைத பாவனையில் நிற்பார்கள். முன்னேற முன்னேற விசிட்டா அத்வைத பாவனை வரும். மேலும் முன்னேற அத்வைத பாவனை வரும். ஒருமுறை ஸ்ரீராமர், அனுமனைப் பார்த்து, ''நீ என்னை என்ன பாவனையில் வணங்குகின்றாய்?'' என்று கேட்டாராம். அதற்கு, நான் இந்த உடல் என்று என்னை எண்ணுகின்றபோது 'நீ ஆண்டான் நான் அடிமை' என்று பாவனை செய்கின்றேன். நான் ஒரு ஜீவன் என்று என்னை எண்ணுகின்றபோது 'நீ முழுமை, நான் அதில் ஒரு பகுதி' என்று பாவனை செய்கின்றேன். நான் ஒரு ஆத்மா என்று என்னை எண்ணுகின்றபோது, 'நீதான் நான், நான்தான் நீ' என்று விளங்கிக்கொள்ளுகின்றேன்' என்று அனுமன் கூறினனும். முதற்பாவனை துவைதம், அடுத்த பாவனை விசிட்டா அத்வைதம், இறுதி அத்வைதம். மேலும் பகவான் கூற்றுப்படி, யேசுபிரான் முதலில் ''நான் கடவுளின் தூதுவன்'' என்றும், பின்பு ''நான் கடவுளின் குமாரன்'' என்றும், ஈற்றில் "நானும் எனது பிதாவும் ஒருவரே'' என்றும் குறிப்பிட்டார். இவை முறையே துவைத, விசிட்டா அத்வைத, அத்வைத நிலைகளைக் காட்டுகின்றன. ராமகிருஷ்ண பரமகம்சரும் இவை மூன்றும் மூன்று படிகளே என்று சொன்னதன் காரணம் இதுவே. இருப்பினும் பகவான் சாயி பாபா ஆரம்பத்தில் இருந்து 60 வயதுவரை, விசிட்டா அத்வைத அடிப்படையிலேதான் கூடுதலாக விளக்கம் தந்தார். துவைதத்தையோ, அத்வைதத்தையோ அதிகம் பின்பற்றுது இருந்தார். ஆனல் 60ஆவது வயதில் இருந்து அத்வைத மதத்தையே போதித்து வருகிறுர். அதாவது உண்மையான மார்க்கத்தைக் கூறுவதற்குரிய தயார் நிலையை ஆக்கிவிட்டு உண்மையைக் கூறலானுர்.

கர்ம மார்க்கமானது, தன்னைவிட இறைவன் வேறானவன் என்ற நினைப்பில், தெரிந்து எடுத்த நல்ல காரியங்களைச் செய்துவருவது. இது மனதைத் தூய்மைப்படுத்தமட்டுமே உதவும். உபாசனையானது, சகுணக் கடவுளை வழிபடுதல். இது முதிர்ச்சியில் ஒருவனைப் பிரம்மலோகத்திற்கு அனுப்பி வைக்கும். பின்பு அங்கிருந்து பிரம்ம மனனம்செய்து தான், உலக அழிவு காலங்களில் பரப்பிரம்மத்தோடு ஒன்ற முடியும். அதாவது காரண சரீரத்தையும் நீக்கிவிடுதல் எனலாம். வேதத்தின் கர்மகாண்டம், உபாசனை காண்டம் என்பனவற்றைப் போதித்துவிட்ட பகவான், ஞான காண்டப்பகுதியில் அடங்கும் அத்வைத மார்க்கத்தையே பரப்ப முயலுகின்றார். சிவசக்தி அவதாரரான பகவான் அத்வைதம் பேசினால் அதற்குச் சக்தியுண்டு. அது வரட்டு வேதாந்தமாகாது. சங்கராச்சாரியார் அத்வைதத்தைப் பரப்ப முயற்சி எடுத்தார். அதேசமயம் பக்தியும் அவசியம் என்று பக்திமார்க்க நூல்களும் எழுதினார். ஆனால், பக்தியை வளர்க்கும் முயற்சியில் சங்கரர் வெற்றி காணவில்லை என்று பகவான் கூறுகிறார். நிட்சயமாக பகவான் சாயி பாபா பக்தியையும் ஞானத்தையும் ஒரே பிடியில் ஓங்க வைப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. தூய பக்தியும் தூய ஞானமும் ஒன்றே என்றார், பரமகம்சர். அத்வைத நிலைப்பாட்டிலேதான் மெய்யான கர்மயோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்பனவற்றிற்கு ஒரே உட்பொருளைக் காணலாம். அத்வைதம் ஒன்றுதான் இங்கு, இந்த உடலிலே முக்தியைத் தரவல்லது. நீ யார்? நீ யார்? என்று நாம் ஆட்களைப் பார்த்துக் கேட்டால், நான் மாணவன், நான் பிராமணன், நான் வைத்தியன், நான் சந்நியாசி, நான் ஆங்கிலேயன் என்று பலவிதமான விடைகளைக் கேட்கலாம். இந்தக் கூற்றுக்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக இருப்பது 'நான்' என்பது. மாறுபடுவது, மாணவன், பிராமணன், வைத்தியன் போன்றவை. மாறுபடாத 'நான்' என்பதுதான் ஆத்மா. எல்லோருள்ளும் இருப்பது ஒரே ஆத்மாதான். அதனைத்தான் பரப்பிரம்மம் என்று கூறுகின்றோம். மாணவன், பிராமணன், வைத்தியன் என்றது ஸ்தூல சூக்கும சரீரங்களையே. சரீரங்களுக்கு மாறுதல் உண்டு. சரீரி மாறாதது. சரீரிதான் ஆத்மா. அதுதான் பரப்பிரம்மம். மாறுதல் அடைவன எல்லாம் பிரகிருதி. அதாவது இயற்கை. இயற்கையும் பரப்பிரம்மத்தின் ஒரு தோற்றப்பாடு என்பதனையும் நாம் மறக்கலாகாது.

சமயச் சடங்குகள் எல்லாவற்றையும் அத்வைத விளக்கம் மூலமாக அர்த்தமுள்ளவையாக மாற்றவேண்டும். உதாரணமாக, அவதாரங்களை (ராமர், கிருஷ்ணர்) நவமியையும் அட்டமியையும் விரும்பி பிறப்

பெடுக்க, நாம் அற்ப காரியங்களுக்கும் நாட் பார்த்து அட்டமி நவமி களை விலக்குகின்றோம். எல்லா வருடங்களும் எல்லா மாதங்களும் எல்லா நாட்களும் எல்லா நேரங்களும் புதிதும் புனிதமும் நிறைந்தவையே. எல்லாவற்றிற்கும் ஆதாரம் பரப்பிரம்மமாக இருக்கையில், நன்று எது? தீது எது?

ஜபங்கள், தியானங்கள் போன்ற உபாசனை வழிகள், அத்வைத பாவனைக்குச் சென்றவர்களுக்கு அவசியமில்லை. அவர்கள் எவ்வுயிரையும் தம்முயிராகப் பார்த்து, எல்லோரும் விடுதலை அடையவேண்டும் என்ற பெருவிருப்போடு கருமமாற்றுவார்கள். அதனை நோக்கிப் பரந்த அளவில் செய்யப்படும் சமுதாய சேவையே இன்று நாம் மேற்கொள்ளவேண்டியது என்பது பகவான் கருத்தாகும். மெய்யான சாதனை அத்வைத பாவனையில் ஆற்றப்படும் சேவையே என்பது பகவானின் உட்கருத்து.

*முற்றிற்று. ஓம் ஜெய் சாயி ராம்.*

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம். 1989



சாயி சரவணமுத்து

SRI MOHAN

